**இலங்கை வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகள் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | நிதிக்கூற்று மூடல் செயன்முறை (FSCP) தொடர்பாக பின்வரும் முக்கிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | FSCP ஐ பொறுத்தவரை, சபை அங்கீகரித்த நடைமுறை கையேடு வங்கியிடம் காணப்படவில்லை. | கருத்துரை குறிப்பிடப்பட்டுள்ளது. FSCP நடைமுறைக் கையேடு தயாரிக்கப்பட்டு, உரிய அங்கீகாரங்களைப் பெற்ற பின்னர் ஆண்டு இறுதிக்குள் முன்வைக்கப்படும். | FSCP நடைமுறை கையேட்டை முன்வைக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களை (SLFRS) ஏற்றுக்கொண்டதன் காரணமாக எழும் கணிப்பீடு/மதிப்பீடு தொடர்பான தீர்ப்புக்கள்/ எடுகோள்களின் முறையான மற்றும் விரிவான ஆவணங்கள் இல்லாதமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை குறிப்பிடப்பட்டுள்ளது. FSCP நடைமுறைக் கையேடு தயாரிக்கப்பட்டு, உரிய அங்கீகாரங்களைப் பெற்ற பின்னர் ஆண்டு இறுதிக்குள் முன்வைக்கப்படும். | SLFRS ஐ ஏற்றுக்கொள்வது தொடர்பான தீர்ப்புக்கள்/ எடுகோள்களின் முறையான மற்றும் விரிவான ஆவணங்கள் இருக்க வேண்டும். |
| (இ) | வங்கியானது ஒரு சிக்கலான, துண்டு துண்டான GL முறைமையை கொண்டுள்ளது, நான்கு தனித்தனி (DBU, FCBU, மாலைதீவுகள் மற்றும் ஏனைய வெளிநாட்டுக் கிளைகள்) GLs எக்செல் மூலம் கைமுறையாக ஒருங்கிணைக்கப்படுகின்றன. இறுதிப் புள்ளிவிபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பேரேட்டு மீதிகளுக்கு அதிக எண்ணிக்கையிலான கைமுறை சீராக்கங்கள் செய்யப்படுகின்றன. | நிதி அறிக்கையிடலின் தன்னியக்கமாக்கல் செயன்முன்னேற்றத்தில் உள்ளதுடன் சிக்கலான தன்மை மற்றும் அதிக அளவு தரவு உள்ளதால், தன்னியக்கமாக்கல் பணிக்கு கணிசமான கால அவகாசம் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு சிறந்த முயற்சி மேற்கொள்ளப்படும், பின்னர் கையேடு செயன்முறை மீதான கட்டுப்பாடுகள் மேலும் பலப்படுத்தப்படும். | நிதிக்கூற்று தயாரிப்பு செயன்முறை தானியக்கமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஐந்தொகை கணக்கிணக்கம் மற்றும் அனைத்து மீதிகளுக்கான ஆதார செயன்முறைக்கான | கருத்துரை குறிப்பிடப்பட்டுள்ளது. FSCP நடைமுறைக் கையேடு தயாரிக்கப்பட்டு, உரிய | ஐந்தொகை கணக்கிணக்கம் மற்றும் அனைத்து மீதிகளுக்கான ஆதார |

| | | | |
|---|---|---|---|
| | ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை வங்கியிடம் காணப்படவில்லை. சில மீதிகளிற்கான கணக்கிணக்க செயன்முறை இருந்த போதிலும் அவை சரியான நிதிக்கூற்று வரிசை உருப்படியின் (FSLI) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக, எண் மீதிகளின் கணக்கிணக்கத்தில் அதிக கவனம் செலுத்துகிறது. | அங்கீகாரங்களைப் பெற்ற பின்னர் ஆண்டு இறுதிக்குள் முன்வைக்கப்படும். | செயன்முறைக்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கையை வைத்திருக்க வேண்டும். |
| (உ) | **செயன்முறை தானியக்கமாக்கல் இல்லாமை** தற்போதுள்ள முறைமைகளில் தானியக்கமாக்கல் இல்லாததால், நிதி அறிக்கையிடல் குழு, கைமுறையிலான செயன்முறைகளைச் செய்வதன் மூலம் கணிசமான நேரத்தை செலவிடுகிறது. | நிதி அறிக்கையிடலின் தானியக்கமாக்கல் செயன்முன்னேற்றத்தில் உள்ளது மேலும் சிக்கலான தன்மை மற்றும் அதிக அளவு தரவு உள்ளதால், தானியக்கமாக்கல் பணிக்கு கணிசமான காலம் எடுக்கும். இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்திசெய்வதற்கு சிறந்த முயற்சி மேற்கொள்ளப்படும், பின்னர் கைமுறையிலான செயன்முறை மீதான கட்டுப்பாடுகள் மேலும் பலப்படுத்தப்படும். | நிதிக்கூற்று தயாரித்தல் செயல்முறை தானியக்கமாக்கப்பட வேண்டும். |
| (ஊ) | **GL கணக்குகளின் உரிமைத்துவத்திற்கான ஆவணங்கள் கிடைக்காமை** வங்கியிடம் GL கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்ட உரிமையாளர்களின் பட்டியல் காணப்படவில்லை. அந்தந்த குறிப்புக்களின் பாதுகாவலர்களை (தயாரிப்பவர் மற்றும் அங்கீகாரம் அளிப்பவர்) முகாமைத்துவம் அடையாளம் காண்பது இன்றியமையாதது ஆகும். | கருத்துரை குறிப்பிடப்பட்டுள்ளது. GL உரிமைத்துவக் கொள்கையைத் தயாரித்தல் செயன்முன்னேற்றத்தில் உள்ளது. 2024.12.31 இற்குள் FSCP கையேட்டின் அறிமுகத்துடன் தொடர்புடைய குறிப்புக்களின் பாதுகாவலர் சேர்க்கப்படுவார். | GL உரிமைத்துவக் கொள்கை முன்வைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

**கணக்காய்வு அவதானிப்பு**

(அ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டி துணைக்கம்பனி உரிமைக்கோரல் கணக்குகளில் நீண்டகால நிலுவை மீதிகள் தீர்க்கப்படாமல் காணப்பட்டன.

| தயாரிப்பு வகை | GL குறியீடு | 2023.12.31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள வட்டி (ரூபா. மில்) | பெறவேண்டிய வட்டியின் வயதுப் பகுப்பாய்வு (ரூபா. மில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 03 மாதங்களிற்கு கீழ் | 03 - 06 மாதங்களிற்கு இடைப்பட்டது | 06 - 12 மாதங்களிற்கு இடைப்பட்டது | 01 - 02 ஆண்டுகளிற்கு இடைப்பட்டது | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்டது |
| **வைப்பு** | | | | | | | |
| விசேட வைப்பு கணக்குகளுக்கு பெறப்பட வேண்டிய ஊக்குவிப்பு வட்டி | 11310600 | 275.37 | 59.98 | 71.56 | 143.83 | - | - |
| ஊக்குவிப்பு மீள்நிரப்பல் பெறவேண்டிய சிரேஷ்ட பிரஜை | 11310566 | 24,349.44 | 0.83 | 224.62 | 2,053.38 | 15,048.97 | 7,021.65 |
| **கடன்கள்** | | | | | | | |
| எண்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா | 51501021 | 589.06 | 105.48 | 76.76 | 19.69 | 386.79 | 0.33 |
| தியவர திரிய | 51501018 | 6.68 | 2.82 | 2.42 | 1.36 | - | - |
| வணிக அளவிலான பால்வள அபிவிருத்தி கடன் திட்டம் | 51501018 | மத்திய வங்கியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்* | | | | 1,473.68* | |
| வட்டியில்லா கல்விக் கடன் | 51501018 | 276.98 | 276.98 | - | - | - | - |
| STaRR செயற்திட்டம் | 51501018 | 0.27 | - | - | - | - | - |
| NCRCS | 51501006 | 14.12 | 3.70 | 10.42 | - | - | - |

* 2023.12.31 இல் உள்ளவாறான நிலுவை தொகை

**முகாமைத்துவ கருத்துரை**

**வைப்பு:**

ஊக்குவிப்பு மீள்நிரப்பல் பெறவேண்டிய சிரேஷ்ட பிரஜை

CBSL இடமிருந்து ஊக்குவிப்பு வட்டியை வங்கி கோருகிறது, இது நிதி அமைச்சால் வங்கிக்கு குறிப்பிட்ட கால அடிப்படையில் வழங்கப்படுகிறது.

விசேட வைப்புக்காக பெற வேண்டிய ஊக்குவிப்பு வட்டி

நிதி அமைச்சிடமிருந்து மீள்நிரப்பு செய்யப்படும் ஊக்குவிப்புத் தொகையை நாங்கள் ஏற்கனவே கோரியுள்ளோம், இது குறிப்பிட்ட கால அடிப்படையில் வங்கிக்கு வழங்கப்படுகிறது.

**கடன்கள்:**

எண்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா கடன் திட்டம்

ஆரம்பத்தில் கொடுப்பனவு உறுதிப்படுத்தல் நிதி அமைச்சால் செய்யப்பட்டது, அதேநேரம் அவர்களின் முறைமையுடன் குறுக்கு சோதனை செய்யப்பட்டது தற்போது (2022 ஒக்தோபரிற்குப் பின்னர்), உள்ளக கணக்காய்வு உறுதிப்படுத்தலைப் பெற்ற பின்னர்

**பரிந்துரை**

நீண்டகாலமாக நிலுவையாக உள்ள வட்டி துணைக்கம்பனி உரிமைக்கோரல் கணக்குகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அனைத்து உரிமைகோரல்களும் சமர்ப்பிக்கப்படுகின்றன. 2022 ஒக்தோபரிற்கு முன்னர் தொடர்புடைய மேற்படி வட்டி மானியக் கொடுப்பனவுகளை முறைப்படுத்துவது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகிறது.

**தியவர திரிய**

இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் NPA கடன்கள் தொடர்பான வட்டி மானியத்தின் கொடுப்பனவு தொடர்பாக தீர்க்கப்படாத ஒரு விடயம் உள்ளது. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சுடன் பல தடவைகள் கலந்துரையாடல் இடம்பெற்றது. ஆனால் இன்றைய நிலவரப்படி, அந்த அமைச்சு இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்கியிருக்கவில்லை.

**வணிக அளவிலான பால்வள அபிவிருத்தி கடன் திட்டம்**

இந்த ஆண்டுக்குள் இந்த விடயத்தை விரைவில் தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

**வட்டியில்லா கல்விக் கடன்**

வட்டி மானிய கோரிக்கைகள் முறைப்படுத்தப்பட்டு, 2024 யூலை வரை மானிய கொடுப்பனவுகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| | STaRR செயற்திட்டம்<br>வட்டி மானியம் முறைப்படுத்தப்பட்டதுடன் 2024 இன் 1வது காலாண்டு வரை மானிய கொடுப்பனவுகள் பெறப்பட்டன.<br>NCRCS<br>வட்டி மானியம் முறைப்படுத்தப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் பாதி வரை மானியக் கொடுப்பனவுகள் பெறப்பட்டன. | |
| (ஆ) மாலைதீவு கிளையில் ”தொங்கல் க/கு கடன்பட்டோர் USD - க/கு இல.11310021” இல் ஐ.அ.டொலர் 250,000 நீண்டகாலமாக அறவிடப்படாமல் உள்ளது, இது 2018 இல் இடம்பெற்ற மோசடி கொடுக்கல்வாங்கலினால் ஆகும், மேலும் இது தொடர்பான வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. | கருத்துரை குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பதவியணி உறுப்பினர் சம்பந்தப்பட்ட ஒரு மோசடிகொடுக்கல்வாங்கலின் காரணமாக ஐ.அ.டொலர் 250,000 தொகை மீதமுள்ளது. இந்த விடயம் தொடர்பான சட்ட வழக்கு இன்னும் நடைபெற்று வருகிறது. BOC, மாலைதீவு காப்புறுதி கோரிக்கையுடன் தொடர்புடைய ஐ.அ.டொலர் 45,000 ஐ அறவிட்டிருந்தது. | அறவீட்டு செயன்முறையை பின்பற்றப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக செலுத்த வேண்டிய நிலுவை மீதிகள் பின்வரும் கணக்குகளில் உள்ளதுடன் அத்தகைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மொத்த நிலுவை மீதிகள் குறைவடைகின்ற போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள நீண்டகால நிலுவை மீதிகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. விபரங்கள் பின்வருமாறுள்ளன. | **சேகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கட்டண பெறுகை உறுதிச்சீட்டுக்கள்**<br>இந்த GL மீதி 2024.09.30 இல் உள்ளவாறு | ஏனைய பொறுப்புக் கணக்குகளின் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கு |

<table>
<tr><th>கணக்கின் பெயர்</th><th>GL இல.</th><th>தொகை (ரூபா. மில்)</th><th>வயதுப் பகுப்பாய்வு</th><th></th><th></th></tr>
<tr><td>சேகரிக்கப்பட்ட கட்டண பெறுகை உறுதிச்சீட்டுக்கள்</td><td>22310082</td><td>126.94</td><td>
<table>
<tr><th>மீதிகள்</th><th>2023.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா. மில்)</th><th>2022.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா. மில்)</th></tr>
<tr><td>5 ஆண்டுகளுக்கு மேல்</td><td>96.48</td><td>96.36</td></tr>
<tr><td>5 முதல் 2 ஆண்டுகள் வரை</td><td>3.96</td><td>4.08</td></tr>
<tr><td>2 முதல் 1 ஆண்டு வரை</td><td>1.09</td><td>0.60</td></tr>
<tr><td>1 ஆண்டிற்கும் குறைவானது</td><td>25.40</td><td>92.84</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>126.93</td><td>193.88</td></tr>
</table>
</td><td rowspan="3">117,888,402.00 ஆக குறைக்கப்பட்டது.<br><u>போலி காசோலை மற்றும் மோசடிகள் தொடர்பான ஒதுக்கம்</u><br>அறவிடப்பட்ட காப்புறுதி கோரிக்கைகள் அல்லது வாடிக்கையாளர்களிடமிருந்து அறவீடு காரணமாக தொடர்புடைய ஆண்டில் அடையாளம் காணப்பட்ட நட்டங்கள் மற்றும் மோசடிகள் மற்றும் O/S மீதிகளின் வேறுபாட்டிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. O/S மீதியை வங்கி தொடர்ந்து கண்காணித்து நிலுவையில் உள்ளதற்கான காரணங்களை சேகரிக்கும்.</td><td rowspan="3">தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>போலி காசோலை மற்றும் மோசடிகள் தொடர்பான ஒதுக்கம்</td><td>22310122</td><td>1,609.74</td><td>
<table>
<tr><th>மீதிகள்</th><th>2023.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா. மில்)</th><th>2022.12.31 இல் உள்ளவாறான மீதி (ரூபா. மில்)</th></tr>
<tr><td>5 ஆண்டுகளுக்கு மேல்</td><td>1,001.92</td><td>512.06</td></tr>
<tr><td>5 முதல் 2 ஆண்டுகள் வரை</td><td>62.31</td><td>1,258.52</td></tr>
<tr><td>2 முதல் 1 ஆண்டு வரை</td><td>476.30</td><td>417.00</td></tr>
<tr><td>1 ஆண்டிற்கும் குறைவானது</td><td>69.21</td><td>78.50</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>1,609.74</td><td>2.266.07</td></tr>
</table>
</td></tr>
<tr><td>மொத்தம்</td><td></td><td>1,736.68</td><td></td></tr>
</table>

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி ரூபா 938,825 மில்லியன் ஆகும். இது மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் இருந்து 38.2 சதவீதத்தையும் வங்கியின் மொத்த சொத்து பெறுமதியில் இருந்து 21.28 சதவீதத்தையும் குறிக்கிறது. வங்கியின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மொத்த சொத்துக்களின் சதவீதமாக இந்த அரசாங்கத்தின் வெளிப்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 7.7 சதவீதம் மற்றும் 13.2 சதவீதத்தால் சற்று குறைவடைந்துள்ளது. | வகுக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம், GOSL & SOE வெளிப்பாட்டை (நேரடியாக) குறைப்பதற்கு கூட்டிணைந்த திட்டத்தில் வங்கி இலக்குகளை கால வரிசையுடன் நிர்ணயித்துள்ளது.<br>அண்மைக் காலத்தில் GOSL மற்றும் SOE இற்கு நேரடி வெளிப்பாட்டைக் குறைப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது மற்றும் 2024.06.30 இல் வெளிப்பாடு 34% ஆகக் | இலங்கை அரசாங்கம் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் கடன் வசதிகளை அறவிடுவதை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். |

குறைக்கப்பட்டது.
GOSL மற்றும் SOEs இன் வெளிப்பாட்டைக் குறைப்பதற்கு வங்கி அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

(ii) திறைசேரியின் பிரதிச் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை அரசாங்கம், ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை அரசாங்கம் (USD வசதி), தேசிய நீர் சபை, ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை மின்சார சபை, லங்கா கோல் கம்பனி பிறைவேட், அரச மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 10 அரசுக்கு சொந்தமான நிறுவனங்களாக (SOEs) இனங்காணப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை மீதி ரூபா 890,125.58 மில்லியனாக இருந்தது, இதில் ரூபா 868,321.60 மில்லியன் மூலதன நிலுவையும், ரூபா 21,803.98 மில்லியன் நிலுவை வட்டியும் உள்ளடங்குகிறது. இது இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான மொத்த நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதியில் இருந்து 94.81 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, முக்கிய பத்து GOSL & SOE வாடிக்கையாளர்களின் மீது ஒரு முக்கிய சார்பு உள்ளது.

| நிறுவனம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி ரூபா. மில்லியன் | பிணை | பிணை பெறுமதி |
|---|---|---|---|
| திறைசேரியின் பிரதிச் செயலாளர் (CPC கடனை மாற்றிய பின்) | 435,060.95 | கடன் உடன்படிக்கை | - |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 136,382.12 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 147,657.25 மில் |
| | | நிலையான வைப்புக்கள் | ரூபா 2,552.71 மில் |
| இலங்கை அரசாங்கம் (USD வசதி) | 78,094.30 | நிபந்தனையற்றது | - |
| இலங்கை எயார்லைன்ஸ் | 69,492.19 | திறைசேரி உத்தரவாதம் | USD 5.0 மில் |
| | | ஆறுதல் கடிதம் | USD32.50 மில்<br>USD 42.50 மில்<br>USD 25.0 மில் |
| | | ஸ்ரீ லங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சாதாரண | USD186.0 மில் |

GOSL மற்றும் SOEs இன் வெளிப்பாட்டைக் குறைப்பதற்கு வங்கி அனைத்து முயற்சிகளையும் எடுக்கும். மேலும், SOEs இற்கு வழங்கப்படும் காலக் கடன்கள் வசதிகளை வழங்கும் நேரத்தில் இணங்கப்பட்ட மீள்கொடுப்பனவு திட்டத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தீர்க்கப்படுகிறது. 2024.06.30 இல் உள்ளவாறு முதல் 10 SOEs இன் வெளிப்பாட்டு தொகை ரூபா 884,113.28 மில்லியன் ஆகும்.

<u>இலங்கை அரசு (USD வசதி)</u>

2024.06.30 இலிருந்து கரைகடந்த வங்கியில் நிலுவை இல்லை.

<u>ஸ்ரீ லங்கா எயார்லைன்</u>

SLAL சேவைகள் மாதாந்த வட்டி எந்த நிலுவைத் தொகையும் இல்லாமல் புதுப்பிக்கப்பட்டது. 2024.02.14, 2024.04.15, 2024.06.03 மற்றும் 2024.09.18 திகதிகளில் அரசாங்க திறைசேரியில் உரிமைக்கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்து கடன்களையும் திருப்பிச் செலுத்துவது 2024.12.31 வரை அல்லது மறுசீரமைப்பு செயன்முறை முடிவடையும் வரை இடைநிறுத்தப்பட்டது. 2024.08.22 மற்றும் 2024.09.10 ஆகிய திகதிகளில் பொதுதிறைசேரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு, ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள கோரிக்கைகளை தீர்த்து வைக்குமாறு கோரி, அல்லது நீடிக்கப்பட்ட ஆறுதல் கடிதம் மற்றும் திறைசேரி உத்தரவாதத்தை கிடைக்கச்

கடன் அபாயத்தைக் குறைப்பதற்கு அறவீடுகளைப் பின்தொடர வேண்டியதுடன் பொருத்தமான வரம்புகளைப் பேண வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | பங்குகள் மீதான அடமானம் | |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 59,563.53 | திறைசேரி இழப்பீடு | ரூபா 100,000 மில் |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 49,404.07 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 33,152.10 மில் USD 107.49 மில் |
| ஓய்வூதிய திணைக்களம் | 19,088.88 | நிபந்தனையற்றது | - |
| இலங்கை மின்சார சபை | 15,969.27 | கடன் உடன்படிக்கை | - |
| லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | 15,689.56 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 4,780 மில் |
| அரச மருந்துப்பொருள் கூட்டுத்தாபனங்கள் | 11,380.71 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 49,500 மில் |
| **மொத்தம்** | **890,125.58** | | |

செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

SLAL அவற்றின் OD வரம்பான ஐ.அ.டொலர் 70.0 மில்லியனை பெறவேண்டிய ஏற்றுமதி பெறுவனவுடன் சுழல்கிறது.

(iii) கடந்த 5 வருட காலப்பகுதியில் சிறந்த 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்கள் (NPA) பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்வரும் அவதானிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| வாடிக்கையாளரின் பெயர் | மொத்த செயற்பாடற்ற கடன் மீதி (2023/12/31) (ரூபா. மில்) |
|---|---|
| ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட் | 5,465.70 |
| தோலியா இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட் | 5,164.19 |
| மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 4,684.69 |
| டபிள்யூ எம் மென்டிஸ் & கம்பனி லிமிட்டட் | 4,524.44 |
| கே டி ஈபர்ட் & சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 4,341.04 |
| சிண்டேசி லிமிட்டட் | 2,981.21 |
| ஹரிஹெல பத்தன (பிறைவேட்) லிமிட்டட் | 2,829.77 |
| அனுடன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 2,644.01 |
| அல்மார் ரேடிங் கம். (பிறைவேட்) லிமிட்டட் | 2,513.85 |
| M/S தேஷிகா எம்பிராய்டரி சொலூஷன் (பிறைவேட்) லிமிட்டட் | 2,244.01 |
| **மொத்தம்** | **37,393.42** |

- முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் மொத்த மீதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37,393.42 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 300.45 மில்லியன் அல்லது 0.81 சதவீத்தால் அதிகரித்திருந்தது. இது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் நிலை III மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் 11.99 சதவீதத்தை

குறித்துக் கொள்ளப்பட்டது.
2019 முதல் 2021 வரை முதல் 10 NPL மீதியின் % அதிகரிப்பு குறைவடைந்துள்ளது. எனினும், பொருளாதார வீழ்ச்சியின் பின்விளைவுகள் காரணமாக 2022 இல் இது கடுமையாக அதிகரித்துள்ளது.
முதல் 50 NPA வாடிக்கையாளர்களை மதிப்பாய்வு செய்வதன் மூலம் வங்கி தொடர்ச்சியான பின்தொடர்தல்களை மேற்கொண்டு வருகிறதுடன் உதவி பொது முகாமையாளர் மதிப்பாய்வுகளில் காலாண்டுக்கு ஒருமுறை தீர்வுகளை வழங்குகிறது.
வாடிக்கையாளர்களின் நிலை மற்றும் தற்போதைய நிலை பின்வருமாறுள்ளது.

- ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட், தோலியா இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்- வகைப்படுத்தப்பட்ட நிலை III
- மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் - திறைசேரி உத்தரவாதத்தின் மீது கோரப்பட்டுள்ளது

எதிர்காலத்தில் கடன்களை வழங்குவதற்கு முன்னர் அறவீடுகளை பின்தொடர்ந்து திருப்திகரமான வாடிக்கையாளர் கடன் மதிப்பீட்டை உறுதிப்படுத்தல் வேண்டும்.

பிரதிபலிக்கிறது.

- கடந்த ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் மொத்த மீதி 132.86 சதவீதம் அல்லது ரூபா 21,335.24 மில்லியனால் அதிகரித்திருந்தது.

- டபிள்யூ எம் மென்டிஸ் & கம்பனி லிமிட்டட் - தற்போது ரூபா 45-47 மில்லியனை மாதாந்தத் தேவையான ரூபா 60 மில்லியனுக்கு எதிராக. அறவிடுகின்றது. வசதிகள் மறுசீரமைப்பிற்குப் பின்னர்ரூபா 75 மில்லியனை மூலதனமாகவும், ரூபா 365 மில்லியனை வட்டியாகவும் 2024.10.13 இல் அறவிடப்பட்டது.
- சென்ரெசி லிமிட்டட், அல்மார் ரேடிங் கம். (பிறைவேட்) லிமிட்டட், M/S டெசிகா எம்ப்ரொய்டறீ சொலூசன் (பிறைவேட்) லிமிட்டட் - சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகின்றன
- கே டி ஈபர்ட் & சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், ஹரிஹெல பத்தன (பிறைவேட்) லிமிட்டட் -மறுமலர்ச்சி பொதி அமுல்ப்படுத்தப்பட்டது
- அல்மார் ரேடிங் கம். (பிறைவேட்) லிமிட்டட் - கடன்கள் புத்துயிர் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய கலந்துரையாடல்.

(iv) 2023 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் (குழு அடிப்படையில்) வெளிப்பாட்டின் மதிப்பாய்வில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**1) ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்**

கம்பனி உட்கட்டமைப்பு நிதி, ஆலோசனை மற்றும் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு உபகரண நிதி, மாற்று முதலீட்டு நிதிகள், மூலதன சந்தைகள் மற்றும் காப்புறுதி தரகு உள்ளிட்ட வணிகங்களுடன் ஈடுபட்டுள்ளது.

ஐ.அ.டொலர் 110 மில்லியன் உலகளாவிய வரம்புடன் ஸ்ரீ இக்யூப்மென்ட்டின் கடன்களுக்கு நிதியளிப்பதற்காக

கடன் முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கு கடன் வாங்குபவரிடம் இருந்து பூர்வாங்க தகவல்கள் எப்போதும் பெறப்படுகின்றன. குழு ஏற்பாட்டாளராக இருப்பதால், ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி, இலங்கை வங்கிக்கு இரகசிய உடன்படிக்கையை (CA) அனுப்பியுள்ளது.

SREI ஆனது குறுகிய சந்தைகளுக்கான கடன்

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

வங்கி மற்ற 6 குழு வங்கிகளுடன் பங்கேற்றுள்ளது.

2018 யூலை 30 இல் ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்டிற்கு ஐ.அ.டொலர் 15 மில்லியன் குழு காலக் கடன் வசதி வங்கியால் வழங்கப்பட்டிருந்தது, இது 2021 திசெம்பர் 14 முதல் செயற்பாடற்ற வகையின் கீழ் உள்ளது.

2017 நவம்பர் 30 ஆம் திகதிய 2.10 ஆம் இலக்க சபை கூட்டக் குறிப்பின் பிரகாரம் குழு கடன் வசதியின் பிணை ஆவணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கான அதிகாரத்தை வங்கியின் சார்பாக பிரதி பொது முகாமையாளர் (கூட்டுத்தாபன மற்றும் கரைகடந்த வங்கி) மற்றும் உதவி பொது முகாமையாளர் (கரைகடந்த வங்கி) ஆகியோருக்கு சபை வழங்கியுள்ள போதிலும் 2017 திசெம்பர் 07 ஆம் திகதிய சலுகைக் கடிதத்தில் பிரதி பொது முகாமையாளரின் (கூட்டுத்தாபன மற்றும் கரைகடந்த வங்கி) கையொப்பம் இல்லாத உதவி பொது முகாமையாளர் (கரைகடந்த வங்கி) மற்றும் உறவு முகாமையாளர் (கரைகடந்த வங்கி) ஆகியோரால் கையொப்பமிடப்பட்டது. மேலும், 2017 செப்தெம்பர் 25 ஆம் திகதிய மின்னஞ்சல் மூலம் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கிக்கு இரகசியத்தன்மை உடன்படிக்கையை அனுப்பும் போது, பிணை ஆவணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கு மேற்கூறிய அதிகாரப் பிரதிநிதித்துவத்திற்கான சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. உதவி பொது முகாமையாளர் (கரைகடந்த வங்கி) 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய இரகசிய உடன்படிக்கையிலும், 2017 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய தகவல் விஞ்ஞாபனத்திலும் வங்கி சார்பாக தனித்தனியாக கையெழுத்திட்டார். மேற்படி இரகசிய ஆவணங்களில் தனித்தனியாக கையொப்பமிடுவது வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலவீனப்படுத்த வழிவகுக்கும்.

மேலும் வங்கியானது கம்பனியின் நிதி நிலைமை மற்றும் திருப்பிச் செலுத்தும் திறன் குறித்து முறையான மதிப்பீட்டை மேற்கொண்டிருக்காததுடன் வசதியை வழங்குவதற்கு முன்னர் நிதி நிலைமையின் எதிர்மறை குறிகாட்டிகளை கருத்தில் கொண்டிருக்கவில்லை.

ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி (SCB) இலங்கை வங்கிக்கு அனுப்பிய தகவல் விஞ்ஞாபனத்தின் (IM) முக்கிய அறிவிப்பின் கீழ், ‘‘வசதியில் கடன் வழங்குபவர்கள் பங்கேற்க தேவையான அனைத்து இணக்கப்பாடுகள், அங்கீகாரங்கள் அல்லது அதிகாரங்களைப் பெறுவது அவர்களின் பொறுப்பாகும். சேவையகமாகக் கருதப்படுகிறதுடன் ஒரு நிதி நிறுவனத்தின் அளவுருவுடன் இணங்குகிறது. மேலும் அத்தகைய நிதி நிறுவனம் சாதாரண மூலதனத்திற்கான கடன் குறிகாட்டிகளை விட அதிகமாக பதிவு செய்கிறது. ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்டின் சந்தை மூலதனம் ஐ.அ.டொலர் 10 பில்லியனாகும். கடன் வசதி வழங்குவதற்காக கம்பனியை மதிப்பிடும் நேரத்தில் அது இந்தியாவில் இலாபம் ஈட்டும் வணிக நிறுவனங்களில் ஒன்றாக இருந்தது.

ரிசர்வ் வங்கி அங்கீகரிக்கப்பட்ட விநியோகத் திட்டத்தின் பிரகாரம், இலங்கை வங்கியானது அசெண்ட் செக்யூரிட் ECB (வெளிநாட்டு வணிகக் கடன்கள்) கடன் வழங்குபவர்களின் பிரிவின் கீழ் உள்ளது.

CIRP செயன்முறையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 2.35 மிலிலியன் அறவிடப்பட்டது.

மீதி தீர்மானத் திட்டம் பின்வருமாறுள்ளது.

- விருப்பம் மாற்றத்தக்க திபெஞ்சர்கள் (OCD) வழங்கப்பட்டது - INR 349.7 மில்லியன் (ஐ.அ.டொலர் 4.19 மில்லியன்)
- மூலதன பங்குகள் - INR 11.3 மில்லியன் (ஐ.அ.டொலர் 0.13மில்லியன்)
- பெற வேண்டிய மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 4.66 மில்லியன்

இந்திய ரிசர்வ் வங்கி (RBI) / கடன்கொடுத்தோர் குழு (COC) கூட்டம் மற்றும் இலங்கை வங்கி - இலங்கை வங்கியின் சார்பாக கரைகடந்த வங்கி பிரிவை பிரதிநிதித்துவப்படுத்துவதன்

இந்த வசதியில் பங்கேற்பதன் மூலம், சாத்தியமான கடன் வழங்குபவர்கள், இந்த வகையில், கட்டாய தலைமை ஏற்பாட்டாளர் அவர்களுக்கு எந்தவிதமான கவனிப்பு கடமையும் இல்லை என்பதை ஒப்புக்கொண்டதாகக் கருதப்படுவார்கள்'' என குறிப்பிடப்பட்டள்ளது. எவ்வாறாயினும், மேற்கூறிய அறிக்கையானது கரைகடந்த வங்கிப் பிரிவினால் கடன் குழு அல்லது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு விஞ்ஞாபனத்திலும் சேர்க்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

2018 யூலை 24 ஆம் திகதிய கடன் குழு விஞ்ஞாபனத்தின் பிரகாரம், ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி முன்னணி வங்கியாக இருக்கும் போது, மற்ற வங்கிகள் இந்த குழு கடனுக்கான அபாயத்தைத் தணிக்கும் காரணியாகப் பகிர்ந்து கொள்கின்றன என்று பிரதம இடர் அதிகாரி கருத்துத் தெரிவித்துள்ளார்.

குழுக் கடன் வசதிக்காக பங்கேற்கும் போது, கட்டாய முன்னணி ஏற்பாட்டாளராக செயற்படும் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியை மாத்திரமே வங்கி நம்பியிருந்தது போல் தெரிகிறது.
2017 நவம்பர் 30 ஆம் திகதிய 2.10 ஆம் இலக்க சபை கூட்டக் குறிப்பின் பிரகாரம் செலுத்த வேண்டிய காலம் 05 ஆண்டுகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வசதி மொத்த திருப்பிச் செலுத்தும் காலத்தைக் குறிப்பிடுவதன் மூலம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு திருப்பிச் செலுத்தும் கட்டமைப்பையும் குறிப்பிட்டிருக்கவில்லை. பின்னர், ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 5.0 மில்லியன் வீதம் 03 bullet கொடுப்பனவுகளை 2022 செப்டம்பர் 30, 2023 மார்ச் 30 மற்றும் 2023 செப்தெம்பர் 30 ஆகிய திகதிகளில் செலுத்த வேண்டியுள்ளதால். 2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 1.2.05 ஆம் இலக்க சபை கூட்டக் குறிப்பின் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்தும் கட்டமைப்பிற்கு சபை அங்கீகாரம் அளித்தது, அதன் பிரகாரம், கடனின் மூலதனப் பகுதியை மீளச் செலுத்துவதற்கு 04 வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

2023 செப்தெம்பர் 30 இல் வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதி முறையே ரூபா 4,866.72 மில்லியன் மற்றும் ரூபா 963.53 மில்லியன் மொத்த மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 5,830.25 மில்லியன் ஆகும். பின்னர், 2023 திசெம்பர் 15 & 2024 பெப்ரவரி 07 இல் கம்பனியிடமிருந்து ஐ.அ.டொலர் 2,335,950.38 கொடுப்பனவு பெறப்பட்டது. 2024 மார்ச் 07 வரை பெறப்பட்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 4,339,990.17 ஆகும்.

மூலம் இது தொடர்பான ஏனைய விடயங்களில் கூட்டங்களில் பங்கேற்கும் அதிகாரம் பெற்ற பிரதிநிதியாக திரு. எஸ் ராமானுஜம், சிரேஷ்ட உப தலைவர் கடன் (சென்னை கிளை) அவர்களை பணிப்பாளர்கள் நியமிப்பதற்காகும்.

வசதியானது அதன் குறிப்பிட்ட பெறவேண்டியவைகள் மீது அனுமானத்தின் மூலம் பிரத்தியேக முதல் தரவரிசை பாதுகாப்பு ஆர்வத்தை வழங்குவதன் மூலம் பாதுகாக்கப்படுகிறது. இது ”பாதுகாக்கப்பட்ட பெறவேண்டியவைகள்”, எல்லா நேரங்களிலும் நிலுவையாக உள்ள வசதியின் மீது குறைந்தபட்சம் 1.15 மடங்கு பிணை காப்பீட்டை வழங்குவதற்குப் போதுமானதாக உள்ளது. ”பாதுகாக்கப்பட்ட பெறவேண்டியவைகள்” என்பது கடன் வாங்குபவர் தனது வாடிக்கையாளர்களுக்கு மேற்கொண்ட கடன்கள் தொடர்பான பெறவேண்டியவையாக உள்ளதுடன் கடன் வாங்குபவரின் புத்தகங்களில் நிலைத்துள்ளது. கடன் வசதியை வழங்குவதற்கு முன்னர் வங்கி எந்த ஒரு சுயாதீன சரிபார்ப்பு அல்லது பாதுகாக்கப்பட்ட பெறவேண்டியவைகள் குறித்த வயது பகுப்பாய்வை மேற்கொண்டிரக்காதமை அவதானிக்கப்பட்டது.

தற்போது 2021 ஒக்தோபர் 11 இல் இந்திய ரிசர்வ் வங்கியின் திவால் அறிவிப்புடன் திவால் மற்றும் திவாலா நிலை சபையால் ஒரு திவால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2 **தோலியது இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்**

தோலியது என்பது மாலைதீவில் தோலியதூ தீவில் உள்ள ஒரு ”5 நட்சத்திர” உல்லாச விடுதி செயற்திட்டமாகும், இது 65 தண்ணீர் வில்லாக்கள் மற்றும் 35 கடற்கரை வில்லாக்கள், மூன்று உணவகங்கள் மற்றும் ஏனைய ஓய்வு வசதிகள் உட்பட 100 வில்லாக்களை உருவாக்க திட்டமிடப்பட்டது.

2010 ஒக்தோபர் 27 இல் கரைகடந்த வங்கிப் பிரிவின் மூலம் ஐ.அ.டொலர் 5 மில்லியன் மற்றும் BOC மாலைதீவு கிளை மூலம் ஐ.அ.டொலர் 3 மில்லியன் உட்பட ஐ.அ.டொலர் 8 மில்லியன் கூட்டுமொத்தமாக மேற்கூறிய வாடிக்கையாளருக்கு வங்கி இரண்டு ஐக்கிய அமெரிக்க டொலர் மதிப்பிலான காலக் கடன்களை வழங்கியிருந்தது. பின்னர் அந்த வசதிகள் முறையே 2012 யூன் 29 மற்றும் 2012 யூன் 31 இல் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன. தோலியதூ தீவில் 35 கடற்கரை வில்லாக்கள், 65 தண்ணீர் வில்லாக்கள் மற்றும் மூன்று உணவகங்களை நிர்மாணிப்பதற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்கு ஆரம்பத்தில் ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா (SBI) மற்றும் பாங்க் ஒவ் மாலைதீவு (BML) நிதியளித்தன. ஏற்கனவே SBI & BML இற்கு அடமானம் வைக்கப்பட்டிருந்த ஷவியானி அட்டோலில் உள்ள ”தோழியதூ” தீவின் தலை குத்தகை உரிமையின் மீது பரி-பாசு அடமானத்திற்கு எதிராக மேலதிக கடன் வசதிக்காக கம்பனி BOC ஐ அணுகியுள்ளது. தோலியது இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் தொகுதிக்

உத்தரவாததாரர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு வங்கி அமுலாக்க வழக்கை சிவில் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. அமுலாக்க நடவடிக்கையின் போது, BML மற்றும் SBI தலையிட கோரிக்கை விடுத்தன. இப்போது SBI தோழியதூ தீவின் புதிய மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது, நீதிமன்றம் விரைவில் தீவை விற்க முன்கூட்டியே உத்தரவை பிறப்பிக்கும்.

ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா (உதவி உப தலைவர் - கடன்) தற்போதைய நிலையை மின்னஞ்சல் மூலம் பின்வருமாறு புதுப்பிக்கிறது.

நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் SBI கேள்வி அறிவிப்பை உள்ளூர் செய்தித்தாள் ”மிஹாரு” மற்றும் இணையதளத்தில் 2024.09.03 முதல் 2024.10.15 வரை வெளியிட்டதுடன் அறிவிப்பு SBI இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

கம்பனியான AAA & கம்பனியின் பணிப்பாளர்களின் தலை குத்தகை உரிமை மற்றும் தனிப்பட்ட உத்தரவாதங்களுக்கு எதிரான பரி-பாசு அடமானத்தின் மீது கடன் வழங்குபவர்களால் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.
2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதி ரூபா 5,536.98 மில்லியன் ஆகும், இதில் மொத்த மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி மீதி முறையே ரூபா 2,583.32 மில்லியன் மற்றும் ரூபா 2,953.66 மில்லியன் உள்ளடங்குகிறது.
அதிகரிக்கப்பட்ட செயற்திட்டச் செலவிற்கு நிதியளிப்பதற்காக ஒரு முதலீட்டாளர்/கடன் வழங்குபவரைக் கண்டுபிடிக்க கம்பனியால் இயலவில்லை. மேலும் கம்பனியால் செயற்திட்டத்தின் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. செயற்திட்ட ஊக்குவிப்பாளர் செயற்திட்டத்தை கைவிட்டதுடன் அனைத்து கடன் வழங்குபவர்களும் வசதிகளை அறவிடுவதற்கு கடன் வாங்கியவருக்கு எதிராக அறவீட்டு நடவடிக்கையை தொடங்கினர்.
610/Cv-C/2016 ஆம் இலக்க வழக்கின் கீழ் மாலைதீவு சிவில் நீதிமன்றத்தில் DIPL மற்றும் வசதிக்கான உத்தரவாததாரர்களுக்கு எதிராக BOC வழக்கை தொடர்ந்துள்ளது. நீதிமன்றம் 2016 ஒக்தோபர் 27 இல் BOC இற்கு ஆதரவாக ஒரு தீர்ப்பை வழங்கியிருந்ததுடன் தீர்ப்பு திகதியிலிருந்து 7 மாதங்களில் நிலுவைகளை செலுத்த உத்தரவிட்டது. எனினும், கம்பனி குறித்த காலத்திற்குள் முழு நிலுவைத் தொகையையும் திருப்பிச் செலுத்தத் தவறியிருந்தது.

தீர்ப்பின் பிரகாரம், அனைத்து கடன் வழங்குநர்கள் சார்பாக, 2019 மார்ச் 21 இல் ஐ.அ.டொலர் 42.8 மில்லியன் ஒதுக்க விலையில் தீவின் குத்தகை உரிமைகளை விற்பனை செய்வதற்கு BOC வெளியிட்டுள்ளது. பின்னர் SBI ஐ.அ.டொலர் 38.5 மில்லியன் ஒதுக்க விலையில் 2020 மார்ச் மாதத்தில் சொத்தை விற்பனை செய்வதற்கு வெளியிட்டிருந்தது. இரண்டு வெளியீடுகளும் வெற்றிபெறவில்லை. 2022 சனவரி 17 இல் SBI தீவை ஐ.அ.டொலர் 33 மில்லியனிற்கு விற்பனை செய்வதற்கு வெளியிட்டதுடன் வருங்கால கேள்விதாரர் இல்லாமல் கேள்வி 2022 பெப்ரவரி 01 இல் மூடப்பட்டது. இற்றை பெறுமதி அடிப்படையில் ஐ.அ.டொலர் 31.35 மில்லியன் பெறுமதியில் கேள்வியை வெளியிட SBI முடிவு செய்துள்ளது. முதலாவது பரி-பாசு அடமானம் BOC இற்கு வழங்கப்பட்டது.
வங்கியின் பணிப்பாளர் சபை 2023 ஆகஸ்ட் 31 இல் (31.08.2023/13.8.01) நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது.

(அ) ஐ.அ.டொலர் 4,188,237.94 (ஐ.அ.டொலர் 7,962,201.71 இன் 52.6% மூலதன நிலுவைத் தொகை) பின்வருமாறு அறவிடப்படுதல்.

- கரைகடந்த வங்கி பிரிவு - ஐ.அ.டொலர் 2,630,075.94
- இலங்கை வங்கி, மாலைதீவு கிளை - ஐ.அ.டொலர் 1,558,162.94

(ஆ) ஐ.அ.டொலர் 3,773,963.77 (ஐ.அ.டொலர் 7,962,201.71 இன் 47.4% மூலதன நிலுவைத் தொகை) நிலுவைத் தொகையை பின்வருமாறு பதிவழித்தல்

- கரைகடந்த வங்கி பிரிவு - ஐ.அ.டொலர் 2369,925.00
- இலங்கை வங்கி, மாலைதீவு கிளை - ஐ.அ.டொலர் 1,404,038.77

(இ) 2023.08.09 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 7,711,822.64 கூட்டுமொத்தமான 100% அட்டுறு வட்டியை பின்வருமாறு தள்ளுபடி செய்தல் மற்றும் தீர்ப்பனவு திகதி வரை அட்டுறுவாக்கப்படும் மேலதிக வட்டியைத் தள்ளுபடி செய்தல் -

- கரைகடந்த வங்கி பிரிவு - ஐ.அ.டொலர் 4,866,249.97
- இலங்கை வங்கி, ஆண் - ஐ.அ.டொலர் 2,845,572.67

(ஈ) 2023.08.09 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 1,970,157.39 கூட்டுமொத்தமான 100% அட்டுறு அபராத வட்டியை பின்வருமாறு தள்ளுபடி செய்தல், மேலும் தீர்ப்பனவு திகதி வரை அட்டுறுவாக்கப்படும் அபராத வட்டியை தள்ளுபடி செய்தல்.

- கரைகடந்த வங்கி பிரிவு - ஐ.அ.டொலர் 1,280,533.47
- இலங்கை வங்கி, ஆண் - ஐ.அ.டொலர் 689,623.92

(உ) மேற்கூறிய ஏற்பாட்டை (அ), (ஆ), (இ), மற்றும் (ஈ) ஆகியவற்றின் கீழ் முழுமையான மற்றும் இறுதித் தீர்ப்பனவாகக் கருத்தில் கொள்ளுதல் மற்றும் உத்தியோகபூர்வ அறிவுறுத்தல் சுற்றறிக்கை இல. 16/2018 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி கரைகடந்த வங்கிப் பிரிவு மற்றும் BOC மாலியிலிருந்து வழங்கப்பட்ட மேற்கூறிய வசதிகள் தொடர்பான DIPL மற்றும் உத்தரவாததாரர்களின் அனைத்து பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல்.

(ஊ) பின்வரும் கடிதங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு உடன்படிக்கையை செயற்படுத்துதல்

- கடன் வாங்குபவர் (DIPL) மற்றும் இணை கடன் வழங்குபவர்கள் அதாவது ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா (SBI) மற்றும் பாங்க் ஒவ் மாலைதீவு (BML) அல்லது ஏனைய தொடர்புடைய தரப்பினருக்கு ஆட்சேபனைக் கடிதம் இல்லை.
- கடன் வாங்கியவர் மற்றும் உத்தரவாதம்

அளிப்பவர்களுக்கான பொறுப்புக் கடிதம்.

- கடன் வாங்குபவர், உத்தரவாததாரர்கள் மற்றும் BOC இடையே தீர்ப்பனவு உடன்படிக்கை

2023 திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கடன் வாங்குபவர் அல்லது முன்மொழியப்பட்ட வாங்குபவர் மூலம் மேலே கொடுக்கப்பட்ட பரிவர்த்தனை செயல்படுத்தப்படாவிட்டால், மறுப்புக் கடிதம் செல்லாது. எனவே இலங்கை வங்கி, மாலைதீவுகள் அமுலாக்க வழக்கை 2024 சனவரி மாதத்தில் சிவில் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. முதல் விசாரணை 2024 பெப்ரவரி 07 இல் நடைபெற்றது, இதில் எவ்வாறு மதிப்பீட்டை மேற்கொள்வது மற்றும் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மதிப்பீட்டை நடாத்த மதிப்பீட்டாளரை நியமிப்பது பற்றி கலந்துரையாடப்பட்டது.

3 **தயா தொகுதி**

**(அ) தயா அப்பேரல் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

தயா அப்பேரல் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நெய்த காற்சட்டை, பெண்களுக்கான ஜீன்ஸ், அரை காற்சட்டை, காற்சட்டை போன்ற ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. ரூபா 486.67 மில்லியனிற்கு சமமான இலங்கை ரூபாவுடன் 01 ஐ.அ.டொலர் காலக் கடனை வழங்கியிருந்தது. 2004 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் ரூபா 153.20 மில்லியன் தொகையான 03 விலைப்பட்டியல் தள்ளுபடி வசதிகள், ரூபா 1,063.71 மில்லியன் தொகையான 113 ஹைபோதெகேஷன் (Hypothecation) வசதிகள் மற்றும் ரூபா 68.39 மில்லியன் தொகையான 02 வங்கி மேலதிகப்பற்று வசதிகள் வணிகம் break-even point இற்கு மிகக் குறைவாகச் செயற்பட்டதால் 2019 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது,

கம்பனி 2021/2022 மற்றும் 2022/2023 காலப்பகுதிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. 2020/2021 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிநிலைகள், வரிக்குப் பின்னரான இலாபம் -28.7 சதவீதம் (எதிர்மறை), பூஜ்ஜிய வட்டி மேவுகை விகிதம் மற்றும் பண சுழற்சி நாட்களை 103 நாட்களில் இருந்து 278.1 நாட்களாக உயர்த்தியதைக் குறிக்கிறது.

2023 ஏப்ரல் 20 இல் நடைபெற்ற கடன் குழு கூட்டத்தில் கம்பனி மற்றும் தொகுதியில் உள்ள மற்ற கம்பனிகளுக்கான சட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முடிவு செய்த போதிலும் 2023 யூலை 31 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஹோட்டல் தொழில்துறையை இலக்காகக் கொண்ட புதிய லினன் தயாரிப்பு வரிசைக்காக சீனாவிடமிருந்து துணி மற்றும் பிற மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடித வசதிகளை வழங்குமாறு கம்பனியின்

கம்பனி நிதி நெருக்கடியுடன் வணிகத்தை நடாத்தி வந்தது. ஏற்றுமதி கட்டளைகள் கிடைக்காததால், 2023.03.09 ஆம் திகதிய சலுகைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கம்பனியால் கடைப்பிடிக்க முடியவில்லை. மேலும் வங்கிக்கு LKR காசுப் பாய்ச்சலைச் செய்யவில்லை, எனவே சட்ட நடவடிக்கைகளைத் தொடங்க முடிவு செய்தது.

புதிய வணிகத்திற்கான நாணயக் கடித வசதிக்கான வாடிக்கையாளர் முன்மொழிவு சாத்தியமானதாக இல்லாததால், கவனமாக மதிப்பீடு செய்த பின்னர், கடன் வசதிகளை கரைகடந்த வங்கிப் பிரிவில் இருந்து அறவீட்டுப் பிரிவுக்கு மாற்ற முடிவு செய்தது. வாடிக்கையாளர் கோரிக்கை மற்றும் அரிசி ஆலை செயற்பாட்டைக் கருத்தில் கொண்டு, 2023 ஆகஸ்ட் 16 இல் அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவிலிருந்து வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவுக்கு வங்கி கடன் கோவையை பரிமாற்றம் செய்திருந்தது.

கடன் கோவை BRRU இற்கு

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் கோரியுள்ளார். கம்பனியின் கடன் வசதிகள் 2023 யூன் 27 இல் கரைகடந்த வங்கிப் பிரிவிலிருந்து அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவுக்கும் பின்னர், அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவிலிருந்தும் மாற்றப்பட்டிருந்தது. வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவிலிருந்து 2023 ஆகஸ்ட் 16 இல் எந்தவித கடன் அறவீடும் அல்லது வங்கியால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளும் இல்லாமல் மாற்றப்பட்டிருந்தது.<br>2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மொத்த மீதி ரூபா 1,622.70 மில்லியன் மற்றும் ரூபா 462.93 மில்லியன் முறையே மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 2,085.63 மில்லியனாக இருந்தது.<br>மொத்த நிலுவையில் ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 260 மில்லியன் கட்டாய விற்பனை பெறுமதியை கொண்டிருந்த முறையே திருக்கோவில் சொத்து, திட்ட இல. 19/2020 (7A.03R.22.00P) மற்றும் இல. 1/1, ஹிங்குரானை வீதி, அம்பாறை லொட் 670, கடஸ்ட்ரல் வரைபட இல. 2800/10 (04A.03R.05.00P) இல் அமைந்துள்ள அம்பாறை சொத்து ஆகியவற்றில் 02 அசையாச் சொத்துக்களுக்கு எதிராக ரூபா 2,085.63 மில்லியன் தொகை பாதுகாக்கப்பட்டது. அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் கட்டாய விற்பனை பெறுமதி மொத்த நிலுவைத் தொகையில் 22.05 சதவீதத்தை மாத்திரமே குறிக்கிறது. | மாற்றிய பின்னர், கம்பனி தயா குரூப் லிமிட்டட், தயா அப்பேரல் எக்ஸ்போர்ட்ஸ் (DAEPL) மற்றும் ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்ஷன் (OCPL) ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட வசதிகளை பகுதியளவு அறவிடுவதற்காக ரூபா 450.0 மில்லியனை வைப்பு செய்திருந்தது.<br>அதன் பிரகாரம், ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்சனின் மொத்தக் கடன் வெளிப்பாட்டின் ரூபா 100.0 மில்லியன், மேலும் தயா அப்பேரல் எக்ஸ்போர்ட்ஸ்ஸிடமிருந்து ரூபா 100.0 மில்லியன் மற்றும் மீதி தயா குரூப் லிமிட்டட்டின் மொத்த கடன் வெளிப்பாட்டிலிருந்து ரூபா 250.0 மில்லியன் ஆகியவற்றை BRRU அறவிட்டிருந்தது.<br>மேலதிக தகவல்களுடன் சாத்தியமான வணிகத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கும், செயன்முறையில் உள்ள முன்மொழியப்பட்ட மறுமலர்ச்சிப் பொதியைப் பாதுகாக்க போதுமான உறுதியான பாதுகாப்பை வழங்கவும் வங்கி கோரியுள்ளது. | |
| **(ஆ) பிம்புத் பினான்ஸ் பிஎல்சி**<br>பிம்புத் பினான்ஸ் பிஎல்சி நுண் நிதி வணிகத்தில் ஈடுபட்டிருந்தது.<br>வங்கி 2016-2022 காலப்பகுதியில் ரூபா 278.33 மில்லியன் தொகையான 03 காலக் கடன்கள், ரூபா 141.93 மில்லியன் தொகையான 06 காலம் தாழ்த்தி மீளசெலுத்தும் மாற்றப்பட்ட கடன்கள், ரூபா 24.69 மில்லியன் தொகையான 01 மீள பட்டியலிடப்பட்ட-பீ கடன் மற்றும் ரூபா 9,378.96 மில்லியன் தொகையான 01 வங்கி மேலதிகப்பற்று வசதியை வழங்கியுள்ளதுடன் அவை 2023 ஆம் ஆண்டில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது.<br>கம்பனி 2019/2020 நிதியாண்டில் வட்டி வருமானம் குறைவதற்கான முக்கிய காரணத்தால் ரூபா 520 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. கடன் வசதிகளை வழங்கும் நேரத்தில், கம்பனியின் இடர் மதிப்பீடு BBB ஆக இருந்ததுடன் தற்போது ”D” வகையின் கீழ் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. | கம்பனி அதிக கடன் தரக்கூடியதாக இல்லாவிட்டாலும் தொகுதி உறவை கருத்தில் கொண்டு இந்த கம்பனிக்கான கடன் வசதிகளை வங்கிகருத்தில் கொண்டுள்ளது. எனினும், வசதிகளை செயற்பாடற்ற வகைக்கு மாற்றிய பின்னர், வசதிகளை அறவிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வங்கி எடுத்துள்ளதுடன் பின்வருவனவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியது.<br>• 2024.06.12 இல் காலம் தாழ்த்தி கடன் | அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும். |

கூட்டுத்தாபன கடன் கொள்கை கையேட்டின் 8.1.i & ii ஆம் பிரிவின் பிரகாரம் கடன் தரவரிசைப்படுத்தல் "B" மற்றும் அதற்குக் கீழே இருந்தால், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வருடாந்தம் அல்லது அரையாண்டு ரீதியாக ஒரு விரிவான-கடன் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். மேலும் ஒதுக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் கடன் தரத்தை காலாண்டு வகைப்படுத்தல் செயன்முறை, காலாண்டு வாடிக்கையாளர் விஜயம் போன்றவற்றின் மூலம் மதிப்பிட வேண்டும். எனினும், கணக்காய்வு மதிப்பாய்வுக்கான கோவையில் வாடிக்கையாளர் விஜய அறிக்கைகள் கிடைக்கவில்லை.
இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, பிம்புத் பினான்ஸ் தொடர்ந்து நிதி வர்த்தகச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகிறது/முரணாகச் செய்து வருவதை அவதானித்து, நிதி வர்த்தகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பல நீடிப்புக்களை வழங்கியது. எனினும், 2023 செப்தெம்பர் 01 முதல் தொடர்ந்து இணங்காததன் காரணமாக கம்பனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்ய CBSL முடிவு செய்துள்ளது. அதன் பிரகாரம், அதன் பிறகு கம்பனி நிதி வணிகத்தில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை.
மேலும் OIC 340/2020 மற்றும் OIC 29/2022 இன் கீழ் வழங்கப்பட்ட கடன் காலம்தாழ்த்தி மீள செலுத்துதல் வசதிகள் முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை என்பதும், மீள பட்டியலிடப்பட்ட ரூபா 32.30 மில்லியன் தொகையான கடன் B வசதிக்காக பணிப்பாளாரின் தனிப்பட்ட உத்தரவாதம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர், 2023 ஒக்தோபர் 25 இல் நடைபெற்ற கடன் குழுக் கூட்டத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2023 திசெம்பர் 27 இல் கடன் கோவைகள் அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தன. எனினும், கடனை அறவிடுவதில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. மேலும் சட்ட நடவடிக்கைகள் கம்பனிக்கு எதிராக வங்கியால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மொத்த நிலுவை மீதி ரூபா 444.95 மில்லியன் மற்றும் ரூபா 92.93 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 537.88 மில்லியன் ஆகும். பிணைகளுக்கு எந்த அசையா சொத்துக்களும் கருத்தில் கொள்ளப்படவில்லை. மேலும் கம்பனியின் பணிப்பாளர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்களுக்கு எதிராக மொத்த நிலுவைத் தொகை பாதுகாக்கப்பட்டது ஐந்து (05) காலம்தாழ்த்தி கடன் மீள செலுத்துதல் கடன்கள் சுத்தமான அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 01 காலம்தாழ்த்தி கடன் மீள செலுத்துதல் கடன்கள் பணிப்பாளர் உத்தரவாதத்தின் பேரில் வழங்கப்பட்டது. எனவே, இருக்கும் பிணை வலிமை இல்லாததால்,

மீளசெலுத்தும் வசதிகள் மீண்டும் தொடங்கப்பட்டன.

- LDs 2024.08.13 இல் வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட்டன.
- முடிவுசெய்தல் வழக்கு இல. சீஎச்சீ/41/2024/சீஓ மீதான உரிமைகோரல் 2024.09.25 இல் பதிவு செய்யப்பட்டது.
- மீள பட்டியலிடப்பட்ட கடன் B இல. 88428657 பணிப்பாளர் ஆவணங்களில் கையொப்பமிட்டிருக்காததால் பணிப்பாளர் உத்தரவாதத்தால் பாதுகாக்கப்படாத போதிலும் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடரும்.
- ஏனைய வசதிகளுக்கான சட்ட நடவடிக்கை பட்டியலிட்டவாறு தொடரப்பட உள்ளது.

மொத்த நிலுவையை அறவிடுவது சந்தேகத்திற்குரியதாகும்.

**(இ) ப்ளு டயமண்ட்ஸ் ஜுவல்லரி வேர்ல்டுவைட் பிஎல்சி**

ப்ளு டயமண்ட்ஸ் ஜுவல்லரி வேர்ல்டுவைட் பிஎல்சி ஆனது வைரம் பதிக்கப்பட்ட தங்க நகைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளது.

வங்கி 2018 ஆகஸ்ட் 17 மற்றும் 2022 சனவரி 31 இல் முறையே ரூபா 35.93 மில்லியனிற்கு சமமான 01 ஐ.அ.டொலர் காலக் கடனையும், ரூபா 5.15 மில்லியனிற்கு சமமான இலங்கை ரூபாவுடன் 01 காலம் தாழ்த்தி மீளச்செலுத்தும் கடனாக மாற்றியமைக்கப்பட்ட ஐ.அ.டொலர் காலக்கடனையும் வழங்கியிருந்தது. அவை முறையே 2023 சனவரி 16 மற்றும் 2023 யூன் 30 ஆம் திகதியிலிருந்து செயற்பாடற்ற வகையின் கீழ் இருந்தன.

ஐ.அ.டொலர் காலக் கடனை வழங்கும் போது, கம்பனி ஏற்கனவே மற்ற வங்கிகளிடமிருந்து ரூபா 35.5 மில்லியன் வசதிகளை பெற்றிருந்ததுடன் 2013 - 2018 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வருமானம் குறைவடைந்துள்ளது. அந்த காலப்பகுதியில் கம்பனி தொடர்ச்சியான நட்டங்களைச் சந்தித்ததுடன் கம்பனியின் எதிர்மறை வருமானம் காரணமாக கடன் சேவை மேவுகை விகிதம் (DSCR) பலவீனமாக இருந்தது. மேலும், கட்புலனாகும் தேறிய பெறுமதி கம்பனி தொடர்ந்து நட்டம் அடைந்ததால். ரூபா 174.9 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் 2017 இன் வருடாந்த அறிக்கையின் பிரகாரம், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி வருமானம் 17.4 வீதத்தால் குறைந்த உலகளாவிய தேவையை பிரதிபலிக்கிறது. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிகளின் படி, கம்பனி 2016/2017 காலப்பகுதியில் வரி விகிதம் (-261.6 சதவீதம்) மற்றும் எதிர்மறை வட்டி மேவுகை விகிதம் (-25 சதவீதம்) போன்ற எதிர்மறை நிதி விகிதங்களைக் காட்டியது. 2017/2018 காலப்பகுதிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிகளின் பிரகாரம், ஆண்டுக்கான நட்டம் ரூபா 23.11 மில்லியன் ஆக இருந்ததுடன் நடைமுறை விகிதம் 4.91 இலிருந்து 3.48 ஆக குறைவடைந்துள்ளது. எனவே, அப்போது நிலவிய கம்பனியின் சாதகமற்ற நிதி நிலை மற்றும் செயலாற்றல் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் வங்கியால் மேற்படி கடன் வசதி வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

கூட்டுத்தாபன கடன் கொள்கை கையேட்டின் 8.1.i & 8.1.ii ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வருடாந்தம் அல்லது அரை ஆண்டுக்கு ஒரு விரிவான-கடன் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும், மேலும் கடன் தரப்படுத்தல் "B" மற்றும் அதற்குக் கீழே இருந்தால், வங்கி காலாண்டு வகைப்படுத்தல் செயன்முறை, காலாண்டு வாடிக்கையாளர் வருகை போன்றவற்றின் மூலம்

வங்கி 2018 ஆகஸ்ட் 17, 2019 மே 03 மற்றும் 2022 சனவரி 31 இல் முறையே ரூபா 38.09 மில்லியனிற்கு சமமான 02 ஐ.அ.டொலர் காலக் கடன் மற்றும் ரூபா 5.15 மில்லியனிற்கு சமமான இலங்கை ரூபாவுடன் 01 காலம்தாழ்த்தி மீளச்செலுத்துதல் மாற்றியமைக்கப்பட்ட ஐ.அ.டொலர் காலக் கடன் ஆகியவற்றை வழங்கியிருந்தது.

ரூபா 2.1 மில்லியனுக்கு சமமான மீதி 02 ஐ.அ.டொலர் கடன்கள் பணிப்பாளர் திருமதி பி எம் கே கமகேயின் தனிப்பட்ட உத்தரவாதத்திற்கு எதிராகப் பாதுகாக்கப்பட்டதுடன் ரூபா 5.33 மில்லியன் காலம்தாழ்த்தி மீளச்செலுத்தும் கடன் தொகை கடன் உடன்படிக்கைக்கு எதிராகப் பாதுகாக்கப்பட்டது.

வணிகத்தின் உரிமைக் கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு, வசதிகளை மறுசீரமைப்பதற்காக கம்பனியின் புதிய முகாமைத்துவத்துடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடாத்த முடிவு செய்யப்பட்டது.

சமீபத்திய முகாமைத்துவ மாற்றங்கள் இருந்த போதிலும், கம்பனி இதுவரை எந்த அறவீட்டுத் திட்டங்களையும் வழங்கியிருக்கவில்லை.

மறுசீரமைப்பு ஏற்பாட்டைக் கோரி வங்கி இறுதி நினைவூட்டல்களை கம்பனிக்கு அனுப்பியுள்ளது.

அத்தகைய ஏற்பாடு இல்லாத பட்சத்தில், கம்பனிக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கையை வங்கி தொடங்கும்.

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

ஒதுக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கடன் தரத்தை மதிப்பிட வேண்டும். எனினும் வாடிக்கையாளர் வருகை அறிக்கைகள் கணக்காய்வு மதிப்பாய்வுக்கான கோவையில் கிடைக்கவில்லை.

மேலும், 2022/2023 ஆண்டறிக்கையின் பிரகாரம், அந்தக் காலத்திற்கான நட்டம் ரூபா 17.75 மில்லியனாக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 61.46 மில்லியனாக இருந்தது. மேலும், 2021/2022 ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் 2.75 இலிருந்து 1.94 ஆக குறைவடைந்துள்ளது.

பணிப்பாளர் சபையில் இருந்து இரண்டு பணிப்பாளர்கள் 2023 நவம்பர் 20 இல் பதவி விலகினர்.

2023 செப்தெம்பர் 30 இல் வாடிக்கையாளரின் மொத்த நிலுவை மீதி ரூபா 41.08 மில்லியன் மற்றும் ரூபா 3.34 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 44.42 மில்லியனாக இருந்தது,

மொத்த நிலுவை மீதியில், கட்டுநாயக்க ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தின் ”கதிரனவத்த” என்ற காணியிலிருந்து ரீ.கே.தனசேன எல்.எஸ் ஆல் மேற்கொள்ளப்பட்ட 2006 பெப்ரவரி 21 ஆம் திகதிய 3804 ஆம் இலக்க திட்டத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள 49A மற்றும் 49B என குறிக்கப்பட்ட கணித்துண்டுகளின் குத்தகை உரிமைகள் மீதான ஒதுக்கீட்டிற்கு எதிராக ரூபா 39.09 மில்லியன் தொகை பெறப்பட்டது. அந்தச் சொத்துக்கான கடைசி மதிப்பீடு 2018 பெப்ரவரி 07 இல் எடுக்கப்பட்டு, கட்டாய விற்பனை பெறுமதி ரூபா 30 மில்லியன் காட்டப்பட்டது. இந்த மதிப்பீடு 2024 மார்ச் 12 இல் காலாவதியாகியிருந்தது. பாதுகாப்புக் கோவையில் விரிவான காப்புறுதி மேவுகை புதுப்பித்தல் காணப்படவில்லை. ரூபா 5.33 மில்லியன் தொகையான நிலுவை மீதி கடன் உடன்படிக்கைக்கு எதிராக பாதுகாக்கப்பட்டது.

தற்போது, கம்பனிக்கு எதிராக வங்கியால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**(ஈ) ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்**

ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட் முக்கியமாக பொது மற்றும் தனியார் துறைகளில் வீதி நிர்மாணம் மற்றும் கட்டிட நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ளது. மேலும், அவர்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகால் செயற்திட்டங்கள், அஸ்பால்ற் கொங்கிறீட் வழங்கல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

வங்கி தொகையான ரூபா 139 மில்லியன் தொகையான மூன்று (03) ரூபாய் காலக் கடன்கள், ரூபா 86 மில்லியன் தொகையான 03 மீளபட்டியலிடப்பட்ட ரூபாய் கடன்கள், ரூபா 554.85 மில்லியன் தொகையான ஐ.அ.டொலர் காலக்கடனின் (சுழற்சி) 15 தொடர்கள், ரூபா 47.11 மில்லியன் தொகையான 01 உத்தரவாதக் கடிதம், ரூபா 648 மில்லியன் 01 நாணயக் கடிதம், ரூபா 648 மில்லியன் தொகையான 01 உண்டியல்

15 ஐ.அ.டொலர் கால கடன்கள் சுழற்சி வசதிகள் அல்ல. உத்தரவாதக் கடித வரம்புத் தொகை ரூபா 300 மில்லியன் (சுழற்சி) ஆகும்.

விலைப்பட்டியல் பெறுமதிகளின் அடிப்படையில் இயந்திர அடமானங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

(இறக்குமதி LC's அங்கீகரிக்கப்பட்ட வரம்புக்கு உட்பட்டு நிறுவப்பட்டு, அந்தந்த இயந்திரங்களை இறக்குமதி செய்த பின்னர் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளன).

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளல் மற்றும் ரூபா 42.85 மில்லியன் தொகையான 8 குத்தகை வசதிகளை 2014 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் வழங்கியிருந்தது. இவை 2019 ஒக்தோபர் 25 ஆம் திகதியிலிருந்து செயற்பாடற்ற வகையின் கீழ் இருந்தன.

கம்பனியின் ஐ.அ.டொலர் காசுப்பாய்ச்சல் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, ஐ.அ.டொலர் வசதிகள் பல முறை மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

ஒரு செயற்பாடற்ற வங்கி மேலதிகப்பற்று வசதி 2019 மே 15 இல் மீள பட்டியலிடப்பட்டு பணிப்பாளர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்களுக்கு எதிராகப் பாதுகாக்கப்பட்டது. அதன் பிரகாரம், செயற்பாடற்ற வங்கி மேலதிகப்பற்று வசதியை மீண்டும் திட்டமிடும் போது வலுவான பிணைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. மேலும், மேற்கூறிய கடன் வசதிகளை மறுசீரமைக்கும் போது, கடன் பாதுகாப்பு மேவுகை விகிதம் (DSCR) முக்கியமாக கடன்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விதிமுறைகளை விடக் குறைவாக இருந்தது. மேலும், 2019 மார்ச் 11 ஆம் திகதிய CRIB அறிக்கையின் பிரகாரம் பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட 04 மறைமுக வசதிகளுக்காக கம்பனியின் பணிப்பாளர்களில் ஒருவர் CRIB இல் தோன்றினார். கம்பனியின் நிதி வலிமை வலுவாக இல்லாததால், பிரதம இடர் அதிகாரி 2019 மே 15 இல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேலும், கம்பனியின் காசுபப்பாய்ச்சல்கள் 2021 ஆம் ஆண்டு முதல் வங்கியின் மூலம் நடந்துகொண்டிருக்கும் செயற்திட்டங்களில் இருந்து அனுப்பப்பட்டிருக்காததுடன் வாடிக்கையாளரால் எதிர்பார்த்த காசுப்பாய்ச்சல்கள் தொடர்பான எந்த நம்பகமான ஆதாரங்களையும் சமர்ப்பிக்க முடியவில்லை. 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் கம்பனியின் நிதி ஒழுக்கம் திருப்திகரமாக காணப்படாததுடன் வரலாற்று நிதி திசைதிருப்பல் நடைமுறை கட்டுப்படுத்த முடியாததாக உள்ளது.

தற்போதுள்ள வசதிகளுக்கு முறையான தீர்வுத் திட்டம் இல்லாததைக் கருத்தில் கொண்டு, 2021 ஒக்தோபர் 22 இல் கடன் கோவைகள் அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவுக்கு மாற்றப்பட்டன. அதன் பின்னர் அடமானம் வைக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் முறையே 2023 யூன் 15, 2023 யூன் 26 மற்றும் 2023 ஆகஸ்ட் 03 ஆகிய திகதிகளில் அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவினால் பரீட்சிக்கப்பட்டதுடன் அந்த பரீட்சிப்பின் போது ஏறக்குறைய அனைத்து இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் பெறுமதி தவறாக மதிப்பிடப்பட்டிருந்தமையும், சில இயந்திரங்கள் கிடைக்காமல் இருந்தமையும் கண்டறியப்பட்டது. மேலும், அந்த இயந்திரங்களுக்கு வங்கி புதுப்பிக்கப்பட்ட காப்புறுதிக் கொள்கை எதையும் பெற்றிருக்கவில்லை. கடன் கோவையை BRRU இற்கு மாற்றிய பின்னர் கம்பனி தயா குரூப் லிமிட்டட், தயா அப்பேரல் எக்ஸ்போர்ட்ஸ் (DAEPL) மற்றும் ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்ஷன் (OCPL) ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட வசதிகளை பகுதியளவு அறவிடுவதற்காக ரூபா 450.0 மில்லியனை வைப்பு செய்திருந்தது.

அதன் பிரகாரம், BRRU ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்சனின் மொத்தக் கடன் வெளிப்பாட்டில் ரூபா 100.0 மில்லியன், மேலும் தயா அப்பேரல் ஏற்றுமதியிலிருந்து ரூபா 100.0 மில்லியன் மற்றும் மீதி தயா குரூப் லிமிட்டட்டின் மொத்த கடன் வெளிப்பாட்டிலிருந்து ரூபா 250.0 மில்லியன் மீதி ஆகியவற்றை அறவிட்டிருந்தது.

மேலதிக தகவல்களுடன் சாத்தியமான வணிகத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கும், செயன்முறையில் உள்ள முன்மொழியப்பட்ட மறுமலர்ச்சிப் பொதியைப் பாதுகாப்பதற்கு போதுமான உறுதியான பாதுகாப்பை வழங்கவும் வங்கி கோரியுள்ளது.

எனினும், கடனை அறவிடுவதில் எந்த முன்னேற்றமும் அவதானிக்கப்படவில்லை. மேலும் 2019 ஒக்தோபர் முதல் கம்பனிக்கு எதிராக வங்கியால் சட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
அதன்பின்னர், வணிகத்தைப் புதுப்பிப்பதற்கு கம்பனியின் பணிப்பாளர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம், 2023 ஆகஸ்ட் 16 இல் அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவிலிருந்து வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவுக்கு கடன் கோவைகள் மாற்றப்பட்டதால் அறவீட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. வங்கிக்கு புதிய முன்மொழிவைச் சமர்ப்பிப்பதற்கு கம்பனி வாய்மொழியாக ஒப்புக்கொண்டது, மேலும் வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு செயன்முறைக்காக கருத்தில் கொள்வதற்கு வங்கி 2023 ஆகஸ்ட் 16 இல் கடன் கோவைளை அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவிலிருந்து வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவுக்கு மாற்றியுள்ளது.
2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதி ரூபா 559.80 மில்லியன் மற்றும் ரூபா 158.41 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி மீதியுடன் ரூபா 718.21 மில்லியன் ஆகும். இயந்திரங்கள் மீதான அடமானம், தனிப்பட்ட உத்தரவாதம், கூட்டு மற்றும் பல உத்தரவாதங்கள், பொது கூறப்பட்ட கம்பனி பங்குகள் மீதான ஒதுக்கீடு, கூட்டுத்தாபன உத்தரவாதம், வாகனங்கள் மீதான குத்தகை உடன்படிக்கை, கம்பனியின் எதிர் இழப்பீடு, நாணயமாற்று பட்டியல்கள், நகர்த்தல் ஆவணங்கள், வங்கியின் நிர்மாணக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அடிப்படை பொருட்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயன்பாட்டு வரைவு ஆகியவற்றிற்கு எதிராக ரூபா 1,036.35 மில்லியன் மொத்த நிலுவை தொகை பாதுகாக்கப்பட்டது.

**(உ) தயா குரூப் (பிறைவேட்) லிமிட்டட்**

தயா குரூப் (பிறைவேட்) லிமிட்டட்டானது தயா தொகுதியில் உள்ள ஏனைய கம்பனிகளின் ஹோல்டிங் கம்பனியாகும், மேலும் கம்பனி தொகுதியில் உள்ள கம்பனிகளுக்கு முகாமைத்துவ மற்றும் நிர்வாக மேற்பார்வை மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது.
வங்கி 2017 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் ரூபா 1,297.79 மில்லியன் தொகையான 02 ஐ.அ.டொலர் காலக் கடன்கள், ரூபா 200 மில்லியன் தொகையான 03 நம்பிக்கைப்பொறுப்பு பெறுவனவு கடன்கள் (ஒருமுறை மற்றும் அனைத்திற்கும்) மற்றும் 01 வங்கி மேலதிகப்பற்று வசதி ஆகியவற்றை வழங்கியுள்ளது. அவை 2019 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டிருந்தன.
2017 யூன் 23 இல் ஐ.அ.டொலர் காலக் கடன் வசதிகளை வழங்கும் நேரத்தில், 2017 ஜனவரி 13 ஆம்

தயா அப்பரல் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் நிதி நிலைமையை மறுசீரமைப்பதற்காக மேற்கூறிய இரண்டு காலக் கடன்கள், ஹோல்டிங் கம்பனிக்கு பொறுப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் வழங்கப்பட்டன. அதே நேரத்தில் தயா அப்பரல் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் நல்ல நிதி நிலைமையுடன் வருங்கால வாங்குபவர்களை ஈர்ப்பதற்கு தயா குரூப் (பிறைவேட்) லிமிட்டட் மூலம் இந்த ஏற்பாடு முன்மொழியப்பட்டது.
கடன் கோவையை BRRU

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

திகதிய CRIB அறிக்கையின் பிரகாரம், கம்பனியும் இரண்டு பணிப்பாளர்களும் CRIB இல் தோன்றினர். மேலும், கம்பனியின் நடைமுறை விகிதம்/ திரவத்தன்மை 0.7 ஆக இருந்ததுடன் வங்கியின் கடன் கொள்கையின் பிரகாரம் நடைமுறை விகிதம் 1 ஆக இருக்க வேண்டியதுடன் கடன் பாதுகாப்பு மேவுகை விகிதம் (DSCR) ஏற்றுக்கொள்ளக்கூடிய விதிமுறைகளுக்குக் குறைவாக இருந்தது. கடன் வழங்கும் போது கம்பனி சிறப்பாக செயற்படவில்லை என்பது தெளிவாகிறது.

கம்பனி 2018 பெப்ரவரி 09 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு தியபெதும, கட்டுகெலியாவவில் உள்ள சிங்க லங்கா ரைஸ் (பிறைவேட்) லிமிட்டட் வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு கடைகளை குத்தகைக்கு எடுத்ததுடன், மேற்கூறிய கடன் வசதிகளின் பெறுவனவுகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்களை சேமித்து வைக்கும் நோக்கத்துடன் இருந்தது. எனினும், 2018 ஏப்ரல் 20 ஆம் திகதிய வடமத்திய மாகாண AGM இன் கடிதத்தின் பிரகாரம், சிங்க லங்கா ரைஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் தயா தொகுதியின் முகாமைத்துவத்திற்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதெனவும், அதன் காரணமாக அரிசி ஆலையின் செயற்பாடுகளுக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேற்குறிப்பிட்ட வளாகத்தில் உள்ள நெல் இருப்புகளை வங்கி பரீட்சிப்பை மேற்கொண்டதுடன், தற்போதுள்ள நெல் இருப்பு பெறுமதி TR வசதிகளின் நிலுவை வெளிப்பாட்டை மேவுகை செய்வதற்கு போதுமானதாக இல்லாதமை அவதானிக்கப்பட்டது. எனவே, TR கடன்களின் தற்போதைய இருப்பு நிலை மற்றும் அந்த நேரத்தில் அவற்றின் தீர்ப்பனவுத் திட்டம் குறித்து எழுத்துமூல உறுதிப்படுத்தலை வங்கி கோரியுள்ளது. மேலும், 2018 சனவரி 30 ஆம் திகதிய விஞ்ஞாபனத்தின் பிரகாரம் வங்கியால் மாதாந்த பரீட்சிப்புக்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி விஞ்ஞாபனத்தின் பிரகாரம் அரிசி ஆலையை கையகப்படுத்துவதில் தோல்வியுற்றால், கம்பனி இருப்புக்களை விற்று வங்கி நிலுவைகளை தீர்ப்பனவு செய்ய முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் கம்பனி அரிசி இருப்புக்களை விற்பதன் மூலம் ரூபா 259.2 மில்லியன் மொத்த வசதி நிலுவையில் ரூபா 59.2 மில்லியன் பெறுமதியான TR கடன் வசதிகளை மாத்திரமே தீர்ப்பனவு செய்துள்ளது.

மேலும், 2020 திசெம்பர் 30 இற்குப் பின்னர், கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வங்கியால் பெறப்படவில்லை என்பதும், 2019 முதல் கம்பனியின் காசுப்பாய்ச்சல் வங்கியின் மூலம் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. கம்பனிக்கு எதிராக வங்கியால் நிறைவேற்றப்பட்ட கடன் அறவீடு மற்றும் சட்ட நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றமும் இல்லாதமை

இற்கு மாற்றிய பின்னர், கம்பனி தயா குரூப் லிமிட்டட், தயா அப்பேரல் எக்ஸ்போர்ட்ஸ் (DAEPL) மற்றும் ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்ஷன் (OCPL) ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட வசதிகளை பகுதியளவு அறவிடுவதற்காக ரூபா 450.0 மில்லியனை வைப்புச் செய்திருந்தது.

அதன் பிரகாரம், BRRU ஒலிம்பஸ் கென்ஸ்ட்ரக்சனின் மொத்தக் கடன் வெளிப்பாட்டில் ரூபா 100.0 மில்லியன், மேலும் தயா அப்பேரல் ஏற்றுமதியிலிருந்து ரூபா 100.0 மில்லியன் மற்றும் மீதி தயா குரூப் லிமிட்டட்டின் மொத்த கடன் வெளிப்பாட்டிலிருந்து ரூபா 250.0 மில்லியன் மீதி ஆகியவற்றை அறவிட்டிருந்தது.

மேலதிக தகவல்களுடன் சாத்தியமான வணிகத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கும், செயன்முறையில் உள்ள முன்மொழியப்பட்ட மறுமலர்ச்சிப் பொதியைப் பாதுகாப்பதற்கு போதுமான உறுதியான பாதுகாப்பை வழங்கவும் வங்கி கோரியுள்ளது.

அவதானிக்கப்பட்டது.

2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான மொத்த நிலுவை மீதி ரூபா 1,195.79 மில்லியன் மற்றும் ரூபா 424.17 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 1,619.96 மில்லியன் ஆக இருந்தது.

மொத்த நிலுவையில் A3-R2-P10.80 அளவைக் கொண்ட அம்பாறை வெவ்கம்பட்டு, H வலயத்தில் அமைந்துள்ள அம்பாறை நகர சபை எல்லைக்குள் லயன் எஸ்.நேசராஜா எல்.எஸ் ஆல் மேற்கொள்ளப்பட்ட 2016 ஒக்தோபர் 19 ஆம் திகதிய எஸ்என்ஆர்/2016/3145 ஆம் இலக்க திட்டத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள 3 குறிக்கப்பட்ட காணித்துண்டுகளின் குத்தகை உரிமைகள் மற்றும் வட்டிக்கு எதிராக ரூபா 742.62 மில்லியன் தொகை பாதுகாக்கப்பட்டது. எனினும், சொத்தின் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் விரிவான காப்புறுதி மேவுகை புதுப்பித்தல் ஆகியவை கணக்காய்வு மதிப்பாய்வுக்கான பாதுகாப்புக் கோவையில் காணப்படவில்லை. ரூபா 877.34 மில்லியன் நிலுவை தொகை அதன் பணிப்பாளர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்களுக்கு எதிராக பாதுகாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, தயா குரூப் (பிறைவேட்) லிமிட்டட்டின்கடன் கோவைகள் 2023 பெப்ரவரி 27 இல் வங்கியின் வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவுக்கு வணிகத்தின் மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வுக்காக மாற்றப்பட்டிருந்தது.

4 **மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்**

கணிசமான நட்டங்கள் ஏற்பட்டதன் காரணமாக நிறுவனம் அதன் தொடக்கத்திலிருந்து நிதி நெருக்கடிகளை அனுபவித்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் இயக்கப்பட்டது. மேலும், 2015 இல் அரசாங்கம் அறிமுகப்படுத்திய மறுமலர்ச்சி உத்தி வெற்றியளிக்கவில்லை. 2016 ஒக்தோபர் மாதத்தில் செயற்பாடுகளை நிறுத்தியதன் மூலம் கம்பனியின் பின்னரான செயற்பாடுகள் (குத்தகை அடிப்படையில் பாதைகள் மற்றும் மீதமுள்ள விமானங்கள்) ஸ்ரீ லங்கன் ஏயார்லைன்ஸிற்கு வழங்கப்பட்டது. கம்பனி தற்போது இயங்காததுடன் கலைக்கப்பட்டுள்ளது.

2015 முதல் 2016 வரையிலான காலப்பகுதியில் வங்கி 03 கடன்களையும் 01 வங்கி மேலதிகப்பற்று வசதியையும் வழங்கியிருந்தது, அவை 2023 ஏப்ரல் 03 முதல் செயற்பாடற்ற வகையின் கீழ் இருந்தன.

ஆண்டொன்றிற்கு AWPLR + 2.5% வட்டி விகிதத்தில் திறைசேரி ஆறுதல் கடிதத்திற்கு எதிராக 2015 திசெம்பர் 10 ஆம் திகதிய சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2015 திசெம்பர் 31 இல் வங்கி ரூபா 1,650 மில்லியன் (கடன் வசதி இல. 78409763) கடன் வசதியை வழங்கியுள்ளது. பணிப்பாளர் சபையால் முதலில் அங்கீகரிக்கப்பட்ட AWPLR+ 3.0% விகிதத்தில் இருந்து

2022.12.29 இல் பொது திறைசேரியின் ஆறுதல் கடிதத்திற்கு எதிராக வங்கி மீண்டும் கோரிக்கையை பதிவு செய்துள்ளது, அதைத் தொடர்ந்து முறையே 2023.02.02, 2023.03.16 மற்றும் 2023.10.06 ஆகிய திகதிகளில் மூன்று நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டன. பின்னர் பொது திறைசேரி ஆறுதல் கடிதத்தின் செல்லுபடியாகும் காலத்தை 2024 திசெம்பர் 31 வரை அல்லது கலைப்பு செயன்முறை முடிவடையும் வரை நீடித்துள்ளது.

எனினும், தற்போது மேற்கூறிய கடன் வசதிகள் கட்டம் III ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 5,146.8

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

ஆண்டொன்றிற்கு AWPLR+ 2.5% வரை வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு எந்த சபை அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.
இரண்டு பணிப்பாளர்கள் வெளிநாட்டில் இருப்பதால், அவர்கள் தேவையின் அவசரத்தைக் கருத்தில் கொண்டு, அவர்கள் இல்லாத காரணத்தால் நிலுவையில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் இந்தக் கடன் வசதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2015 திசெம்பர் 31 இல் AGM (கூட்டுத்தாபன உறவுகள்) இடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டது.
கடன் பகுப்பாய்வின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஒக்தோபர் 04 ஆம் திகதிய கடன் மதிப்பீட்டு குறிப்பின் பிரகாரம், கம்பனி 2011 முதல் நட்டத்தில் இயங்கி வருகிறது. மீளாய்வு காலத்தில், கம்பனி தொடர்ந்து நட்டம் அடைந்ததால், கம்பனியின் எதிர்மறை தெறிய பெறுமதி அதிகரித்துள்ளது. கம்பனியின் கடந்த கால நிதிக்கூற்று புள்ளிவிபரங்கள், எதிர்மறையான மொத்தலாபம், தொழில்துறை விதிமுறைகளுடன் ஒப்பிடும் போது கடன் பாதுகாப்பு மேவுகை விகிதம் (DSCR) குறைவாக உள்ளமை, தொழில் தரநிலைகளுக்குக் குறைவான நடைமுறை விகிதம் மற்றும் எதிர்மறை குறுகிய கால கடன் - மூலதன விகிதம் மற்றும் மொத்த கடன் மூலதன விகிதம் ஆகியவற்றைக் காட்டுகிறது.
கம்பனியின் கணக்காய்வாளர் பொருண்மையான நிச்சயமற்ற தன்மையைக் குறிப்பிட்டுள்ளதுடன் கம்பனி தொடர்ந்து செயற்படும் திறனைப் பற்றிய குறிப்பிடத்தக்க சந்தேகத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.
வங்கி வழங்கப்பட்டிருந்த ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் கொண்ட 80022413 மற்றும் 80139632 ஆகிய கடன் இலக்கங்களின் கீழ் மேலும் இரண்டு கடன் வசதிகளை மிஹின் லங்கா அதனது செயற்பாடுகளை நிறுத்திய பின்னர் வழங்கியிருந்தது. "நிறுத்தல் அறிவிப்பு" இன் பிரகாரம் மிஹின் லங்கா அனைத்து மிஹின் லங்கா விமானங்கள் மற்றும் சேவைகளை 2016 ஒக்தோபர் 30 முதல் நிறுத்துவதாக அறிவித்தது. எனினும் கடன்கொடுத்தோர் நிலுவையின் பகுதியைத் தீர்ப்பனவு செய்வதற்காக 2016 நவம்பர் 04 இல் ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் முதலாவது வசதியும் 2016 திசெம்பர் 02 இல் இரண்டாவது வசதியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மிஹின் லங்கா கலைக்கப்பட்டு ஸ்ரீ லங்கன் ஏயார்லைன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் கீழ் இயங்கும் என்பதை வங்கி அறிந்திருந்ததுடன், வசதிகளை அங்கீகரிக்கும் போது அதுகருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மேற்கூறிய இரண்டு வசதிகளையும் வழங்கும் போது, 04 மாத அசல் தவணைக்காலத்துடன் (2015 திசெம்பர் 31 முதல் 2016 மார்ச் 31 வரையிலான காலப்பகுதி) ரூபா 1,650 மில்லியனுக்கு முன்னர் வழங்கப்பட்ட வசதி, பொது திறைசேரி வழங்கிய ஆறுதல் கடிதத்தின்

மில்லியன் ஆகும், இதில் மூலதனம் மற்றும் வட்டி மீதி முறையே ரூபா 3,135.0 மில்லியன் மற்றும் ரூபா 2,011.80 மில்லியன் உள்ளடங்குகிறது. மொத்த நிலுவைத் தொகையான ரூபா 5,146.8 மில்லியன் பொதுதிறைசேரியால் வழங்கப்பட்ட ஆறுதல் கடிதங்களுக்கு எதிராக பாதுகாக்கப்பட்டது.
2024.08.08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட வசதிகளின் தீர்ப்பனவு ஏற்பாடு குறித்து கலந்துரையாடுவதற்கு பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கலந்துரையாடல் கோரப்பட்டது.
மேலும், திறைசேரி உத்தரவாதத்தின் மீது தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை தொடர்பாக பொது திறைசேரிக்கு 2024.08.29 இல் நினைவூட்டல் அனுப்பப்பட்டது.
நீதிமன்றத்தில் முடிவுறுத்தல் வழக்கின் (வழக்கு இல. 4/2018/சீஓ) அடுத்த விசாரணை திகதிஇல் கலைப்பவரின் அறிக்கையை கருத்தில் கொள்வதற்காக 2024.11.29 ஆகும். கலைப்பாளர் தனது அறிக்கையை 2024.09.27 இல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

செல்லுபடியாகும் கால நீடிப்புக்கு ஏற்ப நீடிக்கப்பட்டது. அந்த வசதிகளின் அசல் திருப்பிச் செலுத்தும் காலப்பகுதி 03 - 10 மாதங்களாக (குறுகிய கால அடிப்படையில்) இருந்தது. இது அந்தந்த காலக் கடன்களுக்கான பிணையாக வழங்கப்பட்ட ஆறுதல் கடிதங்களின் காலாவதி திகதியுடன் ஒத்துப்போகிறது. அதன் பின்னர் பொது திறைசேரியால் ஆறுதல் கடிதத்தின் செல்லுபடியாகும் காலத்திற்கான நீடிப்பு கிடைத்தவுடன், கடன் குழு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் திருப்பிச் செலுத்தும் காலப்பகுதி பல முறை நீட்டிக்கப்பட்டது. திருப்பிச் செலுத்தும் காலத்தை 2022 திசெம்பர் 31 வரை அல்லது கலைப்பு செயன்முறை முடிவடையும் வரை எது முன்னதாக நிகழ்கிறதோ அது வரை நீடிப்பதற்கு பணிப்பாளா சபை 2022 ஏப்ரல் 04 இல் அங்கீகாரம் அளித்தது. 2018 யூலை 09 இல் வங்கியானது கலைப்பாளரின் கோரிக்கையை பதிவு செய்துள்ளது. மேலும், 2021 நவம்பர் 24 இல் பொது திறைசேரியின் ஆறுதல் கடிதத்திற்கு எதிராக வங்கி ஏற்கனவே கோரிக்கையை பதிவு செய்துள்ளது, பின்னர் பொது திறைசேரி ஆறுதல் கடிதத்தின் செல்லுபடியாகும் காலத்தை 2022 டிசம்பர் 31 வரை அல்லது கலைப்பு செயன்முறை முடிவடையும் வரை பின்வருவனவற்றில் எது முந்தையதோ அது வரை நீடித்துள்ளது.

| ஆறுதல் கடித இல. | பெறுமதி | | வழங்கப்பட்ட திகதி | புதுப்பிக்கப்பட்ட திகதி | காலாவதி திகதி |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | | | |
| TO/REV/LC/ 495/8 | | 1,650 | 28.07.2015 | 10.12.2021 | 2022.12.31 அல்லது கலைப்பு செயல்முறை முடியும் வரை, இதில் எது முதலில் வருகிறதோ அது வரை |
| TO/REV/LC/ 460/19 | 2.5 | | 28.07.2015 | | |
| TO/REV/LC/ 482/15 | 2.5 | | 07.10.2016 | | |

எனினும், மேற்கூறிய கடன் வசதிகள் தற்போது செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2023 செப்தெம்பர் 30 இல் வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதி ரூபா 4,753.62 மில்லியனாக இருந்தது, இதில் மூலதனம் மற்றும் வட்டி மீதி முறையே ரூபா 3,272.30 மில்லியன் மற்றும் ரூபா 1,481.32 மில்லியன் உள்ளமடங்குகின்றன. மொத்த கடன் நிலுவைத் தொகையான ரூபா 4,753.46 மில்லியன் பொது திறைசேரியால் வழங்கப்பட்ட ஆறுதல் கடிதத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டது. மொத்த நிலுவைத் தொகையில் ரூபா 0.16 மில்லியன் நடைமுறை கணக்கு இல. 5843011 இன் வங்கி மேலதிகப்பற்று மீதியை குறிக்கிறது.

5 **டபிள்யூ எம் மென்டிஸ் & கம்பனி லிமிட்டட்**

கம்பனி 1947 இல் கூட்டிணைக்கப்பட்டதுடன் தேங்காய் மற்றும் கலப்பு அரக்கு தயாரிப்புக்களை காய்ச்சி உற்பத்திசெய்தல் மற்றும் எத்தனோல் உற்பத்தி செய்தலில் ஈடுபட்டுள்ளது. 2016 செப்தெம்பர் 07 இல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2016 ஒக்தோபரில் வழங்கப்பட்ட கடன் வசதியின் மூலதனம் மற்றும் வட்டி நிலுவையை மூலதனமாக்குவதற்காக முறையே ரூபா 2,055 மில்லியன், ரூபா 240 மில்லியன், ரூபா 500 மில்லியன், ரூபா 32.58 மில்லியன் மற்றும் ரூபா 1,398.2 மில்லியன் தொகையான ஐந்து மீள பட்டியலிடப்பட்ட கடன் வசதிகளை வங்கி வழங்கியுள்ளது. அந்த வசதிகள் 2018 முதல் செயற்பாடற்ற வகையில் உள்ளன.

பேபற்சுவல் ரெசறீஸ் மீதான CBSL பிணைமுறி மோசடி அறவிடுபவர்கள் காரணமாக 2016 ஆம் ஆண்டில் பான் ஏசியா வங்கியில் நிலுவையாக உள்ள மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்காக வழங்கப்பட்ட அசல் கடன் பொதி 2018 சனவரியில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது. பின்னர் 2018 சனவரி 01 இல் கம்பனியின் நடைமுறைக் கணக்குகள் முடக்கப்பட்டிருந்தன, கம்பனியின் பணிப்பாளர் 2018 பெப்ரவரியில் கைது செய்யப்பட்டதுடன் மதுபான உற்பத்தி உரிமம் கலால் திணைக்களத்தால் இரத்து செய்யப்பட்டது. கம்பனி 2018 ஏப்ரல் 27 இல் மதுபான உரிமத்தை மீண்டும் பெற்று, 2018 மே மாத தொடக்கத்தில் மதுபான உற்பத்தியை மீண்டும் தொடங்கியது. மீண்டும் கலப்பு உரிமம் மற்றும் மதுபான உற்பத்தி உரிமம் 2020 இல் கலால் திணைக்களத்தால் இரத்து செய்யப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் ஆரம்ப கடன் வசதிகளை வழங்கும் போது, வங்கி மதுபான இருப்புக்களை பிணையாகக் கருதியது, பின்னர் 2020 ஆம் ஆண்டில் அது பிணையாக கருத இயலாமையால் நீக்கப்பட்டது. gilt edged அரசாங்க பிணையாக இல்லாததால், உரித்துறுதியை எளிதில் மாற்றவும், பெறுமதியை விரைவாக பணமாக்கவும் முடியும்.

கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிகள் கிடைக்காததால், 2019 முதல் கம்பனிக்கு இடர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. வங்கியின் பிரதம இடர் அதிகாரி (CRO) 2023 மார்ச் 23 இல் 2021/2022 ஆம் கடைசி ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை பெற்றுக்கொள்வதற்கு 2023 மே 31 இல் அல்லது அதற்கு முன்னர் பெற்றுக்கொள்வதற்கும் 2019/20, 2020/2021 இற்கான முந்தைய நிதிநிலைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதற்கேற்ப மதிப்பீடுகள் நாளதுவரையாக்குவதற்கும் நிபந்தனை விதித்துள்ளார். எனினும், வங்கியானது மேற்படி நிதிநிலையைப் பெற்றிருக்காததுடன் அதற்கேற்ப இடர் மதிப்பீட்டைப் புதுப்பித்திருக்கவில்லை. எனினும், வங்கி குறிப்பிட்ட

2023.03.31 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், தற்போதுள்ள பிணைகளுக்கு எதிராக மொத்த கடன் போர்ட்போலியோவை மீளப்பட்டியலிடுவதற்கும், புதிய நாணயக் கடிதம்/ விலைப்பட்டியல் ஏற்பு/ ரூபா 110.0 மில்லியன் கடன் வரம்பின் தொடர்களை ஒரே நேரத்தில் வழங்குவதற்கும் மற்றும் எதனோல் உற்பத்தி செயற்பாட்டை தொடர்ந்து தொடர்ச்சியான அடிப்படையில் இயக்குவதற்கு தேவையான உலர்த்தும் குழாய் தொகுப்பை (இயந்திரங்களின் ஒரு பகுதி) அனைத்து அடிப்படையில் இறக்குமதி செய்வதற்கும் பெறப்பட்டிருந்தது. கம்பனியின் வணிக மறுமலர்ச்சியைக் கருத்தில் கொண்டு இந்த வசதி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன்

புதிய இயந்திர பாகம் இறக்குமதி செய்யப்பட்டு கல்குடா தொழிற்சாலையில் நிறுவப்படும் வரை 4 மாத தயவுக்கால அவகாசத்துடன் நிலையான மூலதனக் கொடுப்பனவு முறையில் மீள்கொடுப்பனவு கட்டமைக்கப்பட்டுள்ளது. 2023 யூன் மாதத்தில் மீள்பட்டியல் வசதிகள் வழங்கப்பட்டன. இருப்பினும், பாதகமான வானிலை மற்றும் வாடிக்கையாளர் விளக்கிய பல்வேறு காரணங்களால் இயந்திரத்தின் வருகை மற்றும் தொழிற்சாலை வளாகத்தில் அதை நிறுவுவது எதிர்பாராத விதமாக தாமதமானது. உலர்த்தி குழாய் 2024 தொகுப்பு பெப்ரவரி முதல் செயற்பாட்டில் உள்ளது. தற்போது தயாரிப்பு மூலம் கோழித் தொழிலுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனினும், எதிர்பார்த்தவாறு எதனோல்

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

நிபந்தனைக்கு இணங்காமல் பழைய இடர் மதிப்பீட்டின் அடிப்படையில் வசதிகளை மாற்றியமைத்துள்ளது. கூட்டுத்தாபன கடன் கொள்கை கையேட்டின் 2023/2024 இன் 6.1.8 ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தக கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக புகழ்பெற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய தேறக்கூடிய புத்தகக் கடன்களை (பொதுவாக மூன்று மாதங்களுக்கும் குறைவானது) இரவு நேரத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட பிணைமுறி மூலம் வங்கிக்கு ஒதுக்கலாம். குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறையாவது வங்கியின் மதிப்பாய்வுக்கு உட்பட்டு, பிணையின் ஏற்றுக்கொள்ளலைச் சரிபார்க்க வேண்டும். எனினும், வசதிகளை மீளப்பட்டியலிடும் நேரத்திலும் அதற்குப் பின்னரும் வங்கி இந்த நிபந்தனைக்கு இணங்கவில்லை.

கூட்டுத்தாபன கடன் கொள்கை கையேடு 2023/2024 இன் 6.3 ஆம் பிரிவின் பிரகாரம் ”C” மற்றும் அதற்குக் கீழே மதிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பற்ற வசதிகள் வழங்கப்படக்கூடாது. ”AAA - BB” இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களின் விடயத்தில், பாதுகாப்பற்ற வசதிகளை மாத்திரமே கருத்தில் கொள்ள முடியும். எனினும், புதுப்பிக்கப்பட்ட இடர் மதிப்பீடு கிடைக்காததால் அந்த நிபந்தனையை கம்பனிக்குப் பயன்படுத்துவது கடினமாக இருந்தது. மேலும் 2023 மார்ச் 23 இல் மீளப்பட்டியலிடப்பட்ட வசதி குறித்த CRO இன் கருத்துப்படி, காசுப்பாய்ச்சல்களில் நியாயமான பங்கு வங்கி மூலம் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியின் காரணமாக கூறப்பட்ட நிபந்தனையை விலக்குவதற்கு பணிப்பாளர் சபை அதன் அங்கீகாரத்தை அளித்ததுடன் மக்கள் வங்கி தமது நிலுவைகளை அறவிடுவதற்காக வங்கியின் மூலம் காசுப்பாய்ச்சலைத் தடுப்பதன் மூலம் நீதிமன்ற உத்தரவைப் பெறலாம்.

2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான வாடிக்கையாளரின் மொத்தச் செயற்பாடற்ற மீதி ரூபா 4,225.75 மில்லியன் மற்றும் ரூபா 209.49 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி மீதியுடன் ரூபா 4,435.24 மில்லியன் ஆக இருந்தது.

மொத்த நிலுவையில் 309/5 மற்றும் 309/5A, கொழும்பு வீதி, வெலிசர (3A.3R.1.66P) இல் அமைந்துள்ள அசையாச் சொத்துக்களுக்கு எதிராக ரூபா 4,435 மில்லியன்கள் பாதுகாக்கப்பட்டது, இதன் கட்டாய விற்பனை பெறுமதி ரூபா 625 மில்லியன் மற்றும் MV ரூபா 744.5 மில்லியன் (2023/05/28 இல் VRP) ஆகும். பெறுமதி மீளாய்வு குழு (VRP) வழங்கிய கட்டாய விற்பனை பெறுமதியிலிருந்து (FSV) 60 சதவீத நிலையான விதிமுறையை விலக்கி, சொத்தின் சந்தை பெறுமதியில் இருந்து 100 சதவீத முற்பணத்தை

தயாரிப்பு தொடர்ந்து இயங்கவில்லை.

மீள்பட்டியலிடல் கடன்கள் வழக்கமான அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

எனினும், கம்பனி தங்களின் வருமானத்தை மேம்படுத்தும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது BOC மூலம் சுமார் 80% இற்கும் அதிகமான காசுப்பாய்ச்சல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கம்பனி 2022 செப்தெம்பர் முதல் இன்றுவரை பூஜ்ஜியத்திலிருந்து ரூபா 660.0 மில்லியன் வரை தங்கள் மாதாந்த காசுப்பாய்ச்சலை அதிகரிக்கலாம். கடந்த ஆறு மாதங்களுக்குள் மாத சராசரியாக ரூபா 660.0 மில்லியன் காசுப்பாய்ச்சல் எங்கள் க/குகளுக்கு அனுப்பப்படுகின்ற போதிலும் தடையின்றி வணிகத்தைத் தொடர மதுபான உரிமத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தில் 55% இற்கும் அதிகமான கொடுப்பனவு கலால் வரி மற்றும் IRD கொடுப்பனவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, கம்பனி தங்கள் வணிக காசுப்பாய்ச்சல்கள் மூலம் அவர்களது தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்கு தற்போது நிதியளிக்கப்படுவதால் அவற்றின் விற்பனை கணிசமான அளவில் கிடைக்கும் வரை மீள்பட்டியலிடல் கடன்களுக்கான குறைந்தபட்சப் பகுதியை மாத்திரமே திரும்பப் பெறுமாறு கம்பனி கோரியுள்ளது. எங்களின் க/குகள் மூலம் பெறப்பட்ட விற்பனை பெறுவனவுகளிலிருந்து 2024 பெப்ரவரி அளவில் ரூபா 110.0 மில்லியன் கடன் வசதியை கம்பனி தீர்ப்பனவு செய்துள்ளது.

தற்போது, வங்கி மாதம்

கருத்தில் கொள்வதற்கு சபை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் கட்டாய விற்பனை பெறுமதி மொத்த நிலுவையில் 14 சதவீதத்தை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது.
2024 மார்ச் 04 இல் உள்ளவாறு இணங்கப்பட்டவாறு தற்போதுள்ள நிலுவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி தேவையான ஏற்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை.

ஒன்றுக்கு ரூபா 45.0 - 47.0 மில்லியனை (மாதாந்த தேவைப்பாடு - ரூபா 60.0 மில்லியன்) அறவிடுகிறது, மேலும் கம்பனி 2024 திசெம்பர் அளவில் அறவீட்டை தேவையான அளவிற்கு அதிகரிக்க ஒப்புக்கொண்டது.

**6. கே டி ஈபர்ட் & சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்)**

கம்பனி முக்கியமாக நிர்மாணத் துறையில் குறிப்பாக நெடுஞ்சாலைகள், பாலங்கள், சிவில் நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. வங்கியானது மேற்கூறிய வாடிக்கையாளருக்கு அதனது வணிகத்தை மேற்கொள்வதற்காக கடன் வசதிகளை வழங்கியதுடன் அவற்றில் 10 வசதிகள் 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு NPA ஆக பதிவு செய்யப்பட்டுள்ளன.
அவ்வப்போது, வங்கி NPA வசதிகளை மீளப்பட்டியலிட்டதுடன் வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டபடி நிலுவைகளை செலுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம், கம்பனியின் கடன் கோவைகள் வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவுக்கு மாற்றப்பட்டன, இது அவர்களின் வணிகங்களில் சிக்கல் வாய்ந்த வாடிக்கையாளர்களை புதுப்பிக்க நிறுவுகிறது. எனவே வங்கி 2021 மார்ச் 18 ஆம் திகதிய சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் புதிய மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 2,680.69 மில்லியன் கூட்டுமொத்தமான தற்போதுள்ள 88 NPA வசதிகளை மீளப்பட்டியலிட்டிருந்தது. அதன் பிரகாரம், மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 13,540.3 மில்லியன் (தற்போதுள்ள NPA வசதிகள் மற்றும் புதிய வசதிகள் உட்பட) மறுமலர்ச்சிப் பொதியை (நேரடி வசதிகள் ரூபா 6,540.3 மில்லியன் மற்றும் மறைமுக வசதிகள் ரூபா 7,000 மில்லியன்) வங்கி முன்மொழிந்திருந்தது. மேலும், மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 80204623 எண்ணைக் கொண்ட ஒரு கடனுக்கான ரூபா 20.39 மில்லியன் வட்டியை வங்கி தள்ளுபடி செய்துள்ளதுடன் 66000201600061800 எண்ணைக் கொண்ட குத்தகை வசதிக்கு எதிராக ரூபா 310,150.63 எதிர்கால வட்டியைத் தள்ளுபடி செய்துள்ளது. அதன்பின்னர், சபை 2023 யூலை 11 இல் 2.8 ஆம் இலக்க சபை கூட்டக்குறிப்பின் பிரகாரம் ரூபா 700 மில்லியன் கூட்டுமொத்தமான 57 கடன்களின் முதிர்வு காலத்தை 2023 திசெம்பர் 31 வரை மேலும் ஒன்பது மாதங்களுக்கு நீடிப்பதற்கும் (மொத்த நீடிக்கப்பட்ட காலம் 21 மாதங்களாகும்) KDESH இற்கு வழங்கப்பட்ட கடன்களின் கடைசி தவணையில் மூலதனம் மற்றும் வட்டியை தீர்ப்பனவு செய்வதற்கு கொடுப்பனவு அட்டவணையை திருத்தி நீடிப்பு மற்றும்

முன்னைய செயற்பாடற்ற கடன்களை மீளப்பட்டியலிடுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெறும் போது முற்பண அளவை தீர்மானிக்கும் போது வங்கியின் குழு மதிப்பீட்டாளரால் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து சொத்துகளின் சந்தை பெறுமதிக்கும் எதிராக 100% முற்பண விலைவிகிதத்தை கருத்தில் கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றனர்.
2021 ஆம் ஆண்டில் மறுமலர்ச்சி நோக்கத்திற்காக ஈ டி ஈபேர்ட் & சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டை (KDESH) வங்கி கருத்தில் கொண்டிருந்ததுடன் 2021.03.21 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் மறுமலர்ச்சி பொதிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. மறுமலர்ச்சிப் பொதியின் கீழ், வங்கியானது மீள்பட்டியலிடலை நடைமுறைப்படுத்திய திகதியில் மொத்த அட்டுறு வட்டியில் 1.08% ஆக இருந்த ரூபா 20.39 மில்லியன் அட்டுறு வட்டியை தள்ளுபடி செய்யும் போது ரூபா 2,740.0 மில்லியன் மூலதன நிலுவையையும், ரூபா 1,134.0 மில்லியன் அட்டுறு வட்டியையும் மீளப்பட்டியலிட்டுள்ளது.

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

ஒத்திவைப்புக்களை அமுல்ப்படுத்தும் திகதி வரை தாமதம்/அபராத வட்டியை தள்ளுபடி செய்வதற்கும் அங்கீகாரம் அளித்திருந்தது.

எனினும், எதிர்பார்த்த காசுப்பாய்ச்சல்கள் எதிர்பார்த்தவாறு ஏற்படவில்லை, தற்போது மேற்கூறிய கடன் வசதிகள் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2023 செப்தெம்பர் 30 இல் செயற்பாடற்ற வசதிகளின் மொத்த செலுத்த வேண்டிய நிலுவை மீதி ரூபா 3,538.75 மில்லியன் மற்றும் ரூபா 700.8 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி மீதியுடன் ரூபா 4,239.55 மில்லியனாக இருந்தது,

மொத்த நிலுவைத் தொகையில், 2021 ஆம் ஆண்டில் பல திகதிகளில் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 844.5 மில்லியன் மொத்த கட்டாய விற்பனை பெறுமதியுடைய பன்னிபிட்டிய கிராமம், ”மெத்யகனே, முதுகல & கொசுரே” கிராமங்கள், கொத்தலாவல, பெலன்வத்த கிராமம், கொழும்பு 8, ஹோமாகம, உடஹமுல்ல மற்றும் மருதானை ஆகிய இடங்களில் அமைந்துள்ள வர்த்தக சொத்துக்களுக்கு எதிராக ரூபா 1,213 மில்லியன் பாதுகாக்கப்பட்டுள்ளது. மொத்த நிலுவையானது அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் மொத்த கட்டாய விற்பனை பெறுமதியில் 143.6% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேலும், 2021 மே 31 இல் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், மொத்த கட்டாய விற்பனை பெறுமதி ரூபா 2,096 மில்லியன் கொண்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு எதிராக ரூபா 1,786.51 மில்லியன் பாதுகாக்கப்பட்டது. மொத்த நிலுவைத் தொகையானது வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் கட்டாய விற்பனை பெறுமதியில் 85.2% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீதமுள்ள NPA மீதி ரூபா 1,240 மில்லியன், இது மொத்த NPA மீதியில் 29% தனிப்பட்ட மற்றும் பணிப்பாளர் உத்தரவாதங்களுக்கு எதிராக பாதுகாக்கப்பட்டது.

**7. சின்டெசி லிமிட்டட்**

கம்பனி முக்கியமாக ஆடைத் தொழிலில் ஈடுபட்டுள்ளது. ஆரம்பத்தில் சின்டெசி லிமிட்டட் பிறன்டிக்ஸ் லங்கா லிமிட்டட்டின் கூட்டு முயற்சியாக செயற்பட்டதுடன் 2009 இல் பிறன்டிக்ஸ் அவர்களின் பங்குகளை மீளப் பெற்றது. வங்கியின் பொறுப்புக்கு சேவை செய்ய இயலாமையால், கம்பனி 2016 இல் அதன் செயற்பாடுகளை நிறுத்துவதை உறுதி செய்தது.

2007 முதல் 2017 வரையிலான காலப்பகுதியில் கரைகடந்த வங்கிப் பிரிவினால் காலக் கடன்கள் மற்றும் ஐ.அ.டொலரில் குறிப்பிடப்பட்ட மீளப்பட்டியலிடப்பட்ட வசதிகள் மற்றும் 02 தற்காலிக மேலதிகப்பற்று வசதிகள் உள்ளிட்ட ஆறு கடன் வசதிகள் வழங்கப்பட்டன. இவை 2020 ஆகஸ்ட் 04 இல் செயற்பாடற்ற வகையின் கீழ்

ஐ.அ.டொலர் 6.752 மில்லியன் தொகையான மீளப்பட்டியலிடப்பட்ட கடனின் கீழ் 2017/03/01 ஆம் திகதிய BOD அங்கீகாரத்தின் (2017.03.01/ 2.15) பிரகாரம் வழங்கப்பட்ட வசதிகள் பின்வருமாறுள்ளன:

(i) கால கடன் - (முதலில் அங்கீகரிக்கப்பட்ட USD 1 மில்லியன் தொகை 2011.08.08 இல் வழங்கப்பட்டது)

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

இருந்தன. தற்போதுள்ள கடன் வசதிகளை மறுசீரமைத்தல் மற்றும் மீளக்கட்டமைத்தல், மேலதிகப்பற்றை கடன் வசதிகளாக மாற்றுதல், 2016 முதல் NPA திகதி வரையிலான வட்டி/அபராத வட்டி/தாமதக் கொடுப்பனவு கட்டணத்தை தள்ளுபடி செய்தலை வங்கி வழங்கியிருந்த போதிலும் கம்பனியின் மொத்த கடன் வெளிப்பாடு படிப்படியாக அதிகரித்து அந்த காலப்பகுதியில் வசதிகளை திருப்பிச் செலுத்துவது குறைவடைந்துள்ளது.

பின்னர், வங்கியின் பணிப்பாளர் சபை 2017 மார்ச் 01 இல் (01.03.2017/2.15) பின்வருவனவற்றிற்கு அங்கீகாரம் அளித்தது.

- வாடிக்கையாளரிடமிருந்து வங்கி கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் போது, கடன் உடன்படிக்கையை ஒரு பிணையாக பாதுகாப்பதன் மூலம், நிலுவையாக உள்ள வசதிகளைப் பின்பற்றுவதற்காக, ஐ.அ.டொலர் 6.752 மில்லியன் தொகையான மிள்பட்டியலிடல் கடனை வழங்குதல்.

<u>**வசதிகள்**</u>

i) கால கடன்– USD 3.1 மில்லியன் (2007.10.02 இல் வழங்கப்பட்டது)
ii) கால கடன் – USD 0.324 மில்லியன் (2009.03. 23 இல் வழங்கப்பட்டது)
iii) கால கடன் USD 1.3 மில்லியன் (2011.08. 08 இல் வழங்கப்பட்டது)
iv) LC (Sight/Term) / ஏற்பு USD 4.0 மில்லியன்
v) ஹைபோதெகேஷன் கடன் (மேலே 4 இன் துணை வரம்பு) - USD 4.0 மில்லியன்
vi) ஏற்றுமதி விலைப்பட்டியல் பேச்சுவார்த்தை - USD 0.1 மில்லியன்

- வட்டி/அபராத வட்டியை தள்ளுபடி செய்தல் (ஏறத்தாழ 2017.01.31 இல் ஐ.அ.டொலர் 150,760) மற்றும் காலக்கடன்கள், ஹைபோதெகேஷன் கடன்கள், விலைப்பட்டியல் தள்ளுபடி மற்றும் மேலதிகப்பற்று வசதிகள் ஆகியவை மீளப்பட்டியலிடப்பட்ட காலக் கடன் வழங்கப்படும் வரை அட்டுறுவாக்கப்பட வேண்டும்.

2023 செப்தெம்பர் 30 இல் வாடிக்கையாளரின் மொத்த நிலுவை மீதி ரூபா 3,806.41 மில்லியனாக இருந்தது, இதில் மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி மீதி முறையே ரூபா 3,483.25 மில்லியன் மற்றும் ரூபா 323.16 மில்லியன் ஆகியவை உள்ளடங்குகிறது. மொத்த நிலுவைத் தொகையில் ஒரு கடனுடன் தொடர்புடைய ரூபா 805.48 மில்லியன் தொகை ரூபா 630 மில்லியன் கட்டாய விற்பனை பெறுமதியுடைய இல. 606B, ஸ்ரீ

(ii) கால கடன் - (முதலில் அங்கீகரிக்கப்பட்ட USD 1.7 மில்லியன் தொகை 2011.08.08 இல் வழங்கப்பட்டது)
(iii) கால கடன் - (முதலில் அங்கீகரிக்கப்பட்ட USD 1 மில்லியன் தொகை 2015.11.27 இல் வழங்கப்பட்டது)
(iv) USD 4 மில்லியன் LC வசதிக்கான ஹைபோதெகேஷன் கடன் வசதியின் துணை வரம்பு (முதலில் அங்கீகரிக்கப்பட்ட USD 4 மில்லியன் தொகை)
(v) விலைப்பட்டியல் தள்ளுபடி வசதியின் துணை வரம்பு ஹைப்போதெகேஷன் கடன் வசதிக்கான USD 4 மில்லியன் (முதலில் அங்கீகரிக்கப்பட்ட வசதி USD 500,000/-)
(vi) ஹைபோதெகேஷன் கடன் வசதி (முதலில் அங்கீகரிக்கப்பட்ட வரம்பு USD 650,000)
(vii) ஹைபோதெகேஷன் கடன் வசதி (முதலில் அங்கீகரிக்கப்பட்ட வரம்பு USD 150,000)
(viii) காத்திருப்பு மேலதிகப்பற்று வசதி (முதலில் அங்கீகரிக்கப்பட்ட வரம்பு ரூபா 26.58 மில்லியன்)
(ix) USD 188,000 தற்காலிக மேலதிகப்பற்று வசதி

விற்கப்பட்ட சொத்தின் கொடுப்பனவு திட்டத்தின் பிரகாரம் 1வது கொடுப்பனவு தாமதமடைந்த போதிலும் இரண்டாவது கொடுப்பனவு தாமதமின்றி பெறப்பட்டது.

பகிர்ந்தளிக்கப்பட்ட சொத்தின் விற்பனைத் தொகையிலிருந்து ரூபா 563.75 மில்லியன் (ஏறத்தாழ) அதிகமாக இருந்த போதிலும், வங்கியின்

சுமனதிஸ்ஸ மாவத்தை, நவகமுவ, ரணால (9A.1R.17P) இல் அமைந்திருக்கும் அசையாச் சொத்துக்களிற்கு எதிராக பாதுகாக்கப்பட்டது. அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் கட்டாய விற்பனை பெறுமதி முறையே அதனுடன் தொடர்புடைய அடமானக் கடன் பெறுமதியில் 78 சதவீதத்தையும் மொத்த நிலுவை மீதியில் 16.55 சதவீதத்தையும் குறிக்கிறது. பொது ஏலத்தின் மூலம் சொத்தை விற்பனை செய்வதற்கு வங்கியின் பணிப்பாளர் சபை (சபைக் கூட்டக் குறிப்பு இல: 04.03.2021/8.1) அங்கீகாரம் அளித்துள்ளதுடன் 2023 யூன் 01 இல் ஏலம் விடப்பட்டது. சொத்து வங்கிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. சொத்துக்களை விற்க மீண்டும் விளம்பரம் செய்யப்பட்டதுடன் குவாண்டம் க்ளோதிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (பிறன்டிக்ஸ் லங்கா லிமிட்டட்டின் ஒரு முயற்சி) ஐ.அ.டொலர் 4.25 மில்லியன் பெறுமதிக்காக ஒரே ஒரு ஏலம் மாத்திரமே பெறப்பட்டது. கேள்விதாரர் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு திட்டத்தின் பிரகாரம் ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் ஆரம்ப இணங்கப்பட்ட முற்பணக் கொடப்பனவை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. எனினும், கேள்விதாரர் HSBC இன் கரைகடந்த கணக்கு வைத்திருப்பவராக இருப்பதால், அடிப்படையான கொடுக்கல்வாங்கல் அவர்களின் ஏற்றுமதி வருமானத்தில் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் ஐ.அ.டொலரை இலங்கை வங்கிக்கு மாற்ற முடியவில்லை. எனவே வங்கியும் கேள்விதாரரும் ஐ.அ.டொலர் 4.25 மில்லியனிற்கு சமமான நாணய மாற்றத்தில் இலங்கை ரூபாயில் கொடுக்கல்வாங்கலை தீர்ப்பனவு செய்வதற்கு முடிவு செய்தனர்.

இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, LKR விதிமுறைகளில் சின்டெசி லிமிட்டட்டின் ஐ.அ.டொலர் வசதிகளை அறவிடுவதற்கு 2023 திசெம்பர் 05 இல் அங்கீகாரம் வழங்கினார். -

1. சலுகை பரிசீலிக்கப்படுகிறது என்று வங்கி தெரிவித்தவுடன், கேள்விதாரர் ஒப்புக்கொண்ட கொள்வனவு விலையில் 50 சதவீதத்திற்கு சமமான தொகையை முன்கூட்டியே செலுத்த வேண்டும்.
2. சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தேவையான அங்கீகாரங்கள் வழங்கப்பட்டவுடன், கேள்விதாரர் வங்கியால் தீர்மானிக்கப்பட்ட குறிப்பிட்ட காலத்திற்குள் மீதமுள்ள கொள்வனவு விலையை செலுத்தி தீர்ப்பனவு செய்ய வேண்டும்.

பின்னர், கொடுப்பனவு திட்டம் 2023 ஒக்தோபர் 18 இல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது (சபைக் கூட்டக்குறிப்பு இல.: 18.10.2023/7.2). குவாண்டம் க்ளோதிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு திட்டம் மற்றும் பெறப்பட்ட கொடுப்பனவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அபகரிக்கப்பட்ட சொத்து அகற்றல் கொள்கை மற்றும் சட்ட ஆலோசனையின் பிரகாரம், அதிகப்படியான தொகையானது பாதுகாப்பற்ற வசதிகளுக்காக தீர்ப்பு வழங்கப்படும் வரை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் வைப்பு செய்யப்பட வேண்டும்.

வழக்கு இல. CHC152/2022MR (அடுத்த விசாரணை திகதி 2025.01.27) தீர்ப்பு வழங்கப்படும் வரை, பகிர்ந்தளிக்கப்பட்ட சொத்தை மீள்விற்பனை செய்வதிலிருந்து வங்கிக்குள் இருக்கும் அதிகப்படியான நிதியை வங்கிக்குள் வைத்திருப்பதற்கான சீக்வெஸ்ட்ரேஷன் (sequestration) கட்டளையை எடுப்பதற்கான வாய்ப்பை வங்கி நாடுகிறது.

வங்கி தாக்கல் செய்த வழக்குகள்:

CHC 151/2022/MR - அடுத்த விசாரணை திகதி - 2024.03.07 (படிமுறைகள் மற்றும் நகர்த்தப்பட்டது)

CHC 153/2022/MR - அடுத்த விசாரணை திகதி - 2024.10.16

| | | | |
|---|---|---|---|
| மொத்த கேள்வி பெறுமதி | USD 4.25 மில்லியன் | | |
| **சபை அங்கீகரித்த கொடுப்பனவு திட்டம்** | | | **உண்மையான பெறுவனவு விபரங்கள்** |
| உடனடியாக முற்பணக் கொடுப்பனவு | USD 2.5 மில்லியன் | சபை அங்கீகாரத்திலிருந்து 7 நாட்களுக்குள் | 2023.12.08 இல் ரூபா 825 மில்லியன் பெறப்பட்டது. |
| மூன்று மாதங்களில் | USD 0.875 மில்லியன் | 1 வது கொடுப்பனவிலிருந்து 3 மாதங்களுக்குள் | 2024.01.26 இல் ரூபா 281.75 மில்லியன் பெறப்பட்டது. |
| ஆறு மாதங்களில் | USD 0.875 மில்லியன் | 1 வது கொடுப்பனவிலிருந்து 6 மாதங்களுக்குள் | கொடுப்பனவு நிலுவையாக உள்ளது |

தீர்வுத் திட்டத்தின் பிரகாரம், 1வது மற்றும் 2வது கொடுப்பனவுகள் சில தாமதங்களுடன் வங்கியால் பெறப்பட்டன. சம்பந்தப்பட்ட கடனின் நிலுவைத் தொகை பெறப்பட்ட கொடுப்பனவில்லிருந்து தீர்ப்பனவு செய்யப்பட்டு ரூபா 283.75 மில்லியன் மீதி தொங்கல் கணக்கு கடன் - LKR (பேரேட்டுக் குறியீடு: 22310014) இற்கு மாற்றப்பட்டது.

2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மொத்த நிலுவைத் தொகையில், பெறப்பட்ட விற்பனைத் தொகையிலிருந்து மீதியை தீர்ப்பனவு செய்த பின்னர் 2024 பெப்ரவரி 29 உள்ளவாறு ரூபா 2,858.54 மில்லியன் நிலுவையாக இருந்தது. வங்கி மொத்த நிலுவையிலிருந்து மேலும் ரூபா 563.75 மில்லியனை (தொங்கல் கணக்கில் இருந்த ரூபா 280 மில்லியன் நிலுவை கொடுப்பனவு மற்றும் ரூபா 283.75 மில்லியன் மீதி) தீர்ப்பனவு செய்ய முடியும். எனவே வங்கிக்கு ஏற்படக்கூடிய நட்டம் ஏறத்தாழ ரூபா 2,294.79 மில்லியன் ஆகும்.

மேலும், வங்கியானது பின்வரும் வசதிகள் தொடர்பாக சின்டசி லிமிட்டட் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு எதிராக பண அறவீட்டு வழக்குகளை தொடர்ந்துள்ளதுடன் வழக்குகளின் விபரங்கள் பின்வருமாறுள்ளன.

1. USD 3.1 மில்லியன் மற்றும் USD 0.324 மில்லியன் கால கடன் வசதி – கம்பனிக்கு எதிரான வழக்கு இல. CHC151/2022/MR.
2. USD 6.752 மில்லியன் மீளப்பட்டியலிடப்பட்ட காலக் கடன், கம்பனிக்கு எதிரான வழக்கு இல. CHC152/2022/MR.
3. USD 0.997 மில்லியன் காலக் கடன் மற்றும் USD

0.4 மில்லியன் கால கடன் - வழக்கு இல. CHC153/2022/MR – கம்பனி மற்றும் உத்தரவாததாரர் (திரு. கௌஷல் துமிந்த யஹம்பத்) ஆகியோரிற்கு எதிரானது.

8 **அல்மார் ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அல்மார் ரீஸ் பிறைவேட்) லிமிட்டட்**

**(அ) அல்மார் ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்**
கம்பனி 1993 இல் கூட்டிணைக்கப்பட்டதுடன் முக்கியமாக இயற்கை இறப்பரின் நேரடி ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. வங்கியின் கூட்டுத்தாபன பிரிவு 2015 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் USD 5.5 மில்லியன் தொகையான 01 காலக் கடன், USD 1.5 மில்லியன் & USD 0.15 மில்லியன் தொகையான முறையே 02 மீளப்பட்டியலிடப்பட்ட வசதிகள் மற்றும் USD 1.819 மில்லியன் தொகையான 01 குறுகிய கால கடன் வசதி என USD இல் குறிப்பிடப்பட்ட நான்கு கடன் வசதிகளை வழங்கியுள்ளது. அவை முறையே 2021 ஏப்ரல் 30 மற்றும் 2021 ஒக்தோபர் 17 இல் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது.
குறுகிய கால கடன் வசதிகளை காலக் கடன்களாக மாற்றுதல், சலுகை காலத்தை வழங்குவதல், மீள்கொடுப்பனவு கால நீடிப்பு, கடன் வசதிகளின் மீள்கட்டமைப்பு மற்றும் மீளப்பட்டியலிடல் மற்றும் 2015 முதல் NPA திகதி வரை கடன் காலம்தாழ்த்தி மீளசெலுத்துதலை வழங்குதல் ஆகியவற்றை வங்கி வழங்கியுள்ளது.
2011/12 நிதியாண்டு முதல் கம்பனியின் கீழ் அதிகளவு வங்கிக் கடன் வாங்குதல், பங்குச் சந்தையில் முதலீடு செய்தல் மற்றும் சொத்துக்களை கொள்வனவு செய்தல், தங்கள் வணிகத்தை இயக்காதது போன்ற பல்வேறு முதலீடுகளுக்கு நிதியைத் திருப்பியதன் விளைவாக பெரும் நட்டம் ஏற்பட்டதால் இணங்கியவாறு கம்பனி வங்கிக்கு கணிசமான காசுப்பாய்ச்சலை அனுப்பவில்லை. மேலும் அல்மார் இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட் என்ற அவர்களின் சகோதர கம்பனியின் மூலம் இறப்பர் வியாபார வணிகத்தை நடாத்தி, இணங்கியவாறு தங்கள் சொத்துக்களை விற்று, இணங்கிவாறு மேலதிக மூலதனத்தை திரட்ட முடியவில்லை.
2020 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் கிடைக்கக்கூடிய நிதிநிலைகளின் பிரகாரம், ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான விடயங்களின் அடிப்படையில் கணக்காய்வாளர்கள் பாதகமான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், கம்பனி 2011/12 நிதியாண்டிலிருந்து பெரும் நட்டத்தை சந்தித்துள்ளது மேலும் 2013/14 முதல் 2019/20 வரை

வங்கி USD 5.5 மில்லியன் தொகையான 01 காலக் கடன், USD 1.5 மில்லியன் & USD 0.15 மில்லியன் தொகையான முறையே 02 மீளப்பட்டியலிடப்பட்ட வசதிகள் மற்றும் USD 1.819 மில்லியன் தொகையான 01 குறுகிய கால கடன் வசதி என USD இல் குறிப்பிடப்பட்ட நான்கு கடன் வசதிகளை வழங்கியுள்ளது.
கம்பனி எதிர்கொள்ளும் நிதி சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, வங்கி சலுகைக் காலம், கடன் காலம் தாழ்த்தி செலுத்துதல், மீள்கொடுப்பனவு கால நீடிப்பு, கடன் வசதிகளின் மீள்கட்டமைப்பு மற்றும் மறுசீரமைத்தல் ஆகியவற்றை வழங்கியுள்ளது.
வங்கியானது கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களுக்கு முதல் வழியை (காசுப்பாய்ச்சல் அடிப்படையில்) மதிப்பிட்டு கடன் வசதிகளை வழங்கியுள்ளது. எனினும், அல்மார் ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட், கம்பனியின் பணிப்பாளர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்கள், கம்பனியின் சொத்துகள் மீதான எதிர்மறை உறுதிமொழி மற்றும் வாடிக்கையாளரின் கட்டுப்பாட்டில் உள்ள பங்குகள் மற்றும் புத்தகக் கடன்களின் மீது மிதக்கும் அடமானம் ஆகியவற்றுடன் கடன்வசதிகளை பாதுகாக்கப்பட முடியும்.
அனைத்து செயற்படாத கடன் வசதிகளுக்கும் கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் USD 5.5 மில்லியன் வசதிக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும்

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

எதிர்மறை தேறியலாபம் மற்றும் எதிர்மறை கட்புலனாகும் தேறிய பெறுமதியில் படிப்படியான அதிகரிப்பைக் காட்டியுள்ளது. மேலும், மொத்த சொத்துக்கள் 2013/14-2019/20 இல் ரூபா 2,692 மில்லியன் முதல் ரூபா 759 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் கம்பனியின் இடர் மதிப்பீடு 2014 முதல் 2020 வரை "C" இலிருந்து "D" வகைக்கு குறைக்கப்பட்டுள்ளது.
2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான வாடிக்கையாளரின் மொத்த நிலுவை மீதி ரூபா 2,038.86 மில்லியன் மற்றும் ரூபா 437.97 மில்லியன் தொகையான முறையே மொத்த மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 2,476.83 மில்லியன் ஆக இருந்தது. மொத்த செயற்பாடற்ற மீதி அல்மார் ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட், கம்பனியின் பணிப்பாளர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்கள், கம்பனியின் சொத்துகள் மீதான எதிர்மறை உறுதிமொழி மற்றும் வாடிக்கையாளரின் கட்டுப்பாட்டில் உள்ள பங்குகள் மற்றும் புத்தகக் கடன்களின் மீது மிதக்கும் அடமானம் ஆகியவற்றிற்கு எதிராக பாதுகாக்கப்பட்டது.
அதன் பிரகாரம், பாதுகாப்பற்ற பிணைய அடிப்படையில் மேற்கூறிய கடன் வசதிகளை வங்கி அங்கீகரித்து வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.
2022 திசெம்பர் 15 இல் அனைத்து செயற்பாடற்ற கடன் வசதிகளுக்காக கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் சட்ட ஆவணப்படுத்தலுக்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய கடன் வசதிகளுக்கு எதிராக கடன் அறவீட்டு நடவடிக்கையின் கீழ் வழக்குகளை தாக்கல் செய்வதற்காக ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.
ஏனைய வசதிகளுக்காக வழக்குகளை தாக்கல் செய்ய தயாராகி வருகிறது.
நிரந்தர மேலதிகப்பற்று வசதிக்காக நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டியுள்ளன.

**(ஆ) அல்மார் ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

கம்பனி 2005 இல் கூட்டிணைக்கப்பட்டதுடன் முக்கியமாக தேயிலை நேரடி ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. வங்கி 2012 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் ரூபா 400 மில்லியன் தொகையான ஒரு காலக் கடன், ரூபா 50 மில்லியன் தொகையான ஒரு மீள்பட்டியலிடல் வசதி, ரூபா 18.627 மில்லியன் தொகையான ஒரு காலம்தாழ்த்தி மீள்செலுத்துதல் கடன், ரூபா 500 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 3,820 தொகையான இரண்டு மேம்படுத்தல் பொதியிடல் கடன் வசதி (சுழற்சி) உட்பட 05 கடன் வசதிகளை வழங்கியுள்ளதுடன் அவை 2021 ஏப்ரல் முதல் 2022 வரை செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன.
கடன் காலம்தாழ்த்தி மீளச்செலுத்துதல்கள், வட்டிச் சலுகைகள், திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடித்தல் மற்றும் NPA திகதி வரை வாடிக்கையாளரின் நிதிச் சுமையை எளிதாக்கும் நோக்கத்துடன் மீள்பட்டியலிடல் உள்ளிட்ட பல சலுகைகளை கம்பனிக்கு வழங்குவதில் வங்கி அனுபவம் வாய்ந்தது. தொகுதியின் ஏனைய கம்பனிகளுக்கு நிதியை திருப்பி விடுவது மற்றும் போதுமான பணத்தை உருவாக்காத காரணத்தால் இணங்கப்பட்டவாறு கம்பனி குறிப்பிடத்தக்க காசுப்பாய்ச்சல்களை வங்கிக்கு அனுப்பவில்லை.

கம்பனியானது நாட்டின் முன்னணி தேயிலை ஏற்றுமதியாளர்களில் ஒன்றாக இருந்தது. வணிகத்தின் காசுப்பாய்ச்சலின் அடிப்படையில் தொழிற்படு மூலதனத்திற்கு நிதியளிப்பதற்கு கடன் வசதிகளை வங்கி கருத்தில் கொள்வது வழக்கமல்ல.
தொழிற்படு மூலதனத் தேவைகளுக்கு கடன் வசதிகளை வழங்குவதில் முன்னணி ஏற்றுமதியாளர்களிடமிருந்து பிணையை எதிர்பார்ப்பது யதார்த்தமானதல்ல.
அனைத்து செயற்பாடற்ற கடன் வசதிகளுக்கும் கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் வசதிகளுக்கு எதிராக கடன் அறவீடு/ பண அறவீட்டு நடவடிக்கையின் கீழ் வழக்குகளை தாக்கல்

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கம்பனியின் கிடைக்கக்கூடிய நிதிநிலைகளின் பிரகாரம், 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு கணக்காய்வாளர் நிதிக்கூற்றுக்கள் மீது கருத்துரிமை மறுப்பு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியுள்ளார், மேலும் கம்பனி 2016/17 முதல் 2019/20 வரை எதிர்மறை தேறியலாபம் மற்றும் எதிர்மறை தேறிய தெழிற்படு மூலதனம் படிப்படியாக அதிகரிப்பதை காட்டியது. 2015/16 முதல் 2019/20 வரை மொத்த சொத்துக்கள் ரூபா 2,184 மில்லியனிலிருந்து ரூபா 1,546 மில்லியனாகக் குறைவடைந்துள்ளன. மேலும், கணக்காய்வு செய்யப்பட்ட 2019/20 நிதிக்கூற்றுக்கள் கடன்/மூலதனம், கடன் சேவை மேவுகை விகிதம், வட்டி மேவுகை விகிதம் மற்றும் EPS போன்ற எதிர்மறையான புள்ளிவிபரங்களை சுட்டிக்காட்டின. அத்துடன் கம்பனியின் இடர் மதிப்பீடு 2012 முதல் 2021 வரை "C" இலிருந்து "D" வகைக்கு குறைவடைந்துள்ளது.<br>2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான வாடிக்கையாளரின் மொத்த நிலுவை மீதி ரூபா 857.31 மில்லியன் மற்றும் ரூபா 266.77 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 1,124.08 மில்லியனாக இருந்தது. மொத்தச் செயற்பாடற்ற கடன்கள் பங்குகள் மீதான அடமானம், கம்பனியின் பணிப்பாளர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்கள் மற்றும் அல்மார் இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட்டின் கூட்டிணைந்த உத்தரவாதத்தால் பாதுகாக்கப்பட்டன.<br>2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு சேமிப்பு க/கு இல. 2490849 இல் ரூபா 14.903 மில்லியன் (1USD @ ரூபா 320/=) இற்கு சமமான ஐ.அ.டொலர் 46,573.36 இலாப எல்லையை வங்கி வைத்திருக்கிறதுடன் அது வங்கியால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அனைத்து செயற்பாடற்ற வசதிகளுக்காக கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டதுடன் வழக்கு தாக்கல் செய்வதற்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.<br>பாதுகாப்பற்ற பிணையங்கள் மீதான மேற்கூறிய கடன் வசதிகளை வங்கி அங்கீகரித்து வழங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. இதன் மூலம் வாடிக்கையாளர் கடன் வசதிகளை செலுத்த தவறியிருந்தார். | செய்வதற்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.<br>வழக்குகளை தொடர்வதற்கு தயார் செய்யப்பட்டு வருகிறது. | |
| **9 CML தொகுதி**<br>**(அ) CML-MTD கென்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டட்**<br>CML-MTD கென்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டட் வீதிகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள், துறைமுக அபிவிருத்தி மற்றும் ஏனைய சிவில் மற்றும் பொது ஒப்பந்தங்களின் நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள கம்பனியாகும்.<br>வங்கி 2011 - 2018 காலப்பகுதியில் ரூபா 693.18 மில்லியன் கூட்டுமொத்தமான 15 கடன்கள், ரூபா 150 மில்லியன் தொகையான ஒரு மேலதிகப்பற்று வசதி | CML MTD கென்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டட் வசதிகளை வழங்கிய காலத்தில் முன்னணி நிர்மாண கம்பனியாக இருந்ததால், வங்கி கடன் பொதியை கருத்தில் கொண்டுள்ளது. எனினும், ஒட்டுமொத்த நிர்மாண தொழில்துறையும் பொருளாதார வீழ்ச்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டது, எனவே, இந்த | அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும். |

மற்றும் ரூபா 21.15 மில்லியன் தொகையான குத்தகை வசதி வழங்கியுள்ளது. அவை 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகையின் கீழ் இருந்தது. ரூபா 168 மில்லியன் முக்கிய வசதி 2018 யூன் 28 இல் வழங்கப்பட்டு 2019 மே 28 இல் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது. ஏனைய வசதிகள் 2019 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன. NPA திகதி வரை தொடர்ந்து முதிர்வு திகதிகளை நீடிக்க வங்கி அனுமதித்துள்ளது.

2018 முதல் 2019 வரை கம்பனியின் இடர் மதிப்பீடு B இலிருந்து C வகைக்குக் குறைக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 796.7 மில்லியன் விலைப்பட்டியல் தள்ளுபடி வசதிகள் தொடர்பான முதிர்வு திகதிகளை மேலும் இரண்டு முதல் ஐந்து மாதங்களிற்கு நீடிப்பதற்கு கடன் குழுவின் அங்கீகாரத்தை வங்கி பெற்றுள்ளது.

கூட்டுத்தாபன கடன் கொள்கை கையேட்டின் 8.1.(i) & (ii) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் மதிப்பீடு "B" மற்றும் அதற்குக் கீழே இருந்தால், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விரிவான-கடன் பகுப்பாய்வு வருடாந்தம் அல்லது அரையாண்டு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு காலாண்டு வகைப்படுத்தல் செயன்முறை மூலம் ஒதுக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கடன் தரம், காலாண்டு வாடிக்கையாளர் விஜயம் போன்றவை மதிப்பிடப்பட வேண்டும். எனினும், வாடிக்கையாளர் விஜய அறிக்கைகள் கணக்காய்வு மதிப்பாய்வுக்கு கிடைக்கவில்லை.

2023 செப்தெம்பர் 30 இல் வாடிக்கையாளரின் மொத்த நிலுவை மீதி ரூபா 1,601.48 மில்லியனாக இருந்தது, இதில் மூலதனம் மற்றும் வட்டி மீதி முறையே ரூபா 860.35 மில்லியன் மற்றும் ரூபா 741.13 மில்லியன் உள்ளடங்குகிறது. மொத்த நிலுவையில் MTD வோக்கர்ஸ் பிஎல்சியின் கூட்டிணைந்த உத்தரவாதத்திற்கு எதிராக ரூபா 1,583.26 மில்லியன் பாதுகாக்கப்பட்டதுடன் குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் மீதான அடமானத்திற்கு எதிராக ரூபா 18.22 மில்லியன் குத்தகை வசதி பாதுகாக்கப்பட்டது.

கம்பனி கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தின் வழக்கு இல. HC (சிவில்) 32/2019/Co இன் கீழ் முடிவுறுத்தல் உத்தரவின் கீழ் உள்ளதுடன் கம்பனி பெற்ற மொத்த பொறுப்புக்களுக்கான கோரிக்கையை வங்கி ஏற்கனவே தாக்கல் செய்துள்ளது. 2023 மே 10 இல் மேற்கூறிய விடயம் தொடர்பாக புதிய கலைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார், மேலும் வங்கி புதிய கலைப்பாளரிடம் கோரிக்கைகளை பதிவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. சம்பத் வங்கியால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பம் தொடர்பாக, 2024 மார்ச் 28 இல், கலைப்பாளரின் கடமைகளுக்காக மேற்படி வழக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கம்பனிக்கு வழங்கப்பட்ட வசதிகள் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது.

CML MTD கென்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டட் தற்போது கலைக்கப்பட்டுள்ளதுடன் 2023.08.10 இல் வழக்கு இல. 32/2019 இற்கான கோரிக்கைகளை வங்கி தாக்கல் செய்துள்ளது. நீதிமன்ற வழக்கு இல. 32/2019 இன் அடுத்த விசாரணை திகதி 2024/11/21 இல் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| **(ஆ) MTD வோக்கர்ஸ் பிஎல்சி**<br>கம்பனி சிவில் மற்றும் இயந்திரவியல் பொறியியல், கடல்சார் பொறியியல், கனரக மற்றும் இலகு இயந்திர வர்த்தகம், ரியல் எஸ்டேட் மற்றும் மின் உற்பத்தித் தொழில்களில் முதலீடுகளின் ஒரு போர்ட்போலியோவை முகாமை செய்வதில் ஈடுபட்டுள்ளது.<br>வங்கி 2016 ஒக்தோபர் 26 இல் குழு தொழிற்படு மூலதனத் தேவைக்காக ரூபா 50 மில்லியன் நிரந்தர மேலதிகப்பற்று வசதியை (POD) வழங்கியிருந்தது. 2016 திசெம்பர் 01 ஆம் திகதிய மேலதிகப்பற்று உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட நிபந்தனையின் பிரகாரம், மேலதிகப்பற்று வரம்பு மாதாந்தம் ரூபா 1.0 மில்லியனால் 2019 யூன் 13 வரை (29 மாதங்கள்) குறைக்கப்பட்டிருந்தது. எனவே, மொத்த வரம்பு ரூபா 21 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 6.59 மில்லியன் தொகையான நடைமுறைக் கணக்கு இல. 79257442 இல் முன் அங்கீகாரம் பெறாமல் மற்றொரு தற்காலிக மேலதிகப்பற்று வசதி வழங்கப்பட்டிருந்தது. மொத்த நிலுவையில் ரூபா 21 மில்லியன் மேலதிகப்பற்று உடன்படிக்கைக்கு எதிராகப் பாதுகாக்கப்பட்டதுடன் மற்றொன்று நிபந்தனையற்ற அடிப்படையிலானதாகும். அதன் பிரகாரம், வலுவான பிணையங்களுக்கு எதிராக வசதிகள் பாதுகாக்கப்படாததால், நிலுவையாக உள்ள மீதியை அறவிடுவது சந்தேகத்திற்குரியதாகும்.<br>விரிவான கடன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் வாடிக்கையாளர் விஜய அறிக்கைகள் கணக்காய்வு மதிப்பாய்வுக்கு கிடைக்கவில்லை.<br>சலுகைக் கடிதத்தில் உள்ள விசேட நிபந்தனைகள் இல. (ஈ) இன் பிரகாரம் வாடிக்கையாளரரிற்கு கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் கம்பனி அவ்வப்போது பெறக்கூடிய ஏனைய தொடர்புடைய நிதித் தகவல்கள் மற்றும் மாதாந்த முகாமைத்துவ கணக்குகளுக்கான கணக்காய்வாளர்களின் இரகசிய அறிக்கைகளின் பிரதிகளை சமர்ப்பிக்க முடியவில்லை.<br>2022 நவம்பர் 30 ஆம் திகதிய சபைக்கான விஞ்ஞாபனத்தின் பிரகாரம் வோக்கர்ஸ் ஷிப்யார்ட் லிமிட்டட், நோர்தர்ன் பவர் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் கொழும்பு போர்ட் ஹெரிடேஜ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றில் MTD வோக்கர்ஸ் பிஎல்சி வைத்திருக்கும் 100 சதவீத பங்குகளை MTD கேபிடல் பெர்ஹார்டுக்கு ஐ.அ.டொலர் 19,098,760.83 இன் கொள்வனவு கருத்தில் கொள்ளலிற்காக மாற்றுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இல. HC. சிவில் 143/2019/MR ஐ தொடர பரிந்துரைக்கப்பட்டது. | MTD வோக்கர்ஸ் பிஎல்சி ஆனது பொறியியல் மற்றும் உட்கட்டமைப்பு தொழில்துறையில் முன்னோடியாக இருந்ததுடன் வசதிகளை வழங்கிய காலத்தில் இலங்கையின் பழமையான கம்பனிகளில் ஒன்றாக இருந்தது. தொழிற்படு மூலதனச் சிக்கல்களால், வசதிகள் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன.<br>கம்பனி தற்போது கலைப்பு நிலையில் உள்ளது.<br>கலைப்பாளரை நியமித்தவுடன் வங்கி கோரிக்கைகளை சமர்ப்பிக்கும். அடுத்த விசாரணை திகதி 2024.10.30 ஆகும். | அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும். |
| **(இ) வோக்கர்ஸ் இக்யூப்மென்ட் லிமிட்டட்**<br>வோக்கர்ஸ் இக்யூப்மென்ட் லிமிட்டட் ஆனது MTD | வோக்கர்ஸ் இக்யூப்மென்ட் லிமிட்டட் உட்கட்டமைப்பு ஆதரவு சேவையில் | அறவீடுகள் பின்தொடரப்படுதல் |

வோக்கர்ஸ் பிஎல்சி இன் துணைக்கம்பனியாக உள்ளதுடன் 2015 இல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆதரவு வணிகமாக கூட்டிணைக்கப்பட்டதுடன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான தயாரிப்புக்களின் இறக்குமதி, விநியோகம் மற்றும் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளது.

2016 முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் ரூபா 200 மில்லியன் வரம்புடன் கூடிய ஹைபோதெகேஷன் கடன் (சுழற்சி) வசதி, ரூபா 25 மில்லியன் மேலதிகப்பற்று வசதி வரம்பு மற்றும் ரூபா 40.57 மில்லியன் தொகையான ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்டியல் வசதிகளை வங்கி வழங்கியிருந்ததுடன் அவை 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகையின் கீழ் இருந்தன. 2018 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் இந்த வசதிகள் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன. NPA இற்கு மாற்றும் திகதி வரை தொடர்ந்து முதிர்வு திகதிகளை நீடிக்க வங்கி அனுமதித்துள்ளது.

2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதி ரூபா 136.35 மில்லியன் மற்றும் ரூபா 151.38 மில்லியன் தொகையான முறையே மொத்த மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 287.73 மில்லியன் ஆக இருந்தது.

மொத்த நிலுவை மீதியில், MTD வோக்கர்ஸ் பிஎல்சியின் கூட்டிணைந்த உத்திரவாதத்திற்கு எதிராக ரூபா 75.56 மில்லியன் மாத்திரமே பாதுகாக்கப்பட்டதுடன் மீதமுள்ள ரூபா 212.17 மில்லியன் மீதி நிபந்தனையற்ற அடிப்படையில் வழங்கப்பட்டது. நிலுவைத் தொகையின் பெரும்பகுதி பாதுகாக்கப்படாமல் இருப்பதாலும், மீதமுள்ள மீதி பலவீனமான பிணையங்களுக்கு எதிராகப் பாதுகாக்கப்பட்டதாலும், நிலுவைத் தொகையின் அறவீட்டுத்தன்மை சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

விரிவான கடன் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் வாடிக்கையாளர் விஜய அறிக்கைகள் கணக்காய்வு மதிப்பாய்வுக்கு கிடைக்கவில்லை.

சலுகைக் கடிதத்தில் உள்ள விசேட நிபந்தனைகள் இல. (ஈ) இன் பிரகாரம் வாடிக்கையாளரரிற்கு கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் ஏனைய தொடர்புடைய நிதித் தகவல்கள் மற்றும் மாதாந்த முகாமைத்துவ கணக்குகளுக்கான கணக்காய்வாளர்களின் இரகசிய அறிக்கைகளின் பிரதிகளை 2018 இற்கு பின்னர் சமர்ப்பிக்க முடியவில்லை.

NPA வகைக்கு மாற்றப்பட்ட திகதிக்குப் பின்னர் இந்த வசதிகளுக்கு எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஈடுபட்டிருந்ததுடன் வசதிகளை வழங்கும் நேரத்தில் புகழ்பெற்ற வியாபாரக் குறி பெயர்களுடன் உரிமையாளர் உரிமைகளைக் கொண்டிருந்தது. முக்கியமாக நாட்டில் நிலவும் மோசமான பொருளாதாரம் காரணமாக கடன் வசதிகள் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன.

வங்கி 2024.03.11 இல் கோரிக்கைக் கடிதத்தை அனுப்பியதுடன் சட்ட நடவடிக்கைகளைத் தொடருமாறு சட்டப் பிரிவுக்கு அறிவுறுத்தியது.

வேண்டும்.

| | | |
|---|---|---|
| **(ஈ) வோர்க்கோ்ஸ் & கம்பனி எஞ்சினியோ்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**<br>கம்பனி 1992 இல் நாட்டில் பொறியியல் செயற்திட்டங்களை கையாண்டு செயற்படுத்துவதற்காக கூட்டிணைக்கப்பட்டது. கம்பனி MTD வோர்க்கோ்ஸ் பிஎல்சீ இன் துணைக்கம்பனியாகும்.<br>2016 முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் 33 ஐ.அ.டொலர் குறிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் இரண்டு மேலதிகப்பற்று வசதிகளை வங்கி வழங்கியிருந்தது, அவை 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகையின் கீழ் இருந்தன. இந்த வசதிகள் 2019 ஆம் ஆண்டில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன.<br>NPA இற்கு மாற்றும் திகதி வரை தொடர்ந்து முதிர்வு திகதிகளை நீடிக்க வங்கி அனுமதித்துள்ளது. "நீடிப்புக்கள் காசுப்பாய்ச்சலுடன் பொருந்தாததுடன் நீடிப்பு ஒரு நல்ல முன்மொழிவு அல்ல" என்ற CRO இன் கருத்துரை இருந்தபோதிலும் ஐ.அ.டொலர் 1.42 மில்லியன் தொகையான ஐ.அ.டொலர் குறிப்பிடப்பட்ட கடன்களின் திருப்பிச் செலுத்தும் காலத்தையும் ரூபா 100 மில்லியன் மேலதிகப்பற்று வசதியின் முதிர்ச்சி காலத்தையும் நீடிப்பதற்கு வங்கி கடன் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.<br>2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வாடிக்கையாளரின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதி ரூபா 544.92 மில்லியன் மற்றும் ரூபா 574.11 மில்லியன் தொகையான முறையே மொத்த மூலதனம் மற்றும் வட்டி மீதியுடன் ரூபா 1,119.03 மில்லியனாக இருந்தது.<br>மொத்த நிலுவைத் தொகையில், MTD வோக்கர்ஸ் பிஎல்சியின் கூட்டிணைந்த உத்தரவாதத்திற்கு எதிராக ரூபா 1,103.35 மில்லியன் தொகை பாதுகாக்கப்பட்டதுடன் நிபந்தனையற்ற அடிப்படையில் ரூபா 15.68 மில்லியன் நிலுவையாக உள்ள ஏனைய வசதிகள் வழங்கப்பட்டது. எனினும், வலுவான பிணையங்களுக்கு எதிராக வசதிகள் பாதுகாக்கப்படாததால் நிலுவையாக உள்ள மீதியின் அறவிடும் தன்மை சந்தேகத்திற்குரியதாகும்.<br>விரிவான கடன் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் வாடிக்கையாளர் விஜய அறிக்கைகள் கணக்காய்வு மதிப்பாய்வுக்கு கிடைக்கவில்லை.<br>சலுகைக் கடிதத்தில் உள்ள விசேட நிபந்தனைகள் இல. (ஈ) இன் பிரகாரம் வாடிக்கையாளரரிற்கு கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் ஏனைய தொடர்புடைய நிதித் தகவல்கள் மற்றும் மாதாந்த முகாமைத்துவ கணக்குகளுக்கான கணக்காய்வாளர்களின் இரகசிய அறிக்கைகளின் பிரதிகளை 2017 இற்கு பின்னர் சமர்ப்பிக்க முடியவில்லை.<br>முடிவுறுத்தல் வழக்கு விண்ணப்ப இல: CHC 95/2018/CO வணிக உயர் நீதிமன்றத்தால் 2022 | வோக்கர்ஸ் சன்ஸ் அண்ட் கம்பனி எஞ்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கான கடன் பொதியை வங்கி பரிசீலித்த நேரத்தில், தேயிலை தொழிற்சாலைகளின் நிர்மாணங்கள், மொனோரெயில் கென்வேயர் சிஸ்டத்தை (Monorail Conveyer System) வழங்கி நிறுவுதல் போன்றவற்றை முக்கியமாகக் கையாண்ட முன்னணி பொறியியல் கம்பனியாக இருந்தது. இது MTD வோக்கர்ஸ் பிஎல்சியின் ஒரு துணைக்கம்பனியாகும்.<br>எவ்வாறாயினும், முக்கியமாக நாட்டில் நிலவும் மோசமான பொருளாதாரம் காரணமாக வசதிகள் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டுள்ளன.<br>வங்கி 2024.03.12 இல் கோரிக்கைக் கடிதத்தை அனுப்பியதுடன் சட்ட நடவடிக்கைகளைத் தொடருமாறு சட்டப் பிரிவுக்கு அறிவுறுத்தியது. | அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும். |

பெப்ரவரி 24 அளவில் தள்ளுபடி செய்யப்பட்டது, மேலும் குறித்த உத்தரவுக்கு எதிராக மனுதாரரால் தொடரப்பட்ட இல: SC/HC/LA/21/2022 ஐக் கொண்ட மேன்முறையீட்டு விண்ணப்பத்திற்கான அனுமதி 2022 மே 19 இல் உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் எடுக்கப்பட்ட எந்த அறவீட்டு நடவடிக்கைகளும் 2024 மார்ச் 07 வரை கவனிக்கப்படவில்லை.

**(உ) நோர்தர்ன் பவர் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்**
கம்பனி சுன்னாகத்தில் மின் உற்பத்தி நிலையத்தை இயக்கும் MTD வோர்க்கர்ஸ் பிஎல்சீ இன் துணைக்கம்பனியாகும். அதன் செயற்பாட்டின் போது, இப்பகுதியில் உள்ள நீர் வளமூலங்கள் மாசுபட்டதாகக் கூறப்படும் காரணத்தால் மின் உற்பத்தி நிலையம் பல சட்ட வழக்குகளை எதிர்கொண்டது.
வங்கியின் கூட்டுத்தாபன பிரிவு ரூபா 263.52 மில்லியன் நாணயக் கடித (சுழற்சி) வசதி மற்றும் ரூபா 10.82 மில்லியன் மேலதிகப்பற்று வசதிகள் மேற்கூறிய கம்பனிக்கு 2015 - 2020 காலப்பகுதியில் வழங்கியிருந்ததுடன் அவை 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகையின் கீழ் இருந்தன. இந்த வசதிகள் 2019 – 2022 காலப்பகுதியில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டன. வங்கி முதிர்வு திகதிகளை NPA வகைக்கு மாற்றும் திகதி வரை தொடர்ந்து நீடிப்பதற்கு அனுமதித்துள்ளது.
2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வாடிக்கையாளரின் மொத்த செலுத்த வேண்டிய நிலுவை மீதி ரூபா 232.28 மில்லியன் மற்றும் ரூபா 285.70 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டியுடன் ரூபா 517.98 மில்லியனாக இருந்தது,
மொத்த நிலுவைத் தொகையில், MTD வோக்கர்ஸ் பிஎல்சியின் கூட்டிணைந்த உத்திரவாதத்திற்கு எதிராக ரூபா 493.30 மில்லியன் பாதுகாக்கப்பட்டதுடன் மீதமுள்ள ரூபா 24.68 மில்லியன் நிபந்தனையற்ற அடிப்படையில் வழங்கப்பட்டது. எனினும், வலுவான பிணையங்களுக்கு எதிராக வசதிகள் பாதுகாக்கப்படாததால் நிலுவையாக உள்ளவற்றை அறவிடும் தன்மை சந்தேகத்திற்குரியதாகும்.
விரிவான கடன் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 2014 ஆகஸ்ட் 22 இற்குப் பின்னர் வாடிக்கையாளர் விஜய அறிக்கைகள் கணக்காய்வு மதிப்பாய்வுக்கு கிடைக்கவில்லை
2019 செப்தெம்பர் 02 ஆம் திகதிய கடன் குழு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நோர்தர்ன் பவர் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் மீது கடன் அறவீட்டு நடவடிக்கைகளை தொடங்குவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.
எனினும், 2024 மார்ச் 06 இல் மீளாய்வு திகதி வரை

நோர்தர்ன் பவர் கம்பெனி (பிறைவேட்) லிமிட்டட் 2009 ஆம் ஆண்டு முதல் ஒரு சுயாதீன மின் உற்பத்தி நிறுவனமாக இருந்தது. வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவு காரணமாக மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு ரூபா 20 மில்லியன் இழப்பீட்டை செலுத்துவதற்கும், நடவடிக்கைகளை தொடர்வதற்கும் கம்பனிக்கு 2019.04.04 இல் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. வசதிகள் செயற்படாத பிரிவுக்கு மாற்றப்பட்டதால், வங்கி கம்பனிக்கு எதிராக அறவீட்டு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. வரைவு மனு தாக்கல் செய்யப்பட்டு உரிய காலத்தில் வழக்கு பதிவு செய்யப்படும்.

அறவீடுகள் பின்தொடரப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கம்பனிக்கு எதிராக கடன் அறவீட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, அதற்கு பதிலாக வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் - அறவீட்டு நிறுவனத்திற்கும் பிரதம சட்ட அதிகாரி – அறவீட்டு நிறுவனத்திற்கும் இடையே சில கடிதங்கள் பரிமாறப்பட்டன. | | |
| **(ஊ) வரையறுக்கப்பட்ட வோல்கேஸ் கொழும்பு சிப்யாட்(தனியார்) கம்பனி**<br>வோல்கேஸ் கொழும்பு சிப்யாட்(தனியார்) கம்பனியானது ஆயத்தக் கப்பல்/வெசெல்ஸ் திருத்தம் பார்த்தல், பாரியளவிலான கப்பல்கள் மற்றும் வெசெல்ஸ் போன்றவற்றிற்கு பாரியளவிலான நிறஅலைகளை கட்டியெழுப்பல் மற்றும் இந்தியக் கடல் வழி கப்பல்கள் மற்றும் வெசெல்ஸ் போன்றவற்றிற்கு ஏனைய கடல்வழி பொறியியல் சேவைகளை தரமானதும் விரைவானதாகவும் வழங்கி தேசிய மற்றும் சர்வதேச வாடிக்கையாளருக்கு ஒரு திருப்புமுனையாக இருப்பதற்காக கப்பல்கட்டும் கம்பனியாக இது முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டது.<br>வங்கியானது 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்பாடற்ற கடன் வகைப்படுத்தல்களிற்குள் அடங்குகின்ற ரூபா 16 மில்லியன் தொகையான இரண்ட குத்தகை வசதிகளை 2016 இல் வழங்கியிருந்தத. அத்தகைய வசதிகள் 2020 இல் செயற்பாடற்ற வகைப்படுத்தல்களிற்கும் மாற்றப்பட்டிருந்ததுடன் 2021 இல் அறவீட்டு கூட்டுறவுப் பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தது.<br>2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டிய மொத்த நிலுவை முறையே மொத்த மூலதனம் ரூபா.8.66 மில்லியன் வட்டி ரூபா.1.34 மில்லியனை உள்ளடக்கி ரூபா. 10.00 மில்லியனாகவிருந்தது.<br>மொத்த நிலுவைத் தொகையில், ரூபா.9.98 மில்லியன் குத்தகைச் சொத்துக்கள் மீதான ஒப்படைக்கு எதிராக பாதுகாக்கப்பட்டது.<br>29/2020 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கையின் 20 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்களும் காலாண்டுரீதியில் கிளை முகாமையாளர் அல்லது அவரின் அங்கிகரிக்கப்பட்ட உத்தியோகத்தருடன் ஏனைய பொறுப்பான உத்தியோகத்தரால் குத்தகைக் காலப்பகுதியில் பரீட்சிக்கப்பட வேண்டுமென்பதுடன் மேலும், குத்தகை வசதி அங்கீகாரத்தின் விஞ்ஞாபனத்தின் (LAM) விசேட நிபந்தனைகளின் 15.2 ஆம் பிரிவின் பிரகாரம் வசதியானது நெருக்கமாக மேற்ார்வை செய்யப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கிழமையொன்றிற்குள் செயற்படுத்தப்பட வேண்டிய ஆரம்ப பரீட்சிப்பின் பின்னர் ஆகக்குறைந்தது மூன்றுமாதங்களுக்குள் ஒருதடவை பரீட்சிக்கப்பட வேண்டும். எனினும், தரப் பரீட்சிப்பு அறிக்கைகள் கணக்காய்வு மிளாய்விற்காக | வோல்கேஸ் குழுவின் கடன் தரம் மற்றும் அதனுடனான உறவினை கவனத்தில் கொண்டு வங்கியானது வோல்கேஸ் கொழும்பு சிப்யாட்(தனியார்) கம்பனிக்கு வசதிகளை வழங்கியிருந்தது.<br>அறவீட்டு நடவடிக்கைகள் உரிய முறையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் வங்கியானது பறிமதல் உத்தரவை 2023.09.11 இல் வழங்கியிருந்தது. | அறவீட்டுச் செய்முறை பின்தொடர வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2024 மார்ச் 04 ஆந் திகதிய பிரதம பொது முகாமையாளர்( அறவீட்டு கூட்டுறவு) விஞ்ஞாபனத்தின் பிரகாரம் முழுமையாக ரூபா 4.24 மில்லியனையும் ரூபா.4.33 மில்லியன் நிலுவைத் தொகைக்கு எதிராக ஏனைய குத்தகை வசதியினை இறுதி தீர்ப்பனவாக மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டப்பட்டது. | | |
| **10.** | **வரையறுக்கப்பட்ட றை ஸ்ரார் அபரல் எக்ஸ்போட் (தனியார்) கம்பனி**<br>வங்கியின் கடல்கடந்த வங்கிப்பிரிவானது வரையறுக்கப்பட்ட றை ஸ்ரார் அபரல் எக்ஸ்போட் (தனியார்) கம்பனிக்கு 2007 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது செயற்பாடற்ற வகைப்படுத்தல்களுக்க மாற்றப்பட்ட 02 யூஎஸ்டி சின்டிகேட் கடன் வசதிகள்( இலங்கை வங்கி – 40 சதவீதம், மக்கள் வங்கி – 20 சதவீதம், வரையறுக்கப்பட்ட ஹற்றன் நசனல் வங்கி- 26.68 சதவீதம் மற்றும் சம்பத் வங்கி – 13.32 சதவீதம் போன்ற வங்கி குழவை உள்ளடக்கி) மற்றும் 75 கைப்போதகேசன் உப கடன்களையும் மற்றும் வங்கி மெலதிகப் பற்று வசதி ஒன்றினையும் 1997-2007 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது வழங்கியிருந்தது.<br>ஆரம்பத்தில், றை ஸ்ரார் அபரல் எக்ஸ்போட் (தனியார்) கம்பனிக்கு வழங்கப்பட்ட சின்டிகேட் கடன் யூஎஸ்டி 7.5 மில்லியனாகவிருந்ததுடன் இது 6 மாதங்கள் யூஎஸ் எல்ஜபீஓஆர் மேலதிகமாக 3.75 சதவீத வட்டி வீதத்துடன் 36 தவணைப்பணங்களாக மீளசெலுத்த வேண்டியிருந்தது. இலங்கை வங்கி பங்களிப்பு யூஎஸ்டி 2.5 மில்லியனாகவிருந்த அதேநேரம் ஹற்றன் நசனல் வங்கி, ஸ்ராண்ட்டட் சாட்டட் வங்கி மற்றும் சம்பத் வங்கியால் தலைமை தாங்கப்பட்டது. பின்னர், கம்பனியானது 6 மாதங்கள் கருணை காலப்பகுதியுடன் 60தவணைகளாக கடனைச் செலுத்துவதற்கு கம்பனி மேன்முறையீடு செய்திருந்தது. எனினும், வருடமொன்றிற்கு அதிகுறைந்த 9.5 சதவீதத்துடன் 6 மாதங்கள் எல்ஜபீஓஆர் இற்கு மேலாக 3.75 சதவீத வட்டி வீதத்துடன் கருணை காலமில்லாமல் 48 மாதங்களுக்கு கடன் மீள்செலுத்தல் காலப்பகுதி சின்டிகேட் கடனாளிகளுக்கு நீடிக்கப்பட்டிருந்தது. வட்டியுடன் தேசிய அபிவிருத்தி வங்கி (என்டிபீ), டீஎப்சீசீ வங்கி மற்றும் இலங்கை மேர்காண்ட் வங்கி மற்றும் நிதி பீஎல்சீ(எம்பீஎஸ்எல்) இடமிலுள்ள கடன் நிலுவை மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும் ஈபீஎவ் மற்றும் ஈரீஎவ் நிலுவைகளை செலுத்துவதற்கும் மக்கள் வங்கியின் நிலுவையை தீர்ப்பனவு செய்வதற்கும் கடனானது வழங்கப்பட்டிருந்தது. சபையானது வருடமொன்றிற்கு அதிகுறைந்த 9.5 சதவீதத்துடன் 6 மாதங்கள் எல்ஜபீஓஆர் இற்கு மேலாக 3.75 சதவீத வட்டி வீதத்துடன் வட்டிவீதத்தை அனுமதித்திருந்தத்துடன் வங்கியானது காலப்பகுதியின் | றை ஸ்ரார் அபரல் எக்ஸ்போட் (தனியார்) கம்பனியானது பீஓஐ அனுமதியின் கீழ் இயங்குகின்ற தலமைதாங்கும் அபரல் எக்ஸ்போட் கம்பனியாகும். வசதிகளானது முறையான மதிப்பீட்டின் பின்னர் வழங்கப்பட்டதுடன் பின்னர் அது 1998 இல் என்பீஏ வகைப்படுத்தல்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.<br>அறவீட்டு நடவடிக்கைகள் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் உரிமைகளை அமுல்படுத்துவதன் மூலமும் ஒவ்வொரு வசதிகளிற்கும் அறவீட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இலக்கம் 02, 2வது வீதி, ஓப் மல்லிகாவ வீதி, நெலும்புற, இரத்மலானவில் அமைந்துள்ள சொத்திற்கான பட்டியலிடப்பட்ட ஏலமானது அப்பகுதியில் வசிக்கின்ற இனங்காணாத நபரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட விடயத்தினை தீர்த்த பின்னர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. | அறவீட்டுச் செய்முறை பின்தொடர வேண்டும். |

போது 8 சதவீத ஆகக்குறைந்த நிலையான விகிதத்தை பேணியிருந்தது.

அதனைத் தொடர்ந்து ஸ்டான்டட் சாட்டட் வங்கி பின்வரும் காரணங்களால் சின்டிகேட் வசதிகளுக்கு பங்களிப்பதில்லையென அறிவித்திருந்ததுடன் மக்கள் வங்கி சொல்லப்பட்ட பங்கிற்கு பங்களித்திருந்தது.

1. றை ஸ்ரார் அபரல் எக்ஸ்போட் (தனியார்) கம்பனியின் பங்குதாரர் அல்லது ஆரம்பிப்பாளராகவுள்ள எஸ்ஆர் ஜென்ட் பீஎல்சீ இன் எதிர்கால் தொடர்பிலாக நிச்சயமற்ற தன்மை.
2. றை ஸ்ரார் "பீ" குழு தொழிற்சாலைகளின் முகாமைத்துவத்தில் திடமில்லாத தன்மை
3. பாதுகாப்பு ஆவணப்படுத்தல் தொடர்பிலான திருப்திகரமற்ற நிலமை.

யூஎஸ்டி 1.52 மில்லியன் சின்டிகற் கடன் I ஆனது 8 சுகந்திரச் சொத்துக்கள் மீதானதும் யூஎஸ்டி 0.96 மில்லியன் சின்டிகற் கடன் II ஆனது 8 சுகந்திரச் சொத்துக்கள் மீதான அடமானத்திற்கு எதிராகவும் பாதுகாக்கப்பட்டது.

சின்டிகற் கடனை வழங்கும் போது பின்வரும் மூன்று அடமான முறிகள் நிறைவேற்றப்பட்டதுடன் விபரங்கள் பின்வருமாறுள்ளது.

| பிணை வகை | முறி பெறுமதி (யூஎஸ்டி மில்லியன்) | யூஎஸ்டி இல் சொத்தின் தேறிய புத்தகப் பெறுமதி (1 $ = ரூபா.58) |
|---|---|---|
| சுகந்திரச் சொத்துக்கள் (8 சொத்துக்கள்) | 3.6 | 2.68 |
| குத்தகைச் சொத்துக்கள் (8 சொத்துக்கள் ) | 2.1 | 1.36 |
| இயந்திரம் | 1.3 | 4.29 |
| **மொத்தம்** | **7.5** | **8.33** |

கடன்களை வழங்கும் போது சம்பத் மற்றும் ஹற்றன் நசனல் வங்கி பிணை நிலமையில் போதியளவற்றதாகவிருந்ததென குறிப்பிடப்பட்டதுடன் மேலதிக பிணைகளை கொண்டவருவதற்கு கம்பனியிடமிருந்து வேண்டப்பட்டது. எனினும், மேலதிக எந்தவித பிணையங்கள் கம்பனியால் வழங்கப்பட்டிருக்காததுடன் பிணையங்களின் புத்தகப் பெறுமதியின் 100 சதவீதத்திற்கு எதிராக வசதிகள் வழங்கப்பட்டது.

2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செலுத்த

வேண்டிய மூலதனம் மற்றும் வட்டி முறையே ரூபா.833.30 மில்லியன் மற்றும் ரூபா.2,593.68 இனை உள்ளடக்கி மொத்த செலுத்தவேண்டிய மீதி ரூபா.3,426.98 மில்லியனாகவிருந்தது.

16 அடமான சொத்துக்களில், 3 இலவச சொத்துக்கள் மற்றும் 1 குத்தகை சொத்துக்கள் வங்கியால் விற்கப்பட்டுள்ளன. மேலும், தனிமைப்படுத்தப்பட்ட மையங்களை பராமரிப்பதற்காக 04 இலவச சொத்துக்கள் 2020 திசெம்பர் 14 மற்றும் 2021 பெப்ரவரி 16 ஆகிய திகதிகளில் இலங்கை இராணுவத்திடம் தற்காலிகமாக கையளிக்கப்பட்டன. நுகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் இரண்டு சொத்துக்கள் மீதான தற்காலிக கையளிப்பிற்காக முறையே 2020 திசெம்பர் 03 இல் (இயக்குனர் சபை குறிப்பு எண்: 03.12.2020/11.5.02) மற்றும் 2021 மார்ச் 18 ((இயக்குனர் சபை குறிப்பு எண்: 18.03.2021/9.8.01) ஆகிய இரு சொத்துக்களையும் தற்காலிகமாக ஒப்படைப்பதற்கான மேவுகை அனுமதி சபையால் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஏனைய கூட்டமைப்பு வங்கிகள் எஞ்சிய இரண்டு சொத்துக்களை தற்காலிக அடிப்படையில் ஒப்படைப்பதற்கு தமது அக்கறையை தெரிவித்துள்ள அதேநேரம் சம்பத் வங்கி பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தமது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது.

1. அமைச்சரவையின் ஒப்புதலுடன் அரசாங்கத்திடமிருந்து முறையான ஏற்றுக்கொள்ளக்கூடிய கோரிக்கை.
2. மின்சாரம், தண்ணீர், பாதுகாப்பு போன்ற அனைத்து மேந்தலைச் செலவுகளும். மூலதனச் செலவீனம்/புனரமைப்புக் கிரயம் உரிய அரசாங்கத்தால் பொறுப்பேற்க வேண்டும்.
3. கூட்டமைப்பில் உள்ள வங்கிகள் இதற்குப் பொறுப்பேற்காது.
4. தனிமைப்படுத்தப்பட்ட நிறுவனங்களை தாபிப்பதற்குரிய சொத்துக்களை கையளிப்பதன் மூலம் கூட்டமைப்பில் உள்ள வங்கிக்கு எந்தவொரு சட்டப்பூர்வ குறைபாடுகளையும் தவிர்க்க சரியான ஆவணப்படுத்தல்.
5. உடமைகளை உரிய அதிகாரியிடம் ஒப்படைப்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருக்க வேண்டும் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு சொத்துக்கள் இலங்கை வங்கியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. அரசாங்கத்தால் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்டால், எங்களிடமிருந்தும் தனியார் அனுமதி கூட்டமைப்பில் உள்ள மற்ற வங்கிகளிடமிருந்தும் தனித்தனியாக அனுமதி பெறப்பட வேண்டும் மற்றும் அதன் பெறுமதி முடிவுறுத்தல் விலையை விட குறைவாக

இருக்கக்கூடாது மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சதவீதத்தின் பிரகாரம் கூட்டமைப்பு வங்கிகளிடையே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

7. வரையறுக்கப்பட்ட றை ஸ்டார் அப்பேரல் (பிரைவேட்) கம்பனியிடமிருந்தான கடனைக் கலைப்பதற்காக ஒரு வருங்கால வாங்குபவர் இருந்தால், சொத்தை அப்புறப்படுத்த கூட்டமைப்பில் உள்ள வங்கிகளின் உரிமையை ஒதுக்குதல்.

அவசரம் கருதி, சம்பத் வங்கியின் மேற்கூறிய நிபந்தனையை கருத்தில் கொள்ளாமல், 2021 பெப்ரவரி 16 இல் பொது முகாமையாளரின் ஒப்புதலுடன் மீதமுள்ள இரண்டு சொத்துக்களை வங்கி ஒப்படைத்துள்ளது.

மேலும், இலங்கை இராணுவத்திடம் தற்காலிகமாக கையளிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பின்வரும் செலவுகளை வங்கி ஏற்கனவே உள்வாங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்கள் விபரம் | உள்வாங்கப்பட்ட கிரயம் (ரூபா.) |
|---|---|
| இல.88 லொற் 22/23, மலிகாவ வீதி, தெலாவால | 6,000,159.90 |
| இல.30 மலிகாவ வீதி, தெலாவால | 14,211,527.50 |
| இல.154, சறி சாகுல மாவத்த், கட்டுப்பேத்த மொறட்டுவ. | 3,081,936.43 |
| No.29/5, கண்டாவளை மாவத்த, இரத்மலானை | 5,912,865.10 |
| றை ஸ்ரார் புத்தள- குத்தகைச் சொத்துக்கள் | 11,230,165.55 |
| றை ஸ்ரார் ஹலகமுவ – குத்தகைச் சொத்துக்கள | 10,585,409.82 |

சிண்டிகேட் வசதிக்கு எதிராக அடமானம் வைக்கப்பட்டுள்ள வேறொரு சுதந்திரச் சொத்தில் வசிக்கும் அங்கீகரிக்கப்படாத நபர் ஒருவர் செய்த விண்ணப்பத்தின் பேரில், கூட்டமைப்பு வங்கிகள் மற்றும் ஏலதாரர்களைத் தடைசெய்வதற்காக, வழக்கு எண்.டீஎஸ்பீ/106/24இன் கீழ், கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஒரு தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

8 குத்தகை சொத்துக்களில், 1 சொத்து ஏற்கனவே விற்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 7 சொத்துகளின் தற்போதைய நிலைமை பின்வருமாறு.

| சொத்துக்களின் விபரங்கள் | தற்போதைய நிலமை | விபரம் |
|---|---|---|
| பவுலன்டிஹம-ஹலகனும | மீள்விற்பனை தற்போது செய்முறையிலுள்ளது. | - |

| | | |
|---|---|---|
| மீகாவல புத்தள | விளம்பரப்படுத்துவதற்கு மீள்விற்பனை செய்வதற்கு | - |
| குளியாப்பிட்டிய ஒருலியாட்ட பொல்காவெல | ஏலமிடப்பட்டிருக்கவில்லை. | 2022 மே 02 இல் குத்தகை உடன்படிக்கை காலாவதியாகின்றது. |
| கும்புக்குலவ போல்பெத்திஹம | ஏலமிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கை இருக்கவில்லை. |
| நிக்காரமுல்ல யாப்பாகுவ | ஏலமிடப்பட்டிருக்கவில்லை. | 2027 மே 29 இல் குத்தகை உடன்படிக்கை காலாவதியாகின்றது. |
| முாகாலிஹம நிக்கவெறப்பிட்ட | ஏலமிடப்பட்டிருக்கவில்லை. | 2027 யூலை 15 இல் குத்தகை உடன்படிக்கை காலாவதியாகின்றது. |
| ஒப்படவெல பண்டாரவெல | ஏலமிடப்பட்டிருக்கவில்லை. | 2048 ஒக்தோபர் 09 இல் குத்தகை உடன்படிக்கை காலாவதியாகின்றது. |

மேற்கூறிய பத்திரங்களுக்கு மேலதிகமாக, வங்கியினால் வழங்கப்பட்ட மேலதிகப்பற்று வசதிக்கு எதிராக, இல. 30, மாளிகாவ வீதி, தெலாவல (1ஏ-2ஆர்-32பீ) இல் அமைந்துள்ள மற்றுமொரு சுதந்திரச் சொத்தை நிறுவனம் அடமானம் வைத்துள்ளதுள்ளதுடன் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களை பராமரிக்க 2020 நவம்பர் 10 இல் இலங்கை இராணுவத்திற்கு அத்தகைய சொத்து தற்காலிகமாக கையளிக்கப்பட்டது.

2024 பெப்ரவரி 22 ஆம் திகதி இலங்கை வங்கியின் பொது முகாமையாளருக்கு பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தில் பின்வரும் விடயங்கள் வங்கிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சும், இலங்கை இராணுவமும் முன்வைத்துள்ள உண்மைகளை கருத்தில் கொண்டு, இந்தக் கட்டிடங்களில் நிறுவப்பட்டுள்ள இராணுவப் பிரிவுகளை வேறு இடத்திற்கு மாற்றுவதில் உள்ள சிரமத்தை மற்றும் இடத்தை பராமரிப்பதற்கான நடைமுறை பொருத்தம் போன்றவற்றை கருத்தில் கொண்டு இந்தக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள இராணுவப் பிரிவுகள் உரிய காணி மற்றும் சொத்துக்களை தொடர்ந்து அனுபவிக்கும்.

இராணுவத்தினரின் பாவனைக்காக சொத்துக்களையும் காணிகளையும் சுவீகரித்துக் கொள்ளுமாறும் அதற்குத் தேவையான நிதியை திறைசேரியின் மூலம் தவணை முறையில் செலுத்த அனுமதிக்குமாறும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

எவ்வாறாயினும், 2024 மார்ச் 13 வரை எந்தவொரு நிதி ஏற்பாடு குறித்தும் திறைசேரி கருத்து தெரிவிக்கவில்லை. எனவே அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை விற்பதன் மூலம் கடன்களை திரும்பப் பெறுவது சந்தேகத்திற்குரியது.

மேலதிக மிதக்கும் ஹைப்போதெகேஷன் பத்திரம் மற்றும் ஹைபோதெகேஷன் கடன் ஒப்பந்தத்தின் பாதுகாப்பிற்கு எதிராக வழங்கப்பட்ட சிண்டிகேட் கடன் வசதிகளுக்காக 20 2018 பெப்ரவரி 20 அன்று முடிவுறுத்தாலாளருடன் வழக்கு எண். எச்சீ சிவில் 52/2016/சீஓ இன் கீழ் வங்கி கோரிக்கையை பதிவு செய்துள்ளது. வரையறுக்கப்பட்ட ஏம்சீ ஓசியன் லொயிஸ்ரிக் என்ற நிறுவனத்தால் முடிவுறுத்தல் வழக்கு தொடரப்பட்டது. இந்த வசதியின் மற்ற பிணையானது மறைந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரின் தனிப்பட்ட உத்தரவாதமாகும்.

(v) ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கடன்கள் வழங்கப்பட்ட வாடிக்கையாளர்களும் இருந்தனர், அந்த கடன்கள் அதே ஆண்டில் என்பீஎல் வகைக்கு மாற்றப்பட்டன (மறு திட்டமிடப்பட்ட வசதிகள் விலக்கப்பட்டுள்ளன). மேற்கூறிய வகைக்குள் வரும் முதல் 10 வாடிக்கையாளர்களின் பகுப்பாய்வின்படி, 2023 ஆம் ஆண்டில் இந்த 10 வாடிக்கையாளர்களுக்கு ரூபா.514.92 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது மற்றும் வழங்கப்பட்ட தொகையிலிருந்து 456.45 மில்லியன் அல்லது 88.64 சதவீதம் அதே ஆண்டில் செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டுள்ளது.

| இல | வாடிக்கையாளரின் பெயர் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|
| | | கடன்களின் எண்ணிக்கை | 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா.மில்லியன்) | 2023.12.31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை as (ரூபா.மில்லியன்) |
| 1 | வரையறுக்கப்பட்ட எம்/எஸ் ஹிங்குறான டிஸ்ரில்லோர்ஸ் (தனியார்) | 10 | 157.00 | 182.30 |

ஒரு கட்டுப்பாட்டு பொறிமுறையாக, என்பீஏ க்கு மாற்றப்பட்ட வசதிகள் குறித்த ஒரு குறிப்பாணை தேதி வழங்கப்பட்டு 06 மாதங்களுக்குள் கடன் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்த வசதிகளை வழக்கமான பிரிவில் வைத்திருக்கத் தவறியதற்கான காரணங்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

அதனை அறவிடுவதற்கு வாடிக்கையாளர்களுக்காக எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளின் தற்போதைய நிலை பின்வருமாறு.

| வாடிக்கையாளரின் பெயர் | முகாமைத்துவப் பொறுப்பு |
|---|---|
| வரையறுக்கப்பட்ட எம்/எஸ் ஹிங்குறான டிஸ்ரில்லே | வசதிகள் பீஆர்யூயூ பிரிவு |

குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு முன் வங்கியால் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கம்பனி | | | | லார்ஸ் (தனியார்) கம்பனி | |
| 2 | வரையறுக்கப்பட்ட ஹிங்குறான (தனியார்) கம்பனி | 2 | 100.00 | 106.19 | வரையறுக்கப்பட்ட ஹிங்குறான (தனியார்) கம்பனி | வசதிகள் பீஆர்யூயூ பிரிவு |
| 3 | எம்/எஸ் எலக்ட்ரோ மெட்டல் பிரஸ்சிங்ஸ்(தனியார்) கம்பனி | 1 | 50.00 | 50.21 | எம்/எஸ் எலக்ட்ரோ மெட்டல் பிரஸ்சிங்ஸ்(தனியார்) கம்பனி | தற்போது, நிறுவனம் இந்த வசதியை 2 தவணை நிலுவைகளுடன் வழங்கி வருகிறது. |
| 4 | வேல்ட்வைட் கமாடிடீஸ் (தனியார்) கம்பனி | 8 | 71.71 | 43.19 | வேல்ட்வைட் கமாடிடீஸ் (தனியார்) கம்பனி | ஏற்றுமதி வருமானத்துடன் நிறுவனம் ஏற்கனவே ருபா.24,462,217.37 செலுத்தியுள்ளது |
| 5 | எம்/எஸ் லேக் இலவங்கப்பட்டை தோட்டக்காரர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் | 5 | 31.98 | 28.93 | எம்/எஸ் லேக் இலவங்கப்பட்டை தோட்டக்காரர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் | அறவீட்டு நடவடிக்கை தொடங்க வேண்டும் |
| 6 | எம்/எஸ் சன்கிரெஸ்ட் டீஸ் (தனியார்) கம்பனி | 4 | 36.60 | 23.19 | | |
| 7 | திரு. கே எச் சி சண்டருவன் | 2 | 4.50 | 5.72 | திரு. கே எச் சி சண்டருவன் | கோரிக்கை கடிதம் 01.04.2024 அன்று அனுப்பப்பட்டது. |
| 8 | நியூ ஆம்ரா ரைஸ் மில் | 1 | 52.50 | 5.69 | நியூ ஆம்ரா ரைஸ் மில் | மறு அட்டவணைக்கான விவாதங்கள் நடந்து வருகின்றன. |
| 9 | திரு டி ஆர் ஹேவாகுட்டிகே | 1 | 5.00 | 5.55 | திரு டி ஆர் ஹேவாகுட்டிகே | 10.01.2024 அன்று வசதி முழுமையாகத் தீர்க்கப்பட்டது. |
| 10 | எம்/எஸ் விக்கிரமராச்சி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (தனியார்) கம்பனி | 1 | 5.64 | 5.48 | எம்/எஸ் விக்கிரமராச்சி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் | வசதி முறைப்படுத்தப்பட்டுள்ளது. |

(தனியார்) கம்பனி

(vi) கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் வங்கியின் பல்வேறு துறைகளுக்காக வழங்கப்பட்ட கடன்களின் செயற்பாடா விகித விகிதத்தை பகுப்பாய்வு செய்யும் போது, உற்பத்தி, சுற்றுலா மற்றும் நிர்மாணப் பிரிவுகளின் செயற்பாடற்ற விகிதங்கள் கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் படிப்படியாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. மற்றும் இன்னும் குறிப்பிடத்தக்க விகிதங்கள் பதிவு செய்யப்படுகின்றது..

| துறை | என்பீஏ விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
| உற்பத்தி | 20.29 | 23.44 | 18.73 | 20.13 | 17.14 |
| சுற்றுலா | 11.69 | 7.85 | 3.49 | 3.93 | 5.06 |
| நிர்மாணம் | 18.19 | 16.87 | 11.72 | 13.40 | 13.23 |

வங்கி எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத நிகழ்வுகளால் கடந்த ஐந்து ஆண்டுகளில் முழு வங்கியின் செயல்படாத கடன் விகிதம் அதிகரித்துள்ளது. அதன்படி, உற்பத்தி, சுற்றுலா மற்றும் பொருளாதார வீழ்ச்சியின் பாதகமான தாக்கங்களால் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட தொழில்கள் மற்றும் இன்னும் மீள் நிலையில் உள்ளன. இந்த நிலைமை தொடர்புடைய துறைகளில் என்பீயூ விகிதங்கள் அதிகரிக்க வழிவகுக்கிறது.
நடைமுறையில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப பல்வேறு மீட்பு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
மேலும், ஒவ்வொரு வசதிக்கும் மானியம் வழங்குவதற்கு முன் முறையான கடன் மதிப்பீடு செய்யப்படுகிறது. கடன் கலவையின் வழக்கமான மறுஆய்வு, மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் ஆகியவை என்பீஏ மறுஆய்வுக் குழு மட்டத்தில் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

செலுத்தப்படாத கடன்களின் அறவீட்டை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

(vii) **வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன்கள் மீதான கணக்காய்வு மதிப்பாய்வு**

**அ. றுகுணு அபிவிருத்தி ஒப்பந்தகாரர்கள் மற்றும் பொறியியலாளர்கள் (தனியார்) கம்பனி.**

றுகுணு அபிவிருத்தி ஒப்பந்தகாரர்கள் மற்றும் பொறியியலாளர்கள் (தனியார்) கம்பனியானது பிரதானமாக நிர்மாணத் துறையில் குறிப்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (ஆர்டீஏ) கீழ் வீதி நிர்மாணம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கீழ் கழிவுநீர் வசதிகளை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது.
வணிக மறுமலர்ச்சி மூலோபாயத்தின் கீழ் ரூபா.4,155 மில்லியன் வெளிப்பாடு தொகையை வங்கி அங்கீகரித்துள்ளது மற்றும் வங்கியின் பனல்

திரு. பிரியந்த மலிந்துவபத்திரன ஆர்டிசீஈ இன் ஒரே பணிப்பாளர் ஆவார். அவருக்கு வயது 53, அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் வணிக இயக்கத் திட்டத்தில் அவரது பிள்ளைகளை நியமிப்பதைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாரிசு திட்டத்தை சமர்ப்பிக்குமாறு நிறுவனத்திற்கு ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.
2025 மார்ச் 31 அல்லது அதற்கு

அறவீட்டைப் பின்தொடரவேண்டியுள்ளது..

மதிப்பீட்டாளரால் வைக்கப்பட்ட மொத்த சந்தை மதிப்பு ரூபா.1,160 மில்லியன் கொண்ட 08 அசையா சொத்துக்களை நிறுவனம் வழங்கியுள்ளது. இயக்குநர்கள் குழுவிற்கான விஞ்ஞாபனத்திலுள்ள பிணை பாதுகாப்பு பகுப்பாய்வின்படி, பாதுகாப்பற்ற வெளிப்பாடு ரூபா.2,903.9 மில்லியன் ஆகும், இது நிறுவனத்தின் மொத்த வெளிப்பாட்டில் 70 சதவீதத்தை குறிக்கிறது. 2021 ஏப்ரல் 01 இல் நிறுவனத்தின் வணிக மறுசீரமைப்புப் பொதிக்கு சபை அனுமதி பெறப்பட்டது. பின்னர், நிறுவனம் உத்தரவாதக் கடிதத்தின் எல்லையை ரூபா.1 பில்லியனில் இருந்து ரூபா.2 பில்லியனாக உயர்த்தக் கோரியது மற்றும் விலைப்பட்டியல் தள்ளுபடி (சுழலும்) வரம்பை ரூபா.200 மில்லியனில் இருந்து ரூபா.400 மில்லியனாக உயர்த்தியது. அதன்படி, அந்தக் கோரிக்கைகள் 2021 செப்தெம்பர் 16 அன்று சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இதன் விளைவாக, நிறுவனத்தின் வெளிப்பாடு ரூபா.5,355 மில்லியனாக அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் வங்கி ரூபா.85 மில்லியன் வட்டியை தள்ளுபடி செய்து, மேலும் திரட்டப்பட்ட வட்டியை தள்ளுபடி செய்துள்ளது. டெர்மினல் ஆதாயமாக மறுதிட்டமிடப்பட்ட தேதி மற்றும் அனைத்து வசதிகளுக்காக திரட்டப்பட்ட ரூபா.31.11 மில்லியன் அபராத வட்டி 100 சதவீதம் தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் முன்மொழியப்பட்ட மறு திட்டமிடல் தேதி வரை மேலும் அபராத வட்டி சேர்க்கப்படும்.

மேலும், 2023 யூலை 11 திகதியிடப்பட்ட சபைக் குறிப்பின் பீஎம் எண்.210ன் படி, கடைசியில் மூலதனம் மற்றும் வட்டியைத் தீர்ப்பதற்கான கட்டண அட்டவணையில் திருத்தம் செய்து, கடன்களின் முதிர்வு காலத்தை மேலும் ஒன்பது மாதங்களுக்கு நீட்டிக்க மேவுகை அனுமதியை சபை வழங்கியதுடன் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து கடன்களின் தவணை மற்றும் கடன்களின் அனைத்து நிலுவைகள் மற்றும் எதிர்கால தவணைகளை 2023 திசெம்பர் வரை ஒத்திவைத்தல் மற்றும் நீட்டிப்பு மற்றும் ஒத்திவைப்புகளை செயல்படுத்தும் திகதி வரை தாமதம்/அபராத வட்டியை தள்ளுபடி செய்தல்.

2023 திசெம்பர் 31 இல் முறையே ரூபா.1,552 மில்லியன் மற்றும் ரூபா.404.66 மில்லியன் மூலதனம் மற்றும் வட்டி உட்பட மொத்தச் செயல்படாத கடன் மீதி ரூபா.1,956.66 மில்லியனாக இருந்தது. வெளிப்பாடுத் தொகை ரூபா.822.14 மில்லியன், இது பிணையமாக குறைவான வலுவுள்ள நிறுவனத்தின் தனிப்பட்ட உத்தரவாதத்திற்கு எதிராக வழங்கப்பட்ட கம்பனின் மொத்த என்பீஏ மீதியின் 42.02 சதவீதத்தை குறிக்கிறது.

மேற்கூறிய வசதிகளை வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன,

- நிறுவனம் ஒரே இயக்குநர் நிறுவனம் மற்றும் வாரிசுத் திட்டம் நடைமுறையில் இல்லை.

முன் புதிய இயக்குநர்களை நியமிக்க நிறுவனம் ஒப்புக்கொண்டது மற்றும் மேற்கூறியவற்றைக் கூறி உறுதிமொழி பெறப்பட்டது.

சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, நிறுவனத்தால் தங்கள் ஒப்பந்தங்களை விரும்பியபடி செய்ய முடியவில்லை.

வரையறுக்கப்பட்ட திட்டங்களில் இருந்து புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதில் கடுமையான போட்டி காரணமாக, நிறுவனம் ஓரளவு வருமானத்தை ஈட்ட முடிந்தது. தற்போது இந்த நிலை படிப்படியாக அதிகரித்து வருகிறது. 2015-19 ஆம் ஆண்டில், ஆர்டீஏ கட்டுமானத் திட்டங்களை வழங்கவில்லை, மேலும் நிறுவனத்தின் வருவாய் பெருமளவு குறைந்துள்ளது. எனவே, நிறுவனம் நஷ்டம் அடைந்தது மற்றும் அனைத்து வசதிகளும் என்பீஏ பிரிவிற்கு மாற்றப்பட்டது.

நிறுவனம் தற்போது சூரியகாந்த - ரக்வான வெளிநாட்டு நிதியுதவியுடன் கூடிய சாலைத் திட்டத்தைக் கையாள்கிறது மற்றும் கிழக்கு மாகாணத்தில் ஒரு சாலைத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. மறுமலர்ச்சி காலத்தில் நிறுவனம் பீஓசிக்கு ரூபா.5.0 பில்லியன் பணப்புழக்கத்திற்குவிட்டதுடன் மற்றும் சுமார் ரூபா.3.2 பில்லியன் (எஸ்ரீஎல் மற்றும் மறு திட்டமிடப்பட்ட வசதிகள் இரண்டும்) மற்றும் சுமார் ரூபா. 220.0 மில்லியன் வட்டிறை அறவிட்டிருந்தது. தற்போதுள்ள பணப்புழக்கங்கள், மறு திட்டமிடப்பட்ட வசதிகளை திருப்பிச் செலுத்த போதுமானதாக இல்லை.

கடந்த பல மாதங்களில் நிறுவனம் ஏல முறை மூலம் பல நிதியுதவி திட்டங்களைப்

- நிறுவனத்தின் முக்கிய நிதிப் புள்ளி விவரம் 2018/2019 ஆம் ஆண்டில் ரூபா.267.259 மில்லியன் நிகர இழப்பைப் பதிவு செய்துள்ளதுடன் மேலும் நிறுவனத்தின் மொத்தப் பொறுப்புகள் அதன் மொத்தச் சொத்துக்களை விட 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா.764.203 மில்லியனாக இருந்தது. மேலும், கம்பனி தொடர்ந்து நஷ்டத்தைப் பதிவு செய்தது. கடந்த ஆண்டுகளில். இந்த காரணிகள் நிறுவனத்தின் வணிகத்தை தொடரும் திறன் மற்றும் வசதிகளின் சேவைத்திறன் குறித்து குறிப்பிடத்தக்க சந்தேகத்தை எழுப்பியது.
- 2019/20 இன் சமீபத்திய காலத்திற்குப் பதிலாக, 2018/2019 இன் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் அடிப்படையில் கடன் பகுப்பாய்வு செய்யப்பட்டது.
- கோரிக்கை கடிதத்தின் பிரகாரம் இருப்பினும், சொத்துகளுக்கான பெரும்பான்மையின் புதிய மதிப்பீடுகள் பெறப்படவில்லை.
- அனைத்து ஒன்பது குத்தகை வசதிகளின் காப்பீட்டுக் கொள்கைகள் 2023 பெப்ரவரி 10 இல் முதிர்ச்சியடைந்தன மற்றும் 2023 நவம்பர் 08 இல் கணக்காய்வுத்கிகதியிலுள்ளவாறு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

பின்வரும் அடமான அசையா சொத்துகளின் காப்பீட்டுக் கொள்கைகள் முதிர்ச்சியடைந்தன மற்றும் 2023 நவம்பர் 08 இல் கணக்காய்வுத்திகதியன்று பாதுகாப்பு கோப்பில் புதுப்பித்தல் ஆவணங்கள் இல்லை. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **சொத்து விபரம்** | **தற்போதுள்ள காப்பீட்டு கொள்கையின் முதிர்வு தேதி** |
|---|---|
| $P_1$ –மீள்பட்டியலிடப்பட்ட கடன் ஏ -1 | 2022.08.03 |
| $P_2$ - மீள்பட்டியலிடப்பட்ட கடன் ஏ -2 மற்றும் கடன்களின் வசதிகள் | 2022.08.03 |
| $P_4$ - மீள்பட்டியலிடப்பட்ட கடன் ஏ -4 | 2022.08.10 |
| $P_5$ - மீள்பட்டியலிடப்பட்ட கடன் ஏ A-5 | 2022.08.10 |
| $P_6$ - மீள்பட்டியலிடப்பட்ட கடன் ஏ -6 | 2022.08.10 |
| $P_7$ – கடன்களின் வரிசை மற்றும் தவணைக் கடன் | 2022.06.21 |
| $P_8$ - கடன்களின் வரிசை | 2020.06.18 |

பெற முயன்றது, ஆனால் திட்டங்களைப் பெற முடியவில்லை.

கட்டுமானத் துறையின் கீழ்நோக்கிய போக்கு காரணமாக, நிறுவனம் 2019/2020 இல் அனைத்து வணிகச் செயல்பாடுகளையும் நிறுத்தியுள்ளது. எனவே, மதிப்பீட்டின் போது அவர்கள் நிறுவனத்தின் நிதிகளைத் தயாரிக்கவில்லை.

2022/2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுசெய்யப்பட்ட செய்யப்பட்ட நிதி அறிக்கை பெறப்பட்டது மற்றும் நிறுவனம் 2023/2024 கணக்காய்வு செய்யப்பட்ட செய்யப்பட்ட நிதி அறிக்கையினை 2024 நவம்பர் அல்லது அதற்கு முன் வழங்க ஒப்புக்கொண்டதுடன உறுதிமொழியொன்று பெறப்பட்டது.

2023/2024 இல் அனைத்து சொத்துகளும் மறுமதிப்பீடு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டன ஹொரட்டன், மல்புடனெல்ல, மிஹிடும் வள்ளியிலுள்ள தேயிலை தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் மதிப்பீடு இன்று வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து ஒன்பது குத்தகை வசதிகள் காப்பீட்டுக் கொள்கை புதுப்பிக்கப்பட்டுள்ளது

மேலும், 2017 இல் ஆரம்பக் கடனை வழங்கும் நிலையில், கம்பனியின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல் திருப்தியற்ற மட்டத்தில் இருந்ததுடன், கடன்களை வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளரின் விற்பனை, முதலீடு, நீண்ட கால கடன் மற்றும் திருப்பிச் செலுத்தும் திறன் ஆகியவற்றை கிளை ஆழமாக மதிப்பீடு செய்திருக்கவில்லை. கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2016/17, 2017/18 மற்றும் 2020/21 இல் குறிப்பிடத்தக்க தேறிய நட்டங்களைப் பதிவு செய்துள்ளன. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அந்த நேரத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுடன் சுற்றுலாத் துறையில் வருமானம் ஈட்டுவதில் குறிப்பிடத்தக்க குறைவு காரணமாக இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது. கம்பனியின் நீண்ட கால கடன், நீண்ட கால கடன/மூலதன விகிதம், மொத்த கடன்/மூலதன விகிதம் மற்றும் வட்டி மேவுகை ஆகியவை காலம் முழுவதும் திருப்திகரமாக இருக்கவில்லை.

மேலும், அந்நியச் செலாவணி, குறைந்தபட்ச விற்பனை, குறைந்தபட்ச தேறியலாபம்/விற்பனை, கடன் சேவை மேவுகை, வட்டிச் சேவை மேவுகை விகிதம், அதிகபட்ச கால அளவு, முற்பண விகிதம் மற்றும் காப்புறுதி உரித்தை பெறுதல் ஆகியவற்றின் அடிப்படையில் வேலைகள் உள்ளிட்ட பகுதிகள் பொருண்மையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், ஹோட்டல் செயற்திட்டத்தின் தற்போதைய ஒட்டுமொத்த நிலைமை (Q சேர்வ், பேராசிரியர் சித்திரா வெட்டிகார வழங்கிய உறுதிப்படுத்தலின் அடிப்படையில்) 83.4% ஆகும். (மொத்த செயற்திட்ட கிரயம் - 2023 திருத்தப்பட்டது- ரூபா 15,676.25 மில்லியன் மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலை - ரூபா 13,074.74 மில்லியன்)

2022 ஆம் ஆண்டில், விளம்பரதாரர் அவர்களின் தற்போதைய ஹோட்டலான பேர்ல் கிராண்ட் ஹோட்டலை ரூபா 1,650 மில்லியனுக்கு ரத்னா தொகுதிக்கு அப்புறப்படுத்துவதன் மூலம் மூலதன உட்செலுத்துதல் இடைவெளியை எதிர்கொள்ள முயற்சித்தார்.

எனினும், கம்பனியால் ஹோட்டல் செயற்திட்டத்தை பூர்த்திசெய்ய முடியவில்லை. மேலும் விளம்பரதாரர் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு வங்கி உதவியை தொடர்ந்து கோரியிருந்ததுடன் விளம்பரதாரர்களிடமிருந்து மேலும் மூலதன பங்களிப்புக்கள் கிடைக்காததை வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு முதல் வட்டி திரண்டமை மற்றும் ஹோட்டல் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட அந்நிய செலாவணி கடன்களின் பெறுமானத்தேய்வு ரூபா 13.47 பில்லியன் வரை அதிகரித்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் வாடிக்கையாளர் குறைந்த கட்டுப்பாட்டைக் கொண்ட நாணயமாற்று விகித மதிப்பிழப்பு மற்றும் வட்டி திரண்டமை காரணமாக இலங்கை ரூபா 7.8 பில்லியன் ஆரம்ப கடன் வழங்கல் இலங்கை ரூபா 5.7

வங்கியின் கடன் கொள்கையில் இருந்து விலகல்கள் அவதானிக்கப்பட்டன.
2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்தச் செயற்பாடற்ற மீதி ரூபா 11,540.67 மில்லியன் மற்றும் ரூபா 1,824.48 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி மீதியுடன் ரூபா 13,365.15 மில்லியனாக இருந்தது.
மிலாகிரிய வட்டார இல. 39, எட்வார்ட் வீதி மற்றும் பௌத்தலோக மாவத்தை, கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள அசையாச் சொத்துக்களுக்கு எதிராக மொத்த நிலுவைத் தொகை பாதுகாக்கப்பட்டது, இதன் கட்டாய விற்பனை பெறுமதி ரூபா 15,000 மில்லியன் மற்றும் MV ரூபா 17,500 மில்லியன் (2023/04/06 இல் VRP இன் பிரகாரம்) ஆகும்.

பில்லியால் அதிகரித்துள்ளது.
பல கலந்துரையாடல்களுக்குப் பின்னர் செயற்திட்டத்தின் தொழிற்படு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 500 மில்லியன் தொகையை முற்பணமாக வழங்குவதற்கு விளம்பரதாரர் இணங்கியிருந்தார்.
இதற்கிடையில், கம்பனி செயற்திட்டத்திற்கான சாத்தியமான முதலீட்டாளர்களை மதிப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ளதுடன் திசெம்பர் - 2024 வரை காலம்தாழ்த்தி மீளச் செலுத்துதல் வழங்கப்பட்டுள்ளது. கம்பனியின் கூற்றுப்படி, பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டத்திற்கு சாத்தியமான முதலீட்டாளர்களை ஈர்ப்பது சவாலானதாகும்.

**(xi) லாக்ப்ஸ் காஸ் பிஎல்சிக்கு வழங்கப்படும் வசதிகள்**

திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு (LPG) இறக்குமதி, சேமிப்பு, நிரப்புதல், விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றின் கீழ்நிலை வணிக நடவடிக்கைகளில் கம்பனி ஈடுபட்டுள்ளது. வங்கி ரூபா 2,994 மில்லியன், ரூபா 131,36 மில்லியன், மற்றும் ரூபா 1,415.64 மில்லியன் என முறையே மூன்று கால கடன் வசதிகள், இரண்டு உப கடன் வசதிகள் மற்றும் நான்கு ஹைபோதெகேஷன் கடன் வசதிகளை வழங்கியுள்ளது. ஏனைய வணிக வங்கிகளின் குறுகிய கால கடன்களை தீர்த்தல், ஏற்கனவே உள்ள ஹைபோதெகேஷன் கடன்களின் மூலதன நிலுவையை மறுசீரமைத்தல், இறக்குமதி நோக்கங்கள் மற்றும் காலம்தாழ்த்தி மீளச்செலுத்துதல் நோக்கங்களுக்காக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை வங்கி முதன்முதலில் 2018 செப்தெம்பரில் வசதிகளை வழங்கியதுடன் வசதிகள் ஆரம்பத்தில் 2020 இல் மீளப்பட்டியலிட்டு 2021 யூன் மாதத்தில் மறுசீரமைக்கப்பட்டது. 2023 பெப்ரவரி முதல் செயற்பாடற்ற வகையின் கீழ் வசதிகள் வகைப்படுத்தப்பட்டன.
2017/18 முதல் 2020/21 வரையிலான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க தேறிய நட்டங்கள் மூலம் 2018 இல் புதிய வசதிகளை வழங்கும் நேரத்தில் கம்பனியின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல் திருப்திகரமாக இல்லை என்பதைக் காட்டுகிறது. கொவிட் தொற்றுநோய்க்கு முன்னரும் கூட, கம்பனியின்

1. LPG விலைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தியதால் கம்பனியின் வணிக காசுப்பாய்ச்சல் பாதிக்கப்பட்டது. 2021 ஒக்தோபர் முதல், LPG இன் நுகர்வோர் விலைகள் சந்தை சக்திகளால் மாத்திரமே நிர்ணயிக்கப்படுகின்றதுடன் அதிகாரிகளால் ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள் இல்லாமல் உள்ளன.
2. இரண்டாவது வழியைக் கருத்தில் கொள்வதற்கு முன்னர் வணிக காசுப்பாய்ச்சலிலிருந்து NPA வசதிகளை அறவிடும் செயன்முறையில் வங்கி இருந்தது. தேவைப்படும் மேலதிக காசுப்பாய்ச்சலை மேற்கொள்வதன் மூலம் வாடிக்கையாளர் NPA தீர்வுக்கு சாதகமாக பின்பற்றப்பட்டார்.
3. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், கம்பனி ரூபா

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

வருமானத்தை ஈடுசெய்வதற்கு போதுமானதாக இல்லாத அதிக நிதிச் செலவு காரணமாக இது முக்கியமாக இருந்தது. 2017-2021 காலப்பகுதியில் அதிக கடன்கள் மற்றும் தொடர்ச்சியான நட்டங்கள் காரணமாக கம்பனியின் அந்நியச் செலாவணி அதிகரித்துள்ளது. மேலும் கம்பனியின் நடைமுறை விகிதம் அதே காலத்திற்கான நிலையான தேவைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பாதகமான நிதிக் குறிகாட்டிகளைக் கருத்தில் கொள்ளும்போது, இந்த வசதிகளை வழங்குவதற்கு முன்னர் வங்கி திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் கம்பனியின் ஒட்டுமொத்த நிதி நிலைமையை சரியாக மதிப்பீடு செய்திருக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டது.

விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாதகமற்ற காரணிகளைக் கருத்தில் கொள்ளாமல், பணிப்பாளர் சபை முறையே ரூபா 1,200 மில்லியன் மற்றும் ரூபா 800 மில்லியன் காலக் கடன்களுக்கு 2018 ஆகஸ்ட் 29 இல் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. வங்கியால் நிதியின் இறுதிப் பயன்பாட்டைச் சரிபார்க்க முடியவில்லை. கம்பனியின் மூலதனச் செலவைக் குறைப்பதற்காகவும், நிதி நிலைமைக் கூற்றை மறுசீரமைப்பதற்காகவும் ஹட்டன் நேஷனல் வங்கி மற்றும் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியின் குறுங்கால பெறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு இது கம்பனியால் பயன்படுத்தப்பட்டது.

மூலதனத்திற்கான கடன் விகிதம், இடர் மதிப்பீடு மற்றும் சொத்துக்கு எதிரான முற்பண விகிதம் ஆகியவை எதிர்பார்த்த அளவு கடனைப் பராமரிக்க இயலாமையால் வங்கியின் கடன் கொள்கையில் விலகல்கள் அவதானிக்கப்பட்டன. திருப்தியற்ற நிதி ஆரோக்கியம், சேவைக் கடன்களுக்கு மேலதிக காசுப்பாய்ச்சலை உருவாக்கும் முறை, 60 சதவீதத்திற்கு அடமானக் காப்பீடு மற்றும் எதிர்மறையான உறுதிமொழியுடன் மேவுகை செய்யப்பட்ட மீதி மற்றும் அதே எதிர்மறை உறுதிமொழி மூலம் ஏனைய வங்கிகளில் கடன் வாங்குதல் போன்ற சாதகமற்ற கருத்துரைகள் பிரதம இடர் அதிகாரியால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கம்பனி 2021 யூன் 10 ஆம் திகதிய அதனது விஞ்ஞாபனத்தில் பிரதம இடர் அதிகாரியால் குறிப்பிடப்பட்ட விசேட நிபந்தனைகளை கம்பனி கடைப்பிடிக்கவில்லை, அதாவது, கூட்டுத்தாபனக் கிளையில் பேணப்படும் கணக்கு மூலம் காசுப்பாய்ச்சலின் 1/3 பங்கு இல்லாமல் 6.6 சதவீத காசுப்பாய்ச்சல்கள் மாத்திரமே அனுப்பப்பட்டன. ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்னறிவிக்கப்பட்ட விற்பனைத் திட்டம் மற்றும் இலாபக் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை, கடன்பட்டோரின் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம், வயதுப் பகுப்பாய்வுடன் பெறவேண்டியவைகள், மாதாந்த உற்பத்தி, ஒவ்வொரு காலாண்டிற்கான விற்பனை மற்றும் இருப்பு போன்றவை…

3,480.36 மில்லியன் NPA நிலுவையை கொண்டிருந்ததுடன் கம்பனி படிப்படியாக மொத்த NPA ஐ 2024 மே அளவில் தீர்ப்பனவு செய்ய முடியும்.

4. 2023/24 நிதியாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலைகளின் பிரகாரம், கம்பனி ரூபா 22,475.78 மில்லியன் (வருமான வளர்ச்சி 21.3%) வருமானத்தை ஈட்டியுள்ளதுடன் ரூபா 463.6 மில்லியன் (PAT 2.1%) இலாபத்தை பதிவு செய்துள்ளது.

   இடர் மதிப்பீடு : BB (2023)

5. பிணைகள்

   சொத்துக்களின் MV 2022: காலப்போக்கில் காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டது.

   VRP: ரூபா 1,320.0 மில்லியன்

   குழு மதிப்பீட்டாளர்: ரூபா 1,344.8 மில்லியன்

   மபிமா சொத்து மீதான எதிர்மறை உறுதிமொழி, லாப்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டின் கூட்டிணைந்த உத்தரவாதம், புத்தகக் கடன்கள் மற்றும் கடன் பொதிக்கான ஏனைய தொடர்புடைய பிணைகள்.

6. ஒவ்வொரு காலாண்டிற்கும் வயது பகுப்பாய்வு/ இருப்புக்கள், மாதாந்த வருமானம், இடைக்கால கணக்குகள் ஆகியவற்றுடன் கடன்பட்டோர் கூற்றுக்களை கம்பனி தாமதமின்றி சமர்ப்பித்து வருகிறது.

   தற்போது கடைபிடிக்கப்படும் கணக்குகள் மூலம் ப்ரோபியோனேட் காசுப்பாய்ச்சலை வழிநடாத்த ஒப்புக்கொண்டது. அத் திகதியில் (2024.10.09) உள்ளவாறு, கம்பனியின்

வங்கி அட்டுறு வட்டியில் இருந்து 40 சதவீத வட்டி தள்ளுபடியை வழங்கியுள்ளது, மேலும் 2021 முதல் 2024 திசெம்பர் வரை காலம்தாழ்த்தி மீளச்செலுத்துதல் வசதிகள் மற்றும் காலம்தாழ்த்தி மீளச்செலுத்துதல் ஆகியவற்றை வழங்கியுள்ளது. எனினும் கம்பனியின் மொத்த கடன் வெளிப்பாடு படிப்படியாக அதிகரித்துள்ளது.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாடிக்கையாளரின் மொத்தச் செயற்பாடற்ற மீதி ரூபா 2,691.15 மில்லியன் மற்றும் ரூபா 409.14 மில்லியன் தொகையான முறையே மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி மீதியுடன் ரூபா 3,100.29 மில்லியனாக இருந்தது.

மொத்த நிலுவைத் தொகையில் குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்பலப்பிட்டியில் ரீட் அவென்யூ (0A-1R-0.05P) மற்றும் ஸ்ரீ சம்புத்தத்வ ஜெயந்தி மாவத்தை, ஹேவ்லாக் டவுன் (A0-R0-P35.21) ஆகிய இடங்களில் உள்ள அசையாச் சொத்துகளுக்கு எதிராக ரூபா 1,487.87 மில்லியன் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவை முறையே ரூபா 650 மில்லியன் (2022/03/08 இல் VRP இன் பிரகாரம் ரூபா 720 மில்லியன் MV) மற்றும் ரூபா 510 மில்லியன் (2022/10/04 இல் VRP இன் பிரகாரம் ரூபா 600 மில்லியன் MV) கட்டாய விற்பனை பெறுமதியை கொண்டிருந்தன. முன்மொழியப்பட்ட கடன் வசதிகளைப் பாதுகாப்பதற்கு வங்கியில் அடமானம் வைத்துள்ள சொத்துக்களுக்கு குழு மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட சந்தை பெறுமதியின் 100 சதவீத முற்பணத்தை பரிசீலிப்பதற்கு 2018 ஆகஸ்ட் 29 இல் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனினும், ஏனைய வசதிகள் எந்த அசையா சொத்துக்களால் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

தற்போது, சாதகமான சந்தை நிலை காரணமாக கம்பனி அதன் நட்டத்தை அறவிட முடிந்ததுடன் 2024 ஒக்தோபர் 09 இல் உள்ள அனைத்து வசதிகளும் வழக்கமான பிரிவுக்கு மாற்றப்பட்டன.

அனைத்து வசதிகளும் வழக்கமான பிரிவில் உள்ளன, நிலுவைத் தொகைகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை மற்றும் தீர்வுகள் திருப்திகரமாக உள்ளன.

7. சாதகமான சந்தை நிலைமைகளின் கீழ், கம்பனி அதனது தயாரிப்புக்களை செலவு குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு வாய்ப்பு உள்ளது, இது அதன் வருமான உருவாக்கம் மற்றும் இலாபத்தை வலுப்படுத்தும். இறுதியில் இது திருப்திகரமான முறையில் கடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதை உறுதி செய்யும்.
8. கம்பனிக்கு வழங்கப்பட்ட வசதிகள் மற்றும் அதற்கான சரியான நேரத்தில் தீர்வு ஆகியவற்றை உறவுக் குழு கடுமையாக கண்காணித்து வருகிறது.

(xii) **இஸ்லாமிய வங்கி பிரிவு மூலம் வழங்கப்பட்ட கடன்**

2023.12.31 இல் பிரிவின் மொத்த கடன் வெளிப்பாட்டின் பெறுமதி ரூபா 1451.45 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 669.62 மில்லியன் அல்லது 46.13 சதவீதம் செயற்பாடற்றவையாக பதிவு செய்யப்பட்டது. 2019 முதல் 2023 வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் முறையே 15.20 சதவீதம், 37.61 சதவீதம், 59.76 சதவீதம், 45.36 சதவீதம் மற்றும் 46.13 சதவீதம் என அலகின் மொத்தக் கடன் வெளிப்பாட்டில் செயற்பாடற்ற கடன் வெளிப்பாட்டின் விகிதம் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மொத்தச் செயற்பாடற்ற கடன் வெளிப்பாட்டில், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலகின் முதல் 10

NPA விகிதம் 2024 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 15.5% ஆகக் குறைவடைந்தது.

முதல் 10 NPA வாடிக்கையாளர்கள் மீது IBU அறவீட்டு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

அறவீடுகள் பின்தொடரப்பட வேண்டும்.

செயற்பாடற்ற வாடிக்கையாளர்களால் ரூபா 656.81 மில்லியன் அல்லது 45.25 சதவீதம் மேவுகை செய்யப்பட்டதுடன் முதல் ஒரு செயற்பாடற்ற வாடிக்கையாளராக தரவரிசையிடப்பட்ட கம்பனி ரூபா 327.71 மில்லியன் அல்லது அலகின் மொத்தச் செயற்பாடற்ற கடன் வெளிப்பாட்டில் 48.94 சதவீதத்தை கொண்டுள்ளது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

<table>
<tr><th></th><th>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு</th><th>இணங்காமை</th><th>முகாமைத்துவ கருத்துரை</th><th>பரிந்துரை</th></tr>
<tr><td>(i)</td><td>1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டலின் 3(2)(i) ஆம் வழிகாட்டல்</td><td>2023 ஆம் ஆண்டில் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டலின் பிரகாரம் குறைந்தபட்சம் 6 பணிப்பாளர் தேவைப்பாட்டுடன் வங்கி இணங்கியிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறுள்ளன.
<table>
<tr><th>காலப்பகுதி</th><th>பணிப்பாளர் சபையின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>01.01.2023</td><td>5</td></tr>
<tr><td>02.01.2023-12.01.2023</td><td>4</td></tr>
<tr><td>13.01.2023-17.01.2023</td><td>3</td></tr>
<tr><td>18.01.2023-30.03.2023</td><td>4</td></tr>
<tr><td>31.03.2023-20.04.2023</td><td>5</td></tr>
<tr><td>21.04.2023-03.05.2023</td><td>4</td></tr>
<tr><td>04.05.2023-03.12.2023</td><td>5</td></tr>
</table></td><td>BOC கட்டளைச்சட்டத்தை திருத்துவதற்கான தற்போதைய நிலைமை: 2024.05.25 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு (ADG) பொதுமுயற்சிகள் பணிப்பாளர் நாயகம் அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் 2024.05.03 ஆம் திகதிய வங்கி மேற்பார்வை CBSL பணிப்பாளரின் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கான கருத்துரைகளுடன் சேர்த்து 2023.12.08 இல் இலங்கை வங்கியின் தலைவர் அனுப்பிய கருத்துக்களை சமர்ப்பிக்குமாறு சட்ட அலுவல்கள் ADG இற்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.</td><td>இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டல்களின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>(ii)</td><td>2021 இன் 13 ஆம் இலக்க பணிப்புரையின் 5.3 ஆம்</td><td>பணிப்புரையின் பிரகாரம், ஒரு கடன்பெறுபவர் வங்கியில் மேலதிகப்பற்று வரம்புகளுடன் பல நடைமுறைக்</td><td>M/S எர்ன்ஸ்ட் & யங் வழங்கிய இறுதி முகாமைத்துவ கடிதத்தில் இவ் விடயம்</td><td>எதிர்காலத்தில் பொருத்தமான பிரமாணத்துடன் இணங்க</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க பந்தி, வங்கிச் சட்ட பணிப்புரை. | கணக்குகளை வைத்திருந்தால், மொத்த அனுமதிக்கப்பட்ட வரம்புகள் மற்றும் அத்தகைய அனைத்து கணக்குகளிலும் நாளாந்தம் நிலுவையாக உள்ள மொத்த மீதி ஆகியவை OD இன் வகைப்படுத்தலிற்காக கருத்தில் கொள்ளப்பட வேண்டும். எனினும் வங்கியின் தற்போதைய நடைமுறை இந்த தேவைப்பாட்டுடன் இணங்கவில்லை. | நீக்கப்பட்டது. | வேண்டும். |
| (iii) | 2006 இன் 6 ஆம் இலக்க நிதி அறிக்கையிடல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகள் | வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கத் தவறியதால் இலங்கை மத்திய வங்கி 2023 நவம்பர் 07 இல் ரூபா 6,000,000 அபராதம் விதித்தது. | வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கத் தவறியதால் இலங்கை மத்திய வங்கி 2023 நவம்பர் 07 இல் ரூபா 6,000,000/- அபராதம் விதித்தது.<br>• PEP's உடனான வணிக உறவுக்காக சிரேஷ்ட முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது சரியான நேரத்தில் பெற்றுக்கொள்ளாமை<br>• நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக உடனடி முடக்க நடவடிக்கை மற்றும் ஏனைய துணை நடவடிக்கைகளை எடுக்காதமை<br>மேலும் வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கத் தவறியதால் இலங்கை மத்திய வங்கி (CBSL) 2023 நவம்பர் 07 ஆம் திகதிய இணங்குதல் சரிபார்ப்பை வெளியிட்டுள்ளது.<br>• பரிந்துரைக்கப்பட்ட வரம்பு பெறுமதியை விட அதிகமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடாமை | தொடர்புடைய பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

- இடைநீக்க உத்தரவுகள் மற்றும் காலநீடிப்பு உத்தரவுகளை கடைபிடிக்காமை.
- வாடிக்கையாளருடனான வணிக உறவின் போது மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களை தொடர்ந்து ஆய்வு செய்யாமை.
- முறையான இடர் கட்டுப்பாடுகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தாமை.

CBSL இன் FIU வழங்கிய PEP தொடர்பான வழிகாட்டல்களைப் பின்பற்றுவதை வலுப்படுத்துவதற்கு பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

1. 2023 PEP வழிகாட்டுதல்களின் அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கை (OIC) 01 இற்கு பிற்சேர்க்கை வெளியிடப்பட்டது, இது நடைமுறை கையேடுகள் உட்பட பின்பற்ற வேண்டிய அனைத்து தேவைகள் மற்றும் நடைமுறைகளை விபரிக்கிறது.
2. அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய இணக்கப் பயிற்சியின் மூலம் முன்னணி ஊழியர்கள், கிளை முகாமையாளர்கள்,

பிரதேச முகாமையாளர்கள், செயற்பாட்டு முகாமையாளர்கள் உட்பட தொடர்புடைய அனைத்து பதவியணியினரிற்கும் தெரிவித்தல்

3. PEP அங்கீகாரம் கிடைக்காத புதிய கணக்குகளைத் திறப்பதற்கான கட்டுப்பாடு சேர்க்கப்பட்டது.
4. எளிதாகக் குறிப்பிடுவதற்காக PEP அங்கீகாரங்களின் மென் பிரதிகளை DMS (வங்கியின் வாடிக்கையாளர் பதிவு, கணக்கு திறப்பு மற்றும் ஆவண முகாமைத்துவ முறைமை) இல் பேணுவதற்கு தனி இடம் அறிமுகப்படுத்தப்பட்டது.
5. DMS மற்றும் முக்கிய வங்கி முறைமையில் உள்ள வேலைவாய்ப்பு பிரிவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, FIU ஆல் பகிரப்பட்ட PEP தொடர்பான வேலைவாய்ப்பு வகைகளுடன் சேர்க்கப்பட்டது.
6. வேலைவாய்ப்பு மூலம் PEP அடையாளத்தை தானியக்கப்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளர்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பதிவின் போது DMS இல் PEP அங்கீகார செயன்முறையை தானிக்கப்படுத்துதலிற்கான முன்னேற்றத்தில் அபிவிருத்தி<br>PEP கணக்குகள் கண்காணிப்பு செயன்முறை உருவாக்கப்பட்டதுடன் இணக்கம், கிளை செயல்பாடுகள் மற்றும் கூட்டிணைந்த குழுக்கள் அந்த பணிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டன. | |
| (iv) | வங்கியுடன் கையெழுத்திடும் பயிற்சியாளர்களின் பயிற்சி உடன்படிக்கையின் 8.3 ஆம் இலக்க பந்தி | பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையின் கடைசித் திகதிக்கு முன்னதாகப் பயிற்சியாளர் தனது வேலையை முடித்துக் கொண்டால், பயிற்சிக்கான செலவு மற்றும் வங்கியால் மேற்கொள்ளப்படும் ஏனைய செலவினங்கள் என அவர்/அவள் அவர்களின் உடன்படிக்கையுடன் தொடர்புடைய தொகையைச் செலுத்த வேண்டும். எனினும், 2011 முதல் 2020 வரையான காலப்பகுதியில் 11 பயிற்சியாளர்களுக்கான பயிற்சி உடன்படிக்கைகளை வங்கி ரூபா 1.95 மில்லியன் பெறுமதியான பிணைமுறியை அறவிடாமலேயே நிறுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அறிவிக்கப்பட்ட 11 பயிற்சியாளர்கள் தங்கள் பயிற்சி உடன்படிக்கையை முன்கூட்டியே முடித்துக்கொண்டனர். எனினும், வங்கி அவர்களின் பதவிவிலகல் கோரிக்கையை கருத்தில் கொள்ளாததுடன் அவர்கள் தங்கள் பயிற்சி பிணைமுறி கடப்பாடுகளை முழுமையாக தீர்க்கும் வரை எந்த சேவை கடிதங்களையும் அல்லது வெளியீட்டு கடிதத்தையும் வழங்காததுடன் அவர்களின் பதவி விலகல் பூர்த்தி செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. | தொடர்புடைய பிரமாணத்துடன் இணங்க வேண்டும். |
| (v) | 2019 ஒக்தோபர் 15 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையால் திருத்தப்பட்ட இலங்கை வங்கியின் பெறுகைக் | முன்மொழிவுக்கான கோரிக்கையின் (RFP) 3 ஆம் பிரிவின் பிரகாரம் ”வங்கியின் விருப்பப்படி 200 கிளை இடங்களில் வரிசை முகாமைத்துவ தீர்வை (QMS) வழங்கி, நிறுவி, செயற்படுத்துவதற்கு ஒரு விற்பனையாளரைத் தெரிவுசெய்வதற்கு இலங்கை | QMS முன்னோடியாக 4 கிளைகளில் நிறுவப்பட்டது. முன்னோடி செயற்திட்டத்தின் செயலாற்றலின் அடிப்படையில், வங்கி ஒப்பந்தத்தை முடிவுறுத்தியிருந்தது. | வழிகாட்டலுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கையேடு 2014 இன் 1.2.1 (இ) பிரிவு | வங்கிக்கு உதவும் நோக்கத்திற்காக மாத்திரமே RFP தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மேலே குறிப்பிட்டுள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை சுட்டிக்காட்டுகிறதுடன் உண்மையான எண்ணிக்கை குறிப்பிடப்பட்டவற்றிலிருந்து 25 சதவீதம் வரை மாறுபடலாம்" என வங்கி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. எனினும், 07 வருடங்களுக்கு முன்னர் தெரிவுசெய்யப்பட்ட நான்கு கிளைகளுக்கு மாத்திரம் வரிசை முகாமைத்துவ தீர்வு இயந்திரங்களை நிறுவியிருந்தமையினால் செயற்திட்டத்தின் தேவைப்பாடு 98 சதவீதத்தால் குறைக்கப்பட்டதுடன் 200 கிளைகளில் எஞ்சிய எண்ணிக்கையிலான கிளைகளுக்கு இதுவரை முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், 200 கிளைகளின் தேவைப்பாட்டை 04 கிளைகளாகக் குறைத்ததன் மூலம், குறித்த பிரிவுக்கு முரணாக வங்கி செயற்பட்டுள்ளது. செயற்திட்டப் பணிகளின் நோக்கெல்லை குறைக்கப்பட்டதால், பெறுகையின் அடிப்படை நோக்கங்கள், பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு, "தகுதியுள்ள ஆர்வமுள்ள தரப்பினருக்கு நியாயமான, சமமான மற்றும் அதிகபட்ச வாய்ப்பை வழங்குதல்" மீறப்பட்டுள்ளது. | | |
| (vi) | 2018 ஒக்தோபர் 22 ஆம் திகதிய தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு கூட்டக் குறிப்பு | மேற்கூறிய செயற்திட்டம் வழங்கப்பட்ட போது, வங்கி கம்பனியுடன் வருடாந்த பராமரிப்பு உடன்படிக்கை (AMC) செய்து கொண்டிருக்கவில்லை. முறையான வருடாந்த பராமரிப்பு உடன்படிக்கை | இது ஒரு முன்னோடி செயற்திட்டம் என்பதால், வங்கி வருடாந்த பராமரிப்பு உடன்படிக்கையை (AMC) செய்திருக்கவில்லை. முன்னோடி செயற்திட்டம் | தொடர்புடைய பிரமாணத்துடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இல்லாததன் விளைவாக, முன்னோடி செயற்திட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து வங்கி எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு கம்பனி சரியாக பதிலளித்திருக்காதமை அவதானிக்கப்பட்டது. | தோல்வியடைந்தது. | |
| (vii) | 2019 ஒக்தோபர் 15 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையால் திருத்தப்பட்ட வங்கியின் பெறுகைக் கையேடு 2014 இன் 4.2.2 ஆம் பிரிவு | பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகைக்கும் வங்கியால் பெறுகைக் கால அட்டவணை (PTS) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணம்:- வரிசை முகாமைத்துவ தீர்வு பெறுகை. | இந்த பெறுகை விசேட பெறுகை செயன்முறையாக பணிப்பாளர் சபையால் (BOD) சபையின் கூட்டக்குறிப்பு இல..18.11.2014/1.2.08 (”வெனச” உருமாற்ற பெறுகை செயன்முறையின் கீழ்) அங்கீகரிக்கப்பட்டதால் மேற்கொள்ளப்பட்டது. | தொடர்புடைய பிரமாணத்துடன் இணங்க வேண்டும். |
| (viii) | 2019 ஒக்தோபர் 15 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையால் திருத்தப்பட்ட இலங்கை வங்கியின் பெறுகைக் கையேடு 2014 இன் 4.2.1 (அ, ஆ, இ, மற்றும் ஈ) ஆம் பிரிவு | வங்கியின் பெறுகைக் குழு பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை,<br>- பிரதான பெறுகைத் திட்டத்தை (MPP) தயாரித்தல்,<br>- பெறுகை நடவடிக்கைகள் குறைந்தது மூன்று வருட காலத்திற்கு திட்டமிடப்பட்டுதல்<br>- உடனடியாக அடுத்த ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விரிவாகத் தயாரிக்கப்படுதல்<br>- வழக்கமாக புதுப்பிக்கப்பட்ட MPP இடைவெளிகள் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருத்தல் | எனினும், 2024 முதல் 2026 வரையிலான 03 வருட காலப்பகுதிக்கு MPP தயாரிக்கப்பட்டது. | தொடர்புடைய பிரமாணத்துடன் இணங்க வேண்டும். |
| (ix) | 2019 ஒக்தோபர் 15 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையால் திருத்தப்பட்ட வங்கியின் பெறுகைக் | பிரிவின் பிரகாரம், ஏனைய கேள்விகளின் உள்ளடக்கங்களை வெளிப்படுத்தாமல் அதன் கேள்வியில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டி, வெற்றி பெறாததற்கான காரணங்களை பாதிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு வங்கி தெரிவிக்க வேண்டும். எனினும், | குறித்துக் கொள்ளப்பட்டது.<br>விசேட அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயன்முறையின் கீழ் ”வெனச” செயற்திட்டம் தொடர்பான கொள்வனவுகள்/ செயற்திட்டங்களின் பெறுகைக்காக BOD இன் | தொடர்புடைய பிரமாணத்துடன் இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கையேடு 2014 இன் 8.1.1 (அ) பிரிவு | குறித்த பிரிவின் பிரகாரம் தெரிவு செய்யப்படாத ஏனைய கேள்விதாரர்களுக்கு வங்கி தெரிவித்திருக்காதமை அவதானிக்கப்பட்டது. உதாரணம்:- வரிசை முகாமைத்துவ தீர்வு பெறுகை. | அங்கீகாரம் பெறப்பட்டது. |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) வழங்கிய மதிப்பீட்டு அறிக்கையில் வரி செலுத்த வேண்டிய தொகை ரூபா 5,802 மில்லியன் ஆக இருந்த போதிலும் வங்கியால் மேன்முறையீட்டுச் செயற்பாட்டில் உள்ளதனாலும் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வங்கி ரூபா 2,650 மில்லியனை மாத்திரமே ஏற்பாடு செய்துள்ளது | வங்கியின் ஏடுகளின் பிரகாரம், மதிப்பீடுகள் தொடர்பான வரிப் பொறுப்பு ரூபா 2,638,002,412/- ஆகும். இது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 5,802,010,266/- தொகையுடன் வேறுபடுகின்றது.. உண்மையான வரிப் பொறுப்புக்கு ஏற்ப, வங்கி எந்தவொரு அபராதமும் இல்லாமல் இன்றுவரை நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,656,424,862 ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தது. இருப்பினும், எங்கள் பதிவுகளின் அடிப்படையில் பின்வரும் முரண்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன:<br>• 2019/2020 மதிப்பீட்டு ஆண்டிற்கான நிதிச் சேவைகள் மீதான வற்றிற்கான புதிய மதிப்பீடு 2022 திசெம்பர் 28 இல் வெளியிடப்பட்டதுடன் 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் வெளியிடப்பட்டது. அதன்படி, 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான ரூபா 1,636,147,809/- தொகையான 7501718002 மதிப்பீடு மற்றும் 2019/2020 மதிப்பீட்டு ஆண்டிற்கான ரூபா 858,721,507/- தொகையான 7501920001 மதிப்பீடு போன்றவற்றைத் தவிர்த்து செலுத்த வேண்டிய வரிகளுக்காக இரண்டு மதிப்பீடுகள் கவனக்குறைவாக கருத்தில் கொள்ளப்பட்டது அவதானிக்கப்பட்டது.<br>• மேலும், வங்கி ஏடுகளின் பிரகாரம் 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான வரிப் பொறுப்பு எதுவும் காணப்படாததுடன் IRD ஆனது | IRD உடன் கலந்துரையாடிய பின்னர் நிதிக்கூற்றுக்களில் போதுமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | RAMIS தொடர்பான பதிவுகளை சீர்செய்ய வேண்டியுள்ளது. IRD இடமிருந்து பெற வேண்டிய பிடித்துவைத்தல் வரிக் கடன்கள் தொடர்பாக 2019/2020 மதிப்பீட்டு ஆண்டிற்கான வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் தீர்மானம் நிலுவையிலுள்ளது. மேலும், 2020/2021 ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி பொறுப்பு ரூபா 779,681,406/- குறைக்கப்பட்டதுடன் நிலுவை மீதி ரூபா 404,319,230/- ஆக மாற்றப்பட வேண்டியுள்ளது.<br>• மீள்நிதியிடல் மதிப்பீட்டு இல. ஏன்பீரீஎவ்எஸ்/பீஎவ்எஸ்யூ/2020/632 ஐ கருத்திற்கொண்டு 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்காக இனங்காணப்பட்ட நிதிச் சேவைகள் வரிப் பொறுப்பு மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 9,264,519/- ஆக இருக்க வேண்டும். | |

### 1.9 தகவல் தொழில்நுட்ப பொதுவான கட்டுப்பாடுகள்

### 1.9.1 தகவல் தொழில்நுட்ப பொதுவான கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | .சில பயனர் கணக்குகள் ஐசிபிஎஸ்ஸில் உள்ள ''ரெக்ஸ்'', ஸ்மார்ட் ரெமிட்டன்ஸ் முறைமையில் ''பயனர் பெயர்'', வர்த்தக நிதி அமைப்பு, எம்சிஎஸ் வெளிப்புற அமைப்பு, ஐஎப்ஆர்எஸ் அமைப்பு மற்றும் ஐஆர்எம்எஸ் அமைப்பு மற்றும் ஸ்கை லீஸ் அமைப்பில் ''அதிகாரி ஐடி'' ஆகியவற்றின் அடிப்படையில் நகல் எடுக்கப்பட்டு நிதியாண்டில் செயற்பாட்டில் இருந்தன. | சீராக்கப்பட்டது. | தடுப்பு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றது. |
| (ii) | ஐசிபிஎஸ், ஸ்கை லீஸ், எம்சிஎஸ் அவுட்வர்ட் மற்றும் எம்சிஎஸ் இன்வர்ட் சிஸ்டங்களில் ராஜினாமா செய்த/பரிமாற்றம் செய்யப்பட்ட/ஓய்வுபெற்ற ஊழியர்களின் பயனர் கணக்குகளை சரியான நேரத்தில் செயலிழக்கச் செய்வதில் போதிய நடைமுறைகள் இல்லாததால், வணிகப் பரிவர்த்தனைகளுக்கான பொறுப்புகளை ஒதுக்கும்போது குறிப்பிடத்தக்க சிக்கல்கள் ஏற்படலாம். | சீராக்கப்பட்டது. | தடுப்பு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றது. |
| (iii) | நிகழ்நேரத்தில் தரவைக் கண்காணிக்க, ஒரு தானியங்கு பொறிமுறையாக, வலையமைப்பிற்குள்ளும் வெளியேயும் அனுப்பப்படும் தரவை நிர்வகிப்பதற்கும், | டீஎல்பீ முகவர் வெளியீடு முடிந்தது. மின்னஞ்சல் | டீஎல்பீ தீர்வு தேவைப்படுகின்றது. |

இரகசியத் தரவு இருப்பதை உறுதி செய்வதற்கும் நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அங்கீகரிக்கப்படாத தரப்பினருக்கு அனுப்பப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கும் தரவு இழப்பு தடுப்பு (டீஎல்பீ) தீர்வை வங்கி பயன்படுத்துவதில்லை.

ஒருங்கிணைப்பு செயலில் உள்ளது.
**முடிக்கவேண்டிய இலக்கு திகதி:** 31.12.2024

(iv) வங்கி பின்வரும் தரவுத்தள முகாமைத்துவ முறைமையின் பதிப்பைப் பயன்படுத்துகிறது, இது இறுதி ஆதரவு (ஈஓஎஸ்) உத்தரவாத விதிமுறைகளில் உள்ளது, இதற்காக சேவை வழங்குநரிடமிருந்து பாதுகாப்பு புதுப்பிப்புகள்/பேட்ச்கள் (patches) எதுவும் இருக்காது.

பதிப்பு (version) ஏற்கனவே நிலையான ஆதரவின் முடிவில் இருப்பதால், அசல் உபகரண உற்பத்தியாளரால் (ஓஈஎம்) பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான பாதுகாப்பு புதுப்பிப்புகள்/பேட்ச்கள் எதையும் வழங்க முடியாது. இதன் காரணமாக பாதிப்புகள் திறந்த நிலையில் இருக்கக்கூடும், இது தீங்கிழைக்கும் தாக்குபவர்கள் அல்லது ஊடுருவும் நபர்களால் பயன்படுத்தப்படலாம்.

| **ஐரீ முறைமை** | **பதிப்பு** | **உதவித் திகதி முடிவு (DD/MM/YYYY)** |
|---|---|---|
| பினாகெல் திறைசேரி<br>ஸ்கை குத்தகை<br>பிறைம்4<br>இன்ரனெற் வங்கியல்<br>ஜஎப்ஆர்எஸ்<br>ஐஆர்எம்எஸ்<br>எம்சீஎஸ் உள்வருகை | ஓராகல் 11g | 31/12/ 2020 |
| எம்சீஎஸ் வெளிவாரி<br>எச்சீஎம் | ஏம்எஸ் எஸ்கியூஎல் 2016 | 13/07/2021 |
| நோரிவா | ஓராகல் 12சீ | 31/07/2022 |

- **பினாகெல் திறைசேரி** பினாகெல் திறைசேரி நாளதுரையாக்கல் செயன்முறையிலுள்ளது.

***முடிவுறுத்துவதற்கான இலக்குத் திகதி:*** *30*.06.2025

- **ஸ்கை லீஸ்** நாளதுவரையாக்கும் செயன்முறை ஏற்கனவே தொடங்ககப்பட்டதுடன் இது தற்போது யூஏரீ கட்டத்திலுள்ளது.

***முடிவுறுத்துவதற்கான இலக்குத் திகதி:*** 31.12.2024

- **பிறைம் 4** தற்போதைய அமைப்பை அதன் சமீபத்திய பதிப்பிற்கு மேம்படுத்துவது குறித்து நிர்வாகம் மற்றும் விற்பனையாளர் ஆகிய இருவருடனும் கலந்துரையாடல்களைத் தொடங்கினார். 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் இப்பணி நிறைவடையும்.
- **இலத்திரனியல் வங்கி** தற்போது நாங்கள் இணையம் மற்றும் மொபைல் வங்கி முறைக்கான புதிய தீர்வைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். எனவே, புதிய நடைமுறைக்கு பிறகு தற்போதைய அமைப்பு நிறுத்தப்படும்.

***முடிவுறுத்துவதற்கான***

முடிந்தளவு நாளதுவரையாக்கல் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | ***இலக்குத் திகதி:*** **15.12.2024 (சில்லறைத் தொகுதிக்காக)**<br>• **ஜஎப்ஆர்எஸ்/ஜரேஎம்எஸ்**<br>நாங்கள் விற்பனையாளரிடம் தெரிவித்துள்ளோம் மற்றும் டீபீ பதிப்பை ஒராகல் 19சீ க்கு மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம்.<br>• **எம்சீஎஸ் உள்வருகை**<br>ஒராகல் 19சீ க்கு மேம்படுத்தப்படும். டிசம்பர் 2024 இறுதிக்குள் பணி முடிக்கப்படும்.<br>• **எம்சீஎஸ் வெளிவாரி**<br>MS SQL 2016 ஆனது திசெம்பர் 2024 இன் இறுதியில் MS SQL 2019 ஆக மேம்படுத்தப்படும்.<br>• **எச்சீஎம்**<br>விற்பனையாளருடன் தரவுத்தள இடம்பெயர்வு செயல்முறை நடைபெறுகிறது.<br>***முடிவுறுத்துவதற்கான இலக்குத் திகதி::*** 31/12/2024<br>• **நோரிவா**<br>ஓறாகல் தரவுத்தள பதிப்பை (19சீ) டெக்னாலஜி ஸ்டேக் மற்றும் அதன் இணக்கத்தன்மை மெட்ரிக்ஸை உறுதிப்படுத்திய பிறகு மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.<br>***முடிவுறுத்துவதற்கான இலக்குத் திகதி::*** 30.06.2025 | |
| (v) | **காலாவதியான இயக்க முறைமைகள் - ஸ்கை லீஸ், பிரைம்4 மற்றும் /பினாகல் திறைசேரி முறைமை** | • **ஸ்கை லீஸ்**<br>நாளதுவரையாக்கும் | முடிந்தளவு நாளதுவரையாக்கல் |

| | | |
|---|---|---|
| வங்கியானது பின்வரும் இயக்க முறைமைகளின் பதிப்பைப் பயன்படுத்துகிறது, இது இறுதி ஆதரவு (ஈஓஎஸ்) உத்தரவாத விதிமுறைகளில் உள்ளது, இதற்காக சேவை வழங்குநரிடமிருந்து பாதுகாப்பு புதுப்பிப்புகள்/ இணைப்புகள் எதுவும் இருக்காது. பதிப்பு ஏற்கனவே நிலையான ஆதரவின் முடிவில் இருப்பதால், அசல் உபகரண உற்பத்தியாளரால் (ஓஈஎம்) பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான பாதுகாப்பு புதுப்பிப்புகள்/பேட்ச்கள் எதையும் வழங்க முடியாது. இதன் காரணமாக பாதிப்புகள் திறந்த நிலையில் இருக்கக்கூடும், இது தீங்கிழைக்கும் தாக்குபவர்கள் அல்லது ஊடுருவும் நபர்களால் பயன்படுத்தப்படலாம். | செயன்முறை ஏற்கனவே தொடங்ககப்பட்டதுடன் இது தற்போது யூஏரீ கட்டத்திலுள்ளது.<br>***முடிவுறுத்துவதற்கான இலக்குத் திகதி::*** 31.12.2024<br>• **பிறைம்4**<br>தற்போதைய அமைப்பை அதன் சமீபத்திய பதிப்பிற்கு மேம்படுத்துவது குறித்து நிர்வாகம் மற்றும் விற்பனையாளர் ஆகிய இருவருடனும் கலந்துரையாடல்களைத் தொடங்கினார். 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் இப்பணி நிறைவடையும். | பூர்த்திசெய்யப்பட வேண்டும். |

| ஐரீ முறைமை | பதிப்பு | உதவித் திகதி முடிவு (DD/MM/YYYY) |
|---|---|---|
| ஸ்கை லீஸ் | ஓறாகல் லினுக்ஸ் 5.6 | 06/07/2022 |
| பிறைம்4 | வின்டோஸ் சேவர் 2008 ஆர் 2 | 14/01/2020 |

### 1.9.2 மாலைதீவு கொடுப்பனவு முறைமை அபிவிருத்தி (எம்பீஎஸ்பீடீ) செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) மாலைதீவில் உடனடி கட்டண முறையை நிறுவும் நோக்கத்துடன் மாலைதீவு கண்காணிப்பு அதிகாரசபையால் (எம்எம்ஏ) மாலைதீவு கொடுப்பனவு முறைமை அபிவிருத்தி (எம்பீஎஸ்பீடீ) செயற்திட்டம் தொடங்கப்பட்டது. பெறுகைச் செயல்முறைக்குப் பிறகு இந்த திட்டத்தை செயல்படுத்த வங்கி ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தது. கோரிக்கை கடிதம் வழங்கப்பட்ட 06 மாதங்களுக்குப் பிறகு 05 ஜூலை 2022 அன்று வங்கி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. | இணங்கப்பட்டது. கோரிக்கைக் கடிதத்தை எபிக் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் 14.12.2021 இல் ஏற்றுக்கொண்டது. கோரிக்கைக் கடிதத்தின் உட்பிரிவுகளின்படி மேற்கூறிய ஏற்றுக்கொள்ளலுடன் வங்கிக்கும் எபிக் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கும் இடையே ஒரு சட்ட ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. எம்எம்ஏ ஆனது ஆரம்ப நோக்கத்தில் அவ்வப்போது செய்த மாற்றங்கள் மற்றும் வங்கி மற்றும் விற்பனையாளர், எபிக் | உரிய பெறுகைச் செய்முறையுடன் இணங்க வேண்டும். |

லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் சட்டத் துறை மற்றும் தொடர்புடைய வணிகப் பிரிவின் கருத்துக்கள் உள்ளிட்ட உள்ளக நடவடிக்கைகள் காரணமாக, ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது.. இருப்பினும், ரெகுலேட்டரின் (எம்எம்ஏ) அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, கோரிக்கைக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட பிறகு திட்டம் தொடங்கப்பட்டது.

(ii) கேள்வி ஆவணத்தின் ஒப்பந்தத் தரவு (பிரிவு VII) படி, கொள்வனவு கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து 02 மாதங்களுக்குள் மென்பொருள் செயற்படுத்தல் முடிக்கப்பட வேண்டும். ஆனால், செயற்திட்டத்தை தொடங்குவதற்கு முன்னர் கேள்விதாரர் வங்கிக்கு வழங்கிய செயற்திட்டத் திட்டத்தின்படி, இந்த செயற்திட்டத்தை முடிக்க 156 நாட்கள் (சுமார் 05 மாதங்கள்) எடுக்கும் என்று கூறப்பட்டது.

விற்பனையாளர் பீஜடி ஆவணத்துடன் 59 நாட்களுக்கான செயற்திட்ட திட்டத்தைச் சமர்ப்பித்திருந்த போதிலும், கொவிட் 19 இன் தாக்கம் மற்றும் திட்ட நோக்கத்தில் செய்யப்பட்ட பல மாற்றங்கள் காரணமாக விற்பனையாளருடன் வங்கியின் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தாமதமானது. மாலைதீவு நாணய அதிகாரசபை விற்பனையாளர் 05.07.2022 அன்று ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது 156 நாட்களுக்கு எம்எம்ஏ இன் புதுப்பிக்கப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்வதற்காக திருத்தப்பட்ட திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

| | | |
|---|---|---|
| (iii) | கேள்வி ஆவணத்தின் ஒப்பந்தத் தரவின் (பிரிவு VII) படி, செயலாற்றல் பிணையின் தொகை ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதமாக இருக்க வேண்டும், மேலும் கம்பனி வங்கிக்கு சமர்ப்பித்த செயலாற்றல் பிணை 2023 ஏப்ரல் 10 இல் காலாவதியானது. அதன்படி, செயலாற்றல் பிணை காலாவதியாகி 17 மாதங்களுக்கு மேலாகியும் வங்கி புதுப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணையை பெற்றிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. வங்கி அவ்வப்போது விற்பனையாளருக்கு நினைவூட்டல்களை அனுப்பியுள்ளது. செயற்திட்டம் முடிந்த பிறகு விற்பனையாளர் முழுப் பணத்தையும் கோரியிருந்த போதிலும் கொடுப்பனவு மைல்கற்களின் படி மொத்த ஒப்பந்த மதிப்பில் 30% மாத்திரமே வங்கி செலுத்தியுள்ளது. |
| (iv) | எபிக் லங்கா (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக மற்ற துறைகளுடன் தொடர்புடைய விசாரணையின் காரணமாக, திட்ட மேம்பாட்டிற்காக இந்த நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக 29 அக்டோபர் 2021 திகதியிட்ட கடிதம் மூலம் வங்கி ஐசீரீஏ விடம் ஆலோசனை கேட்டிருந்தது. அதன்படி, பொது நிதித் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஐசீரீஏ 16 நவம்பர் 2021 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பதிலளித்தது. எவ்வாறாயினும், வங்கி அதற்கேற்ப பொது நிதித் திணைக்களத்திடம் ஆலோசனை கேட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | இணங்கப்பட்டது. |
| (v) | ஒப்பந்தங்களின் நிபந்தனைகளின் பிரிவு 23 (பிரிவு VI) ஏல ஆவணத்தின்படி, ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட பொருட்கள் உற்பத்தி அல்லது கையகப்படுத்தல், போக்குவரத்து, சேமிப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றில் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக முழுமையாக காப்பீடு செய்யப்படும். எவ்வாறாயினும், நிறுவனம் அத்தகைய காப்புறுதியைப் பெறவில்லை மற்றும் வங்கி அதைப் பின்பற்றவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. |
| (vi) | மேலும், வங்கியின் பெறுகைக் கையேடு 2014 இன் 8.1.1 (அ) பிரிவின் படி, மற்ற கேள்விகளின் உள்ளடக்கங்களை வெளியிடாமல் அதன் கேள்வியில் குறிப்பிட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டி, வெற்றி பெறாததற்கான காரணங்களை பாதிக்கப்பட்ட கேள்விதாரருக்கு வங்கி தெரிவிக்க வேண்டும். எவ்வாறாயினும், அதற்கேற்ப பரிசீலிக்கப்படாத மற்ற கேள்விதாரர்களுக்கு வங்கி அறிவிக்கவில்லை | இணங்கப்பட்டது. |

என்பது அவதானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (vii) | 18 ஆகஸ்ட் 2022 தேதியிட்ட எண் எம்ஜஎஸ்/2022/1678 என்ற கடிதத்தின்படி, எம்எம்ஏ ஆல் குறிப்பிடப்பட்ட திட்டத்தின் அப்ளிகேஷன் புரோகிராமிங் இன்டர் பேஸ் (ஏபீஜகள்) மேம்பாடு 2022 செப்தெம்பர் 20 இற்குள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், எம்எம்ஏ வழங்கிய காலக்கெடுவை வங்கியால் சந்திக்க முடியவில்லை. 06 நவம்பர் 2022 அன்று அறிவிப்பு இல். எம்ஜஎஸ்/2022/2153 இன் படி எம்பீஆர் 95,000 (95,000*23.348=ரூபா 2,218,060) செலுத்தப்பட்டது மற்றும் 06 ஒக்தோபர் 2022 ஆம் திகதிய எம்எம்ஏ இன் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத காரணத்தால் சபையின் முன் அனுமதி இருக்கவில்லை. | திருத்தப்பட்டது பீஓடி இன் மேவுகை அனுமதி 08.11.2023 இல் பெறப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 26,694 மில்லியன் தொகையான இலாபம் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 31,972 மில்லியனாக தொகையாகக் காணப்பட்டது. எனவே, நிதி விளைவுகளில் ரூபா. 5,278 மில்லியன் குறைவொன்று காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விளக்கம் | வேறுபாடு தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா. மில்லியன்) | வேறுபாடு % | வேறுபாடுட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 68,530 | 15 | மதிப்பாய்வின் கீழ் உள்ள நிதியாண்டில், வங்கியின் கடன்கள் மற்றும் முன்பணங்களின் போர்ட்∴போலியோ ஓரளவு சரிவைச் சந்தித்தது, அதே நேரத்தில் வட்டி விகிதங்களில் குறிப்பிடத்தக்க குறைவு இருந்தது. இந்த போக்குகள் இருந்தபோதிலும், கடன்கள் மற்றும் முன்பணங்களிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் அதிகரித்துள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது. இந்த ஏற்றம் முதன்மையாக தடைக்காலம் காலாவதியாதல் காரணமாக இருக்கலாம்.<br>அரசுக்கு சொந்தமான நிதி நிறுவனமாக, எங்கள் கடன் இலாகாவின் கணிசமான பகுதி இந்த தடைகளுக்கு உட்பட்டது. இந்த நிவாரண நடவடிக்கைகளின் முடிவு வட்டி வருமானத்தில் மீண்டும் எழுச்சிக்கு வழிவகுத்தது.<br>கடன் நிலுவைகளில் ஒட்டுமொத்த சுருக்கம் இருந்தாலும், அடகு தரகு சேவைகள் மற்றும் கிரெடிட் கார்டு வசதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | போன்ற உயர்-வட்டி தயாரிப்புகளின் இருப்புகளில் வங்கி வளர்ச்சியைக் கண்டது. இந்தக் காரணிகள் கூட்டாக அந்தக் காலத்திற்கான வட்டி வருமானத்தை உயர்த்த பங்களித்தன. |
| வட்டி செலவு | 103,689 | 31.4 | வங்கியின் வட்டிச் செலவு பெரும்பாலும் நிலையான வைப்புத்தொகை வைத்திருப்பவர்களுக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளைக் கொண்டது. ஆண்டு முழுவதும் வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்ட போதிலும், வங்கி வட்டிச் செலவுகளில் அதிகரிப்பை சந்தித்தது, முதன்மையாக பின்வரும் காரணங்களால்.<br>2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் பிற்பகுதியில், இலங்கை வங்கி 100 முதல் 400 நாட்கள் வரையிலான காலவரையறையுடன் புதிய நிலையான வைப்பு வகைகள் அறிமுகப்படுத்தியதுடன் இது வாடிக்கையாளர்களுக்கு கணிசமாக அதிக வட்டி விகிதங்களை வழங்குகிறது. எங்கள் வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் 300 மற்றும் 400 நாட்களுக்கு நிலையான வைப்புத் தொகையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த வைப்புத்தொகைகளுடன் தொடர்புடைய வட்டிச் செலவுகள் 2022 ஆம் ஆண்டின் நிதிநிலையைப் பாதித்தது மட்டுமல்லாமல் 2023 ஆம் ஆண்டுக்கு கொண்டு செல்லப்பட்டன. இதன் விளைவாக, வங்கியின் வட்டிச் செலவுகள் அதிகரிக்க வழிவகுத்தது. |
| குறைபாடு கடன் கட்டணம்/ (பதிவழித்தல்) மற்றும் பிற இழப்புக்கள் | (92,061) | (105.6) | உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு கொள்கைக்கு இணங்க, இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு நாணய மதிப்பிலான கடன்களை இலங்கை ரூபாயாக (LKR) மாற்றியமைத்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், இலங்கை வங்கி (BOC) அதன் வெளிநாட்டு நாணய வங்கி அலகு (FCBU) USD மதிப்பிலான கடன்களை LKR ஆக மாற்றுவதற்கு அரசாங்கத்துடன் ஒரு உடன்பாட்டை எட்டியது.<br>இந்த மாற்றமானது, இந்தக் கடன்களுக்காக முன்னர் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் கணிசமான மாற்றத்திற்கு வழிவகுத்தது<br>இந்த ஒப்பந்தம் மற்றும் அடுத்தடுத்த மாற்றத்தின் விளைவாக, நடப்பு ஆண்டிற்கான குறைபாடு கட்டணத்தை மாற்றியமைப்பதை வங்கி அங்கீகரித்துள்ளது. இந்த சரிசெய்தல் குறைக்கப்பட்ட கடன் அபாயத்தை பிரதிபலிக்கிறது மற்றும் அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு முயற்சியைத் தொடர்ந்து கடன் போர்ட்∴போலியோவின் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீட்டுடன் சீரமைக்கிறது. |
| நிகர ஏனைய செயற்பாட்டு வருமானம் | (21,743) | (132.7) | 2022 முதல் 2023 வரையிலான நிகர ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் குறிப்பிடத்தக்க குறைவு பல காரணிகளால் கூறப்படலாம்:<br>1. வர்த்தகத்திலிருந்து நிகர இலாபங்கள்/(இழப்புகள்) கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டது, இது ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த குறைவு முதன்மையாக மாற்று விகிதங்களின் சரிவு காரணமாகும், இது வெளிநாட்டு |

நாணயங்களின் குறைந்த மதிப்பீட்டிற்கு வழிவகுத்தது.

2. இலாபம் அல்லது நஷ்டம் மூலம் நியாயமான மதிப்பில் நிதிக் கருவிகளிலிருந்து நிகர நியாயமான மதிப்பு ஆதாயங்கள்/(இழப்புகள்) இந்த வருடத்தில் பங்குகள் மற்றும் யூனிட் டிரஸ்ட்களின் சந்தை மதிப்பு குறைந்ததால் இந்த சரிவு ஏற்பட்டது.

3. நிகர ஏனைய செயற்பாட்டு வருமானம்: 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மறுமதிப்பீட்டு இழப்புகளின் காரணமாக, நிகர ஏனைய செயற்பாட்டு வருமானத்தின் வகையும் சரிவைச் சந்தித்தது.

## 2.3 விகித பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட துறை விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய வருடத்திற்கான வங்கியின் சில முக்கியமான விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **விபரம்** | **துறை விகிதம் *** | **வங்கி** | |
|---|---|---|---|
| | | **2023** | **2022** |
| **செயல்திறன் விகிதங்கள்** | | | |
| ஈக்விட்டியில் வருமானம் (ROE) | 10.9 | 10.6 | 14.1 |
| சொத்துகளின் மீதான வருவாய் (ROA) | 1.0 | 0.9 | 0.8 |
| வட்டி எல்லை விகிதம் | 3.1 | 2.1 | 3.1 |
| **சொத்துகளின் தர விகிதம்** | | | |
| **போதுமான மூலதன விகிதங்கள்** | | | |
| Tier 1 மூலதனம் (குறைந்தபட்சம் 10%) | 13.1 | 12.41 | 12.4 |
| மொத்த மூலதனம் (குறைந்தபட்சம்14%) | 16.7 | 15.38 | 15.4 |
| **சட்டப்பூர்வ விகிதம் (குறைந்தபட்சத் தேவை 20%)** | | | |
| திரவ சொத்து விகிதம் (உள்நாட்டு) | 33.8 | 42.8 | 21.2 |

* இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட வருடாந்த புள்ளிவிபரங்களிலிருந்து துறை விகிதங்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

**கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை**

**கணக்காய்வு விடயம்**

(i) உண்மையான இழப்புகள் மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இடர் நிலை வகைப்படுத்தலுடன் செய்யப்பட்ட இழப்புகளுக்கான ஒதுக்கீடுகள் பின்வருமாறு

| | ஆண்டு 2023 | | ஆண்டு 2022 | |
|---|---|---|---|---|
| இழப்பு நிகழ்வு | மொத்த பதிவழிக்கப்பட்ட இழப்பு /ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | மொத்த இழப்பு நிகழ்விலிருந்து சதவீதம் (%) | மொத்த பதிவழிக்கப்பட்ட இழப்பு /ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | மொத்த இழப்பு நிகழ்விலிருந்து சதவீதம் (%) |
| வணிக சீர்குலைவு மற்றும் கணினி தோல்விகள் | 11,983,450 | 14.12 | 607,041 | 0.07 |
| வாடிக்கையாளர்கள், தயாரிப்பு மற்றும் வணிக நடைமுறைகள் | 51,796,510 | 61.03 | 7,962,567 | 0.98 |
| செயல்படுத்தல், விநியோகம் மற்றும் செயல்முறை முகாமை | 13,024,994 | 15.35 | 730,758,809 | 89.86 |
| வெளிப்புற மோசடி | 7,115,068 | 8.38 | 6,149,982 | 0.76 |
| உள்ளக மோசடி | 945,598 | 1.11 | 67,776,684 | 8.33 |
| **மெத்தம்** | **84,865,620** | | **813,255,083** | |

மேற்கண்ட விவரங்களின்படி, 2022 ஆம் ஆண்டில் மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உயர் நீதிமன்ற வழக்குகளுக்கு கூடுதல் ஏற்பாடுகளைச் செய்யாததால், 2023 ஆம் ஆண்டில் மொத்த உண்மையான இழப்புகள் மற்றும் இழப்புகளுக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. வணிக சீர்குலைவு மற்றும் சிஸ்டம் தோல்விகளால் ஏற்படும் இழப்புகள், வாடிக்கையாளர் தயாரிப்பு மற்றும் வணிக நடைமுறைகள் முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் கணிசமாக அதிகரித்துள்ளது.

M/S வாலுட்ரான்ஸ் ஸ்பா -இத்தாலி இன் யூரோ கணக்கு இல. 9575777 இல் தற்காலிக மேலதிக பற்று

**முகாமைத்துவ கருத்துரை**

அறிக்கையிடப்பட்ட இழப்புகளுக்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன மற்றும் அந்தந்த பொதுப் பேரேடு கணக்குகளில் பதிவுசெய்யப்பட்ட தள்ளுபடிகள் அந்தந்த குழுக்களின் பரிந்துரையுடன் செய்யப்பட்டுள்ளன. அறிக்கையிடப்பட்ட சில இழப்புகள்/விதிமுறைகள் விசாரணை அறிக்கைகள் மற்றும் காப்பீட்டுக் கோரிக்கைகளின் முடிவுக்கு உட்பட்டது.

காப்பீட்டு கோரிக்கைகள்.

குறிப்பிட்ட இழப்பை தள்ளுபடி செய்த பின்னரும் வங்கி மீட்பு செயல்முறையை மேற்கொண்டு வருகிறது. கூடுதலாக, வங்கிக்குள் சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்காக கட்டுப்பாடுகள் அமைக்கப்பட்டுள்ள.

**<u>M/S. Valutrans Spa உடன் நிலுவைத் தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.</u>**

அந்த நிறுவனத்திற்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வங்கி நடவடிக்கை எடுத்து வருகிறது.

சட்ட நடவடிக்கைகளைத் தொடங்க இத்தாலியைச்

**பரிந்துரை**

உள் கட்டுப்பாட்டு நடைமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் மற்றும் அவற்றின் இணக்கத்தை கண்காணிக்க பொறிமுறை தேவை.

| | | | |
|---|---|---|---|
| | வட்டியாக திரட்டப்பட்ட EUR 125,000 ஐத் திரும்பப் பெறுவதற்காக ரூபா.44.806 மில்லியன் செய்யப்பட்ட முக்கிய ஒதுக்கீடு. வாடிக்கையாளர்கள், தயாரிப்பு மற்றும் வணிக நடைமுறைகளின் இழப்பு நிகழ்வின் கீழ் வகைப்படுத்தப்பட்டன. Valutrans Spa 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கை வங்கியின் பணம் அனுப்பும் பங்குதாரராகவும், இத்தாலியில் செயல்படும் ஒரே ஒரு பரிமாற்ற நிறுவனமாகவும் உள்ளது. Valutrans Spa இன் 9575777 என்ற கணக்கில் 2023 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதியின்படி ERU.993,924.53 அதிகமாக இருந்தது மற்றும் நிறுவனம் 31 மார்ச் 2023 அன்று தங்கள் வணிகத்தை நிறுத்திவிட்டது. நீண்ட காலமாக நிறுவனத்துடன் பரஸ்பர நன்மை பயக்கும் பிரத்தியேக உறவை அங்கீகரித்து, நிறுவனத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, EUR கணக்கு எண். 9575777 இல் திரட்டப்பட்ட EUR 125,000 ஐ தற்காலிக மேலதிக பற்று வட்டியை திருப்பித் தர நிறுவனத்தின் சபை குறிப்பு இல: 28.07.2023/2.18 திகதி 28 ஜூலை 2023 மூலம் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைத் தவிர, வணிகச் சீர்குலைவு மற்றும் முறைமை தோல்விகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கோர் பேங்கிங் முறையின் காலமுதிர்வு காரணமாக தோல்வியுற்ற CEFT நடவடிக்கைகளுக்கு ரூபா.10.549 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது மற்றும் 2023 ஆம் வருடத்தில் ஏற்பட்ட இழப்பு நிகழ்வுகளுக்காக ரூபா.7.076 மில்லியனை கவரிங் /போலி தங்கப் பொருள் மறுசீரமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. | சேர்ந்த ஒரு சட்ட நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.<br><br>**<u>தோல்வியுற்ற CEFT நடவடிக்கைகளுக்கான ஏற்பாடு</u>**<br><br>▪ மீட்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மீட்பதற்கான நிலுவைத் தொகை தற்போது ரூபா.10,108,136.94 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.<br>▪ நிலுவைத் தொகையை மீட்பதற்காக காப்பீடுகள் பதிவு செய்யப்பட்டு அது நடந்து கொண்டிருக்கிறது.<br>▪ இந்தச் சிக்கலைச் சரிசெய்ய 28.04.2023 அன்று ஒரு திருத்தம் பயன்படுத்தப்பட்டது, அதன் பிறகு அத்தகைய நடவடிக்கைகள் மீண்டும் நிகழவில்லை. | |
